ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2235/54 - 2021 ජූලි මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.07.08
2235/ 54 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்**

தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 8 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 21 ஆவது பிரிவின் கீழ், 1986.03.10 ஆந் திகதியுடைய இல. 392/ 9, 1994.06.01 ஆந் திகதிய இல. 821/ 19, 1996.08.06 ஆந் திகதிய இல. 935/ 6, 1999.02.24 ஆந் திகதிய இல. 1068/ 13, 2006.08.23 ஆந் திகதிய இல. 1459/ 20, 2008.02.27 ஆந திகதிய இல. 1538/ 24, 2008.06.27 ஆந் திகதிய இல. 1555/ 32, 2009.04.17 ஆந் திகதிய இல. 1597/ 8, 2009.05.30 ஆந் திகதிய இல. 1603/ 53, 2011.04.12 ஆந் திகதிய இல. 1701/ 13 இன்கீழ் வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிடங்கள் ஆணை/ விதிமுறைகள் (பொது), இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மீண்டும் இரத்துச் செய்யப்பட்ட புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை/ ஒழுங்கு விதிமுறைகள் ஆகும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2021, யூலை 05.

1A - G 34600 — 60 (2021/07)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்**

*தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 21 வது பிரிவுடன், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த) சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2021, யூலை 05.*

ஒழுங்குவிதிகள்

1. *இவ்வொழுங்குவிதிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விதிகள் - 2021 எனக் குறிப்பிடப்படலாம்.*

2. *இவ்வொழுங்குவிதிகளின் மூலம் 1986.03.10 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமான அறிவித்தல் 392/ 9 ஆம் இலக்க, 1994.06.01 ஆந் திகதியிடப்பட்ட 821/19 ஆம் இலக்க, 1996.08.06 ஆந் திகதியிடப்பட்ட 935/ 6 ஆம் இலக்க, 2009.04.17 ஆந் திகதியிடப்பட்ட 1597/ 8 இலக்க, 1999.02.24 ஆந் திகதியிடப்பட்ட 1068/13 ஆம் இலக்க, 2006.08.23 ஆந் திகதியிடப்பட்ட 1459/20 ஆம் இலக்க, 2008.02.27 ஆந் திகதியிடப்பட்ட 1538/24 ஆம் இலக்க, 2008.06.27 ஆந் திகதியிடப்பட்ட 1555/ 32 ஆம் இலக்க, 2009.04.17 ஆந் திகதியிடப்பட்ட 1597/ 08 ஆம் இலக்க, 2009.05.30 ஆந் திகதியிடப்பட்ட 1603/ 53 ஆம் இலக்க, 2011.04.12 ஆந் திகதியிடப்பட்ட 1701/13 ஆம் இலக்க வர்த்தமான பத்திரிகைகள் இந்தத் திகதியிலிருந்து இரத்து செய்யப்பட்டு இவ்வொழுங்குவிதிகளால் மாற்றப்படுகின்றது.*

3. *இந்த ஒழுங்குவிதிகள், வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து, அனைத்து நகர அபிவிருத்தி பகுதிக்கும் பிரயோகிக்கப்படலாம்.*

பகுதி I

**பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு**

1.

(1) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (ந.அ.அ.ச சட்டம்) பிரிவு 29 மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு (பூ.தி.சி ) அபிவிருத்தியாளரின் அல்லது அவரின் முகவரின் கோரிக்கைக்கு அமைய நகர அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்படும்.

(2) திட்டமிடல் சிபாரிசானது எழுத்து மூலமாக இருக்க வேண்டும் என்பதோடு நில அளவைப்படம், தொடர்புடைய அபிவிருத்தித் திட்டம், குறிப்பிட்ட அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விதிகள் மற்றும் தொடர்புடைய அரச நிறுவனங்களிலிருந்து பெறப்பட தேவையான அனுமதிகள் மற்றும் காலத்துக்கு காலம் அரசாங்க அதிகாரசபைகளால்/ நிறுவனங்களால் விதிக்கப்படும் வேறு நிபந்தனைகளையும் உள்ளடக்கிக் காணப்படும்.

(3) எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் "அதிகார சபையிலிருந்து" கீழே பரிந்துரைக்கப்பட்டதன்படி பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு பெறப்படல் வேண்டும்.

அ. 01.0 ஹெக்ரெயர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு காணி உபபிரிவிடுகை அல்லது ஒருங்கிணைத்தல் ;

ஆ. எட்டிற்கு (8) மேற்பட்ட காணி துண்டுகளைக் கொண்ட எந்தவொரு காணி உப பிரிவிடுகை ;

இ. எந்தவொரு வதிவிட அபிவிருத்தியும் தளப்பரப்பளவில் 1,000 சதுர மீற்றர் அல்லது உயரத்தில் 15 மீ ;

ஈ. எந்தவொரு வதிவிடமல்லாத அபிவிருத்தியும் தளப்பரப்பளவில் 400 சதுர மீற்றரை ;

உ. பாதுகாப்பதற்கென பிரேரிக்கப்பட்ட பகுதிகளான வரலாற்று மற்றும் தொல்பொருள் கட்டடக்கலை, அழகியல் மற்றும் சுற்றுச்சூழல் கூருணர்வாக்க/ உணர்திறன் பகுதிகள் அல்லது வனவிலங்கு மற்றும் காடுகள் ஒதுக்கீட்டிடங்களுக்கு, அருகாமையில் அமைந்துள்ள நில உபபிரிவிடுகை, ஒரு கட்டடத்தின் கட்டுமானம், தற்போதைய பயன்பாட்டின் மாற்றம், அழிப்பு போன்றவற்றை உள்ளடக்கிய எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கையும் ;

ஊ. 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் பகுதி IV (இ) மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் 25.01.2008 இன் அதி விசேட வர்த்தமானி இலக்கம் 1533/16 இன் மற்றும் அதன் திருத்தங்கள் ஆகியவற்றின் கீழ் ஒப்புதல் தேவைப்படும் எந்தவொரு தொழில்துறை அபிவிருத்தித் திட்டங்களுக்கும்

எ. நீர்த்தாங்கி கோபுரங்கள், தகவல் தொடர்பு கோபுரங்கள், உணர்கொம்பு (antenna) கோபுரங்கள், பரிமாற்றக் கோபுரங்கள் போன்ற கட்டுமானங்களுக்கு ;

ஏ. மண் அல்லது வேறு கனிம சுரங்க அகழ்வுகள் தொடர்பான எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் ;

ஐ. திட்டமிடல் குழுவால் அவசியமானதாகக் கருதப்படும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும்.

(4) எந்தவொரு அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ள முனைவாராயின் இந்த ஒழுங்குவிதிகளின் **அட்டவணை 1 இன் படிவம் "அ"** யின் படி குறித்த அதிகாரசபைக்கு தமது விண்ணப்பத்தினை **பின்னிணைப்பு** I **மற்றும்** II இல் குறிப்பிடப்பட்டதற்கமைய எழுத்துமூல பிரகடனத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) குறித்த விண்ணப்பத்தினை தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன் மின்னணு மூலம் அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கலாம்.

(6) குறித்த விண்ணப்பங்களுக்காக, விண்ணப்பதாரிகளால் செலுத்தப்பட வேண்டிய விண்ணப்ப கட்டணங்களாவன ; இந்த ஒழுங்கு விதியின் **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்டதன் படி செலுத்தப்படல் வேண்டும். மொத்த கட்டணமானது, பத்தாயிரம் (ரூ.10000/-) ரூபாவை விட அதிகரிக்குமாயின், ஆரம்ப கட்டணமாக ரூ. 5000/- செலுத்தி, மிகுதி கட்டணத்தினை பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசினைப் பெற்றுகொள்வதற்கு முன்னர் செலுத்தலாம்.

(7) அனுமதியானது, மத ஸ்தலங்கள் அல்லது அரச குறைந்த வருமான வதிவிட செயற்றிட்டங்கள் போன்ற அபிவிருத்திகளுக்காக கோரப்படுமிடத்து, அதிகார சபையானது திட்டமிடல் அனுமதிக்கான கட்டணங்களை பகுதியாகவோ/ முழுமையாகவோ தவிர்த்து, அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், நிர்வாக செலவுகளுக்கான கட்டணங்களை மட்டும் அறவிடலாம்.

*2.*

*(1) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நலனையும், விண்ணப்பதாரர் வழங்கிய தேவையான ஆவணங்களையும் கருத்தில் கொண்டு, நிபந்தனைகளுக்கு உட்பட்டு குறித்த விண்ணப்பதாரருக்கு அதிகாரசபையானது பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசினை வழங்கலாம். எவ்வாறாயினும், அபிவிருத்தியின் அளவை அடிப்படையாகக்கொண்டு, மேலதிக நிபந்தனைகளை விதிக்கும் நோக்கோடு அதிகாரசபைக்கு அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் குறித்த விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு, தேவையென கருதும் மேலதிக விபரங்களை வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருப்பார்.*

*(2) இவ்வொழுங்குவிதிகளின் அடிப்படையில் வழங்கப்படும் பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசானது அபிவிருத்தி அனுமதி பத்திரமாகக் கருதப்பட மாட்டாது என்பதுடன் அபிவிருத்தி அனுமதி பத்திரம் இன்றி, பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசுடன் எந்தவொரு விண்ணப்பதாரியோ அல்லது வேறு எந்த நபரோ அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கப்பட முடியாது.*

*3.*

*(1) இவ்வொழுங்குவிதிகளின் அடிப்படையில் வழங்கப்படும் பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு ஒரு வருட காலத்திற்குச் செல்லுபடியாகும்.*

*(2) மேலும் அதிகாரசபையானது, குறித்த அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரின் வேண்டுகோளினடிப்படையில், வழங்கப்பட்ட பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசின் செல்லுபடி காலப்பகுதியினை குறித்த விண்ணப்பதாரியின்/ வேண்டுகோளின் நன்மை கருதி இரண்டு வருடத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.*

*(3) குறித்த அபிவிருத்தியாளருக்கு அல்லது அவரின் முகவர்க்கு பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு வழங்கப்பட்டதன் பின்னர், செல்லுபடியாகும் காலப்பகுதியினுள் இவ்வனுமதியினையும் அது தொடர்பான சகல உரிமைகளையும் வேறெந்த நபரிடம் கைமாற்ற தீர்மானிப்பாராயின், குறித்த விண்ணப்பதாரி ஒரு சத்தியக்கூற்று ஊடாக தகுந்த எழுத்து மூல ஆவணங்களுடன், அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் சேர்த்து அதிகார சபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.*

பகுதி II

## ***காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு, மற்றும் அபிவிருத்தி***

*4.*

*(1) பொருத்தமான அதிகாரசபையிடமிருந்து அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் எந்தவொரு தனிநபரும் காணி உபபிரிவிடுகை அல்லது ஒருங்கிணைத்தல் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட இயலாது.*

*(2) **படிவம் "ஆ" வின் பின்னிணைப்பு** I **மற்றும்** II இனை உள்ளடக்கிய வகையிலான அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்ட படிவம் "ஆ" யின் படி அபிவிருத்தி அனுமதி பத்திரத்தைப் பெறும் நோக்கோடு அதிகாரசபைக்கு விண்ணப்பிக்கப்படும் எந்தவொரு விண்ணப்பமும், **பின்னிணைப்பு** III **மற்றும்** IV இல் குறிப்பிடப்பட்ட எழுத்து மூல அங்கீகாரத்துடன் இணைந்த வகையில், அட்டவணை **03 இன் படிவம் "ஆ"** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நபரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு குறித்த அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*(3) அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர், தொடர்புடைய அதிகார சபையால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில், பிரேரிக்கப்பட்ட காணி உப பிரிவிடுகை, காணி ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்தி தொடர்பான விண்ணப்பங்களை அட்டவணை **1 இல் அமையப்பெற்ற படிவம் "ஆ" இன் பின்னிணைப்பு** V **இல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, இழப்பீட்டு அறிக்கை ஒன்று ஒருங்கிணைந்த வகையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*(4) தேவையான சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழி அணுகுமுறை மூலம் பொருத்தமான ஆவணங்களுடன் தொடர்புடைய அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*5. குறித்த அதிகார சபைக்கு அனுப்பப்படும் எந்தவொரு விண்ணப்பமும், ஒழுங்கு விதியின் **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்ட கட்டணங்கள் இணைந்த வகையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*6.*

*(1) காணி ஒருங்கிணைப்பு, காணி உப பிரிவிடுகை அல்லது காணி அபிவிருத்தி தொடர்பான ஏதேனுமொரு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதி பத்திரத்தினை பெற்றுக்கொண்ட குறித்த அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர், அது தொடர்பான சகல உரிமைகளையும் வேறெந்த நபரிடம் அல்லது அத்தகைய*

அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவருடன் தொடர்புபட்ட ஏதேனும் ஒரு நபருக்கு கைமாற்ற தீர்மானிப்பாராயின், குறித்த அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரினால் தகுந்த எழுத்து மூல கோரிக்கையுடன், இழப்பீட்டு காப்புறுதி மற்றும் தகுந்த ஆவணங்களையும் சேர்த்து, அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் இணைந்த வகையில் குறித்த அதிகார சபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது காணி அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்கிய பிரேரிக்கப்பட்ட எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும், இவ் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்கு விதிகள் மற்றும் வேறு பொருத்தமான சட்டங்களுடன் இயைந்த வகையில் அமைதல் வேண்டும்.

7.

(1) எந்தவொரு காணித்துண்டானது :

அ. 0.5 ஹெக்ரெயர் காணிப்பரப்பளவு அல்லது அதை விட விஞ்சுமாயின் மற்றும் எட்டிற்கு (8) மேற்பட்ட காணித் துண்டுகளைக்கொண்ட உப பிரிவிடுகைக்காகப் பிரேரிக்கப்பட்டிருப்பின் ; அல்லது

ஆ. தற்போதுள்ள சுற்று சூழலின் உணர்திறன் தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏதேனும் நடவடிக்கையாயின்

தொடர்புடைய அதிகார சபை, அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரை அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள, தகைமைபெற்ற நபர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வழி நடத்துதல் வேண்டும்.
அத்தகைய தகைமை பெற்ற நபர் காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது காணி அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்கிய பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கையானது இவ் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் மற்றும் தொடர்புடைய ஏனைய ஒழுங்குவிதிகள், அபிவிருத்தி திட்டம் மற்றும் குறித்த பகுதியின் சுற்று சூழல், சமூகம் மற்றும் பொருளாதார நிலைமைகளுடன் இயைந்திருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

8. பிரேரிக்கப்பட்ட காணித்துண்டுகள் மற்றும் அவற்றின் பரிமாணங்கள், திசை, அகலம் மற்றும் பிரேரிக்கப்பட்ட அனைத்து தெருக்களின் மட்டங்கள், திறந்தவெளிகள் மற்றும் பிற வசதிகளுக்கான இடம் மற்றும் ஒவ்வொரு காணித்துண்டுகளுக்கும் பிரேரிக்கப்பட்ட பயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக 1:1000 அளவீட்டிற்கு குறையாத விபரமான அபிவிருத்தி துண்டிடல் நில அளவைப்படம் ஒவ்வொரு அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரினாலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காணித்துண்டின் தள பரப்பு மிகவும் பெரியதாக இருக்கும் பட்சத்தில், உயர்ந்த பட்சம் 1:4000 அளவில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படம் சமர்ப்பிக்கப்படலாம்.

9. பிரேரிக்கப்பட்ட காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது காணி அபிவிருத்தி என்பவற்றிற்கான நில அளவை திட்டமானது நியமங்கள், ஒழுங்குவிதிகளுக்கு இயைந்திருப்பதோடு கீழ்வரும் நிபந்தனைகளையும் உறுதிப்படுத்திருத்தல் வேண்டும்.

(1) குறித்த நகர பகுதிக்கான அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்பட்டால் அன்றி, காணி உப பிரிவிடுகைக்கான குறைந்த பட்ச காணித்துண்டின் அளவானது 150 சதுர மீற்றரை விட குறைவடைந்திருக்கலாகாது.

(2) அமைவிடத்தில் தற்போது ஏதேனும் கட்டடங்கள் காணப்படுமாயின், அவை நில அளவைப்படத்தில் குறித்துக் காட்டப்படல் வேண்டும்.

(3) நில அளவப்படத்தின் அளவுத்திட்டம், வட திசை குறியீடு மற்றும் அருகாமையில் காணப்படும் காணித் துண்டுகளின் அல்லது கட்டடங்களின் ஆதன இலக்கங்கள் என்பன தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(4) அமைவிடத்தின் அணுகு வழிகள் மற்றும் அவற்றின் அகலங்கள் தொடர்பாக விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(5) தற்போதுள்ள மற்றும் பிரேரிக்கப்பட்டுள்ள வடிகால்கள் மற்றும் நீர் வழிகள் அனைத்தும் நீர் ஓட்டத்தின் திசைகளுடன் சுட்டிக் காட்டப்படல் வேண்டும்.

(6) இயற்கை வடிகால்/ வடிகான் மற்றும் மழைநீரை வெளியேற்றுவதற்கான முறையான வடிகால்/ வடிகான் அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான வடிகால்/ வடிகான் அமைப்புகள் பொது வடிகால்/ வடிகான் அமைப்புகளுடன் அல்லது ஏனைய ஏதேனுமொரு பொது நீர்வழிகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தற்போதுள்ள வடிகால்களின் மட்டங்கள் பிரேரிக்கப்பட்ட வடிகால்/ வடிகான் அமைப்பின் வெளியேற்றவழியின் கொள்ளளவோடு பொருந்தாவிட்டால், மாற்று வடிகால்/ வடிகான் வழிமுறைகள் பிரேரிக்கப்பட்டு, அதற்கான இடவசதி நில அளவைப்படத்தில் குறிக்கப்படல் வேண்டும்.

(7) குறித்த தளமொன்றின் சாய்வு கோணமானது 10 பாகை அல்லது அதற்கு மேற்படின், தற்போதுள்ள சமவுயரக்கோடுகள் அல்லது தளத்தின் இடை நிலை மட்டங்கள் மற்றும் வீதியின் மட்டங்கள் என்பன வரைபடத்தில் காட்டப்படல் வேண்டும்.

(8) காணியொன்றில் சாய்வு கோணமானது 10 பாகையினை விட குறைவாக இனங்காணப்படுமிடத்து, தற்போதுள்ள சமவுயரக்கோடுகள் அல்லது தளத்தின் இடை நிலை மட்டங்கள் மற்றும் வீதியின் மட்டங்கள் என்பன தொடர்புடைய அதிகாரசபையால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில் நில அளவை வரைபடத்தில் காட்டப்படல் வேண்டும்.

(9) நில அளவைப்படத்தின் அனைத்து எல்லைகளும் கறுப்பு நிறத்தில் குறிக்கப்பட வேண்டும் என்பதோடு, குறித்த நில அளவைப்படத்தின் முந்தைய எல்லைக் கோடுகள் குறிக்கப்பட வேண்டியிருந்தால் அவை சிவப்பு நிறத்தில் குறிக்கப்பட்டு அவற்றிற்கான குறிப்பு நில அளவைப்படத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(10) முந்தைய நிலஅளவைப்படங்கள் காணப்படின் அவை பரிசீலனைக்காக அபிவிருத்தி நிலஅளவைப்படத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். அத்தகைய முந்தைய நில அளவைப்படங்கள் காணப்படாவிடத்து காணி உரிமையாளரின் ஒப்புதலுடனான குறிப்பு நில அளவைப்படத்தில் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் புதிய நிலஅளவைப்படம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மூல ஆவணம் மீதான குறிப்பு நிலஅளவை வரைபடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(11) அனைத்து வீதி எல்லைக் கோடுகள், கட்டட எல்லைக் கோடுகள் மற்றும் வேறு ஏதேனும் வீதி ஒதுக்கீடுகள் அல்லது வரையறைகள் அல்லது வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட அல்லது பொருத்தமான அதிகாரசபை அல்லது நிறுவனங்களால் வழங்கப்பட்ட வேறு ஒதுக்கீடுகள் என்பன அபிவிருத்தி நில அளவைப்படத்தில் குறித்துக்காட்டப்படல் வேண்டும்.

(12) தற்போதுள்ள நீர் வழிகள், சாக்கடை குழிகள், வேலிகள் அல்லது எல்லைகள், தடுப்புச் சுவர்கள், மின்னிணைப்பு வழிகள் என்பன அபிவிருத்தி நில அளவைப்படத்தில் குறித்துக்காட்டப்படல் வேண்டும்.

(13) ஒப்பீட்டளவில் பெரிய காணித்துண்டொன்றின் ஒரு பகுதியானது அனுமதிக்காக விண்ணப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில், முழு காணியையும் உள்ளடக்கிய ஒரு மாதிரிப்படமாக சமர்ப்பிக்க தொடர்புடைய அதிகார சபை கோரலாம்.

(14) ஏதேனுமொரு காணி உபபிரிவிடுகையானது, 250 சதுர மீற்றருக்கு குறைவான காணிப்பரப்பளவைக் கொண்ட 10 ற்கு மேற்பட்ட காணித்துண்டுகளைக் கொண்டிருக்குமாயின், குறித்த காணிப்பரப்பின் 20 சதுர மீற்றருக்கு குறையாத பகுதி கழிவு முகாமைத்துவத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, நில அளவைப்படத்தில் குறித்துக்காட்டப்படல் வேண்டும்.

(15) அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் விபரங்களை பதிவு செய்யும் பொருட்டு வரைபடத்தின் முன் பக்கத்தில் 7.5 செ. மீ x 5.5 செ. மீ அளவிலான இடப்பகுதியொன்று ஒதுக்கப்படல் வேண்டும்.

(16) நில அளவைப்படமானது, சர்வதேச தரப்படுத்தப்பட்ட மெற்றிக் அளவு தாள்களின் ‘ எ ‘ தொடரில் அல்லது சட்ட அளவு தாள்களில் (legal size) தயாரிக்கப்பட்டு, ஐந்து உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் மூலப்பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

10. அபிவிருத்தி திட்டம் காணப்படும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு தனிநபரும் குறித்த காணியில் காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திகளை மேற்கொள்ள மற்றும்/அல்லது முன்னெடுக்க தீர்மானிப்பாராயின் அவ் அபிவிருத்தி திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்கு விதிகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.

11. பிரேரிக்கப்பட்ட காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்தியானது, இவ்வொழுங்குவிதிகளுக்கு இயைந்து காணப்படாவிடத்து, பிரேரிக்கப்பட்ட காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்தியை இவ்வொழுங்குவிதிகளுக்கு அல்லது வேறு சட்டங்களுக்கு அமைய இயைந்திருக்கும் வகையில் திருத்தியமைக்க தொடர்புடைய அதிகாரசபை அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரை வழிநடத்தலாம்.

12. விவசாயம்/ தோட்ட வேளாண்மை அல்லது தொடர்புடைய பயன்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனுமொரு காணியும், **ஒழுங்குவிதி 4(1)** இல் குறிப்பிடப்பட்டதற்கமைய, தொடர்புடையடைய அதிகாரசபையிடமிருந்து அபிவிருத்தி அனுமதி பத்திரம் ஒன்றை பெறாமல் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு அபிவிருத்தி செயற்பாடுகளுக்குமான காணி உபபிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திகளை மேற்கொள்ள இயலாது.

*13.* (1) எந்தவொரு தனிநபரும் குறித்த தளத்தில் அல்லது அதன் ஒரு பகுதியில், தொடர்புடைய அதிகாரசபையால் வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நியமங்களை மீறுகின்ற வகையில் எவ்வித பௌதீக அபிவிருத்திகளையும் முன்னெடுக்கவோ அல்லது ஈடுபடவோ இயலாது.

(2) அபிவிருத்தி அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நியமங்களுக்கு இயைந்த வகையில், மின்சாரம், நீர் விநியோகம், மழைநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் முறைமைகள், வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரினால் தொடர்புடைய சேவை நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படல் வேண்டும்.

*14.* (1) அபிவிருத்தித் திட்டத்தில் அல்லது அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி, உப பிரிவிடுகை செய்யப்பட்ட காணித்துண்டொன்றானது 150 சதுர மீற்றர் (6 பேர்ச்ஸ்) விஸ்தீரணத்தையும், 6.0 மீற்றர் அகல முகப்பினையும் மற்றும் 12 மீற்றர் நீளத்தினையும் (ஆழத்தினையும்) விடக் குறைவடைந்திருத்தல் ஆகாது.

(2) தற்போதுள்ள காணித்துண்டொன்றானது இவ்வொழுங்குவிதியின் ஏனைய தேவைப்பாடுகளுக்கு இயைந்து காணப்படும் சந்தர்ப்பத்தில், குறித்த காணித்துண்டிற்கான குறைந்தபட்ச காணி விஸ்தீரணம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை தளர்த்த, தொடர்புடைய அதிகாரசபையானது சுயவிருப்பத்தின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

(3) கூட்டுடைமை. சொத்தொன்றின் அபிவிருத்தி நோக்கத்திற்காக காணி உப பிரிவிடுகை பிரேரிக்கப்பட்டிருப்பின் மற்றும் அத்தகைய உப பிரிவிடுகை செய்யப்பட்ட பகுதி பொது பயன்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாவிடத்து, உப பிரிவிடுகை செய்யப்பட்ட அக்காணித்துண்டொன்றின் குறைந்தபட்ச விஸ்தீரணமானது இவ் ஒழுங்குவிதிகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.

*15.* (1) காணி உபபிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திக்கு உட்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள காணித்துண்டொன்றில் நிரந்தர கட்டடம் காணப்படும் சந்தர்ப்பத்தில், அக்கட்டடத்திற்கான திறந்த வெளியிடங்கள், ஒளியூட்டல் மற்றும் காற்றோட்டம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் என்பவற்றிக்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகள் இவ்வொழுங்குவிதிகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.

(2) குறித்த காணியின் உபபிரிவிடுகையினால் தற்போதுள்ள கட்டடமொன்று பிரிவடையும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கட்டடத்தின் அனுமதிக்கப்பட்ட கட்டட வரைப்படத்தின் நகலை சமர்ப்பிக்குமாறு அபிவிருத்தியாளரிடம் அல்லது அவரின் முகவரிடம் தொடர்புடைய அதிகாரசபை கோரலாம்.

*16.* காணி உபபிரிவிடுகை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட காணித்துண்டு, குறிப்பிடப்பட்டாலன்றி தொடர்புடைய அதிகார சபையினால் அனுமதி வழங்கப்பட்ட நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

*17.* வீதிகள், வடிகால்கள், ஆறுகள், வேறு நீர் நிலைகள் அல்லது நீர் மூலங்களுக்கு அருகாமையில் அமையப்பெற்ற தளமொன்றில் உபபிரிவிடுகை, ஒருங்கிணைப்பு, அல்லது காணி அபிவிருத்தி என்பன பிரேரிக்கப்பட்டிருப்பின், அத்தகைய செயற்பாடுகளுக்கான பிரேரிக்கப்பட்ட நில அளவைப் படமானது தொடர்புடைய அதிகாரசபை மற்றும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய நிபந்தனைகளுடன் இயைந்திருத்தல் வேண்டும்.

*18.* (1) ஒன்பது மீற்றருக்கும் குறைவான அகலமுள்ள ஒரு வீதியை அண்மித்துள்ள எந்தவொரு தளமும் அல்லது காணித்துண்டும் வதிவிடமல்லாத பயன்பாட்டிற்காகவோ அல்லது அத்தகைய பயன்பாட்டையுடைய ஏதேனும் கட்டட நிர்மாணித்தலுக்கோ பயன்படுத்த முடியாது. எவ்வறாயினும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காணித்துண்டுகளின் வதிவிடமல்லாத பயன்பாட்டிற்கு அல்லது அத்தகைய பயன்பாட்டையுடைய கட்டட நிர்மாணிப்பிற்கு சேவையளிக்கும் குறித்த ஒரு வீதியின் அகலமானது 9 மீற்றருக்கு குறைவாகக் காணப்படுமாயின் **அட்டவணை 4 இன் படிவம் "அ"** இல்குறிப்பிடப்பட்ட விபரக்குறிப்புகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டுமெனும் நிபந்தனையின் அடிப்படையில் அனுமதிக்கப்படலாம்.

(2) வதிவிட காணி உபபிரிவிடுகையில் காணப்படும் ஒவ்வொரு காணித்துண்டும் **அட்டவணை 4 இல் படிவம் "ஆ" இன்** கீழ் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இயைந்த வகையில், தற்போதுள்ள அல்லது பிரேரிக்கப்பட்ட வீதிகளுடன் அணுகுவழிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) 6.0 மீற்றர் அல்லது அதற்கு குறைவான அகலமுள்ள ஒரு வீதியின் எந்தவொரு வாகன வழித்தடமும், முழுமையாக அதே அகலத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதோடு வடிகால்கள் மற்றும் பிற வீதி உட்கட்டமைப்புத் தேவைப்பாடுகள் அனைத்தும் குறித்த வாகன வழித்தடத்தின் அகலத்திற்கு மேலதிகமாக வழங்கப்படுவதோடு அவை அண்மித்துள்ள காணியிலிருந்து ஒதுக்கப்படல் வேண்டும்.

(4) அணுகல் வீதியொன்றின் அகலமானது, **அட்டவணை 4 இல் படிவம் "ஆ"** இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளப்படி குறித்த வீதியினால் அணுகுதலை வழங்கக்கூடிய காணித்துண்டுகளின் மொத்த எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

(5) அதிக எண்ணிக்கையில் உபபிரிவிடுகை செய்யப்பட்ட காணித்துண்டுகளுக்கான பிரதான அணுகுவழி தேவைப்பாடு 9 மீற்றர் அல்லது அதற்கு மேலதிகமாக காணப்படுமிடத்து, பிரதான அணுகல் வீதி சேவை வழங்கும் முடிவிடத்திற்கு அப்பால் அமையப்பெற்ற காணித்துண்டுகளுக்கான அணுகுதலை வழங்கக்கூடிய வீதியின் குறைந்தபட்ச அகலமானது 6 அதிக மீற்றராக காணப்படல் வேண்டும்.

(6) வீதியொன்றின் முடிவிடத்தினை அண்மித்துள்ள ஒவ்வொரு காணித்துண்டு மற்றும் தளம் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அகலத்தினை விட குறைந்த முகப்பினை கொண்டிருப்பினும் அது 3.0 மீற்றர் அகலத்திற்கு குறைவடைதலாகாது.

19. (1) காணித்துண்டு ஒன்றினுடைய அணுகுவழியில் வீதி எல்லைக்கோடுகள் அல்லது பிரேரிக்கப்பட்ட வீதியின் அகலங்கள் பொருந்தாவிடத்து, அத்தகைய காணி உபபிரிவிடுகையானது தற்போதுள்ள வீதியின் பௌதீக அகலத்தினைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(2) வீதி எல்லைக் கோடு அல்லது பிரேரிக்கப்பட்ட வீதியின் அகலங்கள் அமையப்பெற்ற வீதி ஒன்றிலிருந்து அணுகலை பெற்றுக்கொள்ளும் காணியொன்றின் உபபிரிவிடுகையின் போது பிரிக்கப்பட வேண்டிய காணித்துண்டுகளின் எண்ணிக்கையானது, வீதி எல்லைக் கோடு அல்லது அணுகல் வீதியின் பிரேரிக்கப்பட்ட அகலங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அத்தகைய வீதிகளின் அகலப்படுத்தலானது வீதி எல்லைக்கோடுகள் காணப்படுமிடத்து வீதி எல்லைக்கோடுகளுக்கு அமைவாகவும், அவை காணப்படாவிடத்து பிரேரிக்கப்பட்ட வீதி எல்லை கோடு அல்லது பிரேரிக்கப்பட்ட வீதியின் அகலத்திற்கு அமைவாகவும் அவ்வீதியின் மையத்திலிருந்து இரு மருங்கிலும் சமமான அளவில் அமையப்பெற வேண்டும் என்பதோடு அத்தகைய வீதி அகலப்படுத்துதலுக்குள் உள்வாங்கப்படும் காணித்துண்டுகளானது, **அட்டவணை 1** இல் குறிப்பிடப்பட்ட **படிவம் "ஆ" இன் பின்னிணைப்பு** VI இற்கு அமைய எவ்வித நிதி பரிசீலினையும் இன்றி வீதி அகலப்படுத்தலுக்காக தொடர்புடைய அதிகாரசபைக்கு உறுதிமூலம் அன்பளிப்பாக வழங்கப்படல் வேண்டும்.

(3) **அட்டவணை 4 இல் படிவம் "ஆ"** இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வதிவிட காணித்துண்டுகளுக்கான வீதி அகலத்தின் குறைந்தபட்ச தேவைப்பாட்டினை நிறைவுசெய்யும் சந்தர்ப்பத்தில், குறித்த விடயம் எந்தவொரு தரப்பினருக்கும் தேவையற்ற விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று அதிகாரசபை கருதுமாயின் திட்டமிடல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கீழ்வரும் காரணிகளைக் கருத்தில் கொண்டு அவ்வீதியின் அகலமானது குறைக்கப்படலாம்:

அ. அணுகு வீதியானது குறைந்தது 3.0 மீற்றர் அகலத்தினை கொண்டிருத்தல் ; அல்லது

ஆ. குறை வருமான குடியிருப்புகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் முன்மொழிவாக இருப்பின்.

அத்தகைய ஒவ்வொரு வீதியும் 6.0 மீற்றருக்கு குறையாத அகலத்தினைக்கொண்ட ஒரு பொது அல்லது தனியார் வீதியுடன் இணைக்கப்படல் வேண்டும் என்பதோடு உரிமையாளர் அத்தகைய தனியார் வீதியிலிருந்து பாவித்து உரித்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட தளர்வானது புதிய காணி உப பிரிவிடுகைக்குப் பொருந்தாது.

20. புதிய காணி உபபிரிவிடுகையிலுள்ள காணித்துண்டொன்றிற்கான அணுகு வீதியின் குறைந்தபட்ச அகலமானது வதிவிட பயன்பாடுகளுக்கு **அட்டவணை 4 இல் படிவம் "ஆ"** இல் குறிப்பிடப்பட்டதற்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

21. (1) காணி உபபிரிவிடுகையில், அணுகல் வீதியின் அகலமானது 9.0 மீற்றருக்கு குறைவாகவும் மற்றும் நீளமானது 30 மீற்றருக்கு அதிகமாகவும் காணப்படுமாயின் 9 மீற்றர் விட்டத்திற்கு குறையாத திருப்பு சுற்று வட்டம் அல்லது பொருத்தமான இடத்தில் 9 மீற்றர் அகலத்தினைக் கொண்ட "T" அமைப்பு வாகன திருப்பு வசதி ஏற்படுத்தப்படல் வேண்டும்.

(2) காணி உபபிரிவிடுகையில், அணுகல் வீதியின் அகலமானது 9.0 மீற்றர் அல்லது அதற்கு மேற்படின் 12 மீற்றர் விட்டத்திற்கு குறையாத திருப்பு சுற்று வட்டமொன்று அல்லது பொருத்தமான இடத்தில் 12 மீற்றர் அகலத்தினைக் கொண்ட "T" அமைப்பு வாகன திருப்பு வசதி ஏற்படுத்தப்படல் வேண்டும்.

22. காணித்துண்டொன்றானது இரு வீதிகள் சந்திக்கும் பகுதியில் அமைந்திருக்குமாயின், வீதி பயனாளிகளின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, இரண்டு வீதிகள் சந்திக்கும் புள்ளியிலிருந்து அவ்வீதிகளின் அகலத்தின் அரைவாசி அளவில் முறையே இரு மருங்கிலும் வளைத்து அல்லது சாய்வாக்கிக் காட்டப்படல் வேண்டும்.

23. (1) உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்படவுள்ள காணி அல்லது தளமொன்றின் விஸ்தீரணமானது 1.0 ஹெக்ரெயர் அல்லது அதற்கு மேற்படின், வீதிகள் மற்றும் வடிகால்கள் நீங்கலாக காணியின் அல்லது தளத்தின் பரப்பளவில் 10% இற்கு குறையாத ஒரு இடப்பரப்பு பொருத்தமான இடத்தில் அத்தகைய சமூகத்தின் பயன்பாட்டிற்காக சமூக பொழுதுபோக்கு அல்லது திறந்த வெளியிடங்களுக்காக ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஒதுக்கீட்டு இடமானது **அட்டவணை 1 இன் படிவம் "ஆ" பின்னிணைப்பு** VI இல் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைய அனைத்து கட்டணங்களும் நீக்கப்பட்டு தொடர்புடைய அதிகார சபைக்கு அன்பளிப்பாகக் கையளிக்கப்படல் வேண்டும்.

(3) அத்தகைய ஒதுக்கீட்டு இடமானது :

i. அனைத்து காணித்துண்டுகளும் இலகுவாக அணுகக்கூடியவாறு பொருத்தமான இடத்தில் அமையப்பெற்றிருத்தல் வேண்டும் ;
ii. பயன்படுத்த முடியாத காணித்துண்டாக இருத்தலாகாது ;
iii. உபபிரிவிடுகை செய்யப்பட்ட காணி சுற்றுச்சூழல் உணர்திறன்/ இரம்மியமான சூழல்களுக்கு (அதாவது ஈரநிலங்கள் மற்றும் நீர்வழிகள் போன்றவை) அருகாமையில் அமைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய இயற்கை அம்சங்களுக்கு அருகாமையில் அமைந்திருக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

(4) **ஒழுங்குவிதி 23 (1)** இல் குறிப்பிடப்பட்டுள்ள சமூக, பொழுதுபோக்கு மற்றும் திறந்தவெளி பயன்பாடுகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய காணிப்பகுதியின் விஸ்தீரணமானது 300 சதுர மீற்றருக்கு குறைவாக காணப்படுமாயின், அக்குறிப்பிட்ட ஒதுக்கீட்டு பகுதியானது வீதி ஒதுக்கீடு, தரைத்தோற்ற வடிவமைப்பு அல்லது நடைபாதை போன்ற நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படலாம் என்பதோடு பயன்பாட்டாளர்களால் பராமரிக்கப்படல் வேண்டும்.

24. குறித்த காணியானது வணிக மற்றும் கைத்தொழில் நோக்கங்களுக்காக உபபிரிவிடுகை செய்யப்படுமாயின், உபபிரிவிடுகை செய்யப்பட்ட காணித்துண்டொன்றின் பரப்பளவானது 2024 சதுர மீற்றருக்கும் (80 பேர்ச்), அனைத்து வீதிகளின் அகலமானது 9.0 மீற்றருக்கும் குறைவடையாமல் அமைந்திருப்பின், 10% காணிப்பகுதியினை சமூக, பொழுதுபோக்கு மற்றும் திறந்த வெளி பாவனைக்காக ஒதுக்கீடு செய்யாமல் காணி உபபிரிவிடுகையை மேற்கொள்ள முடியும். எவ்வாறாயினும், குறித்த அபிவிருத்தியாளர் அத்தகைய உபபிரிவிடுகை செய்யப்பட்ட காணித்துண்டுகளை மேலும் உபபிரிவிடுகைக்கு உட்படுத்த வேண்டுமாயின்,

i. அவ்வாறு உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்படுகின்ற காணித்துண்டில் 10% னை ஒதுக்கீடு செய்தல் வேண்டும் ; அல்லது
ii. உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்பட்ட காணித்துண்டொன்றின் பெறுமதியானது, **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகைமைப்பெற்ற நபரால் மதிப்பீடு செய்யப்பட்டு குறித்த விண்ணப்ப திகதிய திறந்த சந்தை பெறுமதியின் 10% தினை தொடர்புடைய அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட கணக்கில் வைப்பிலிடல் வேண்டும்.

25. (1) வதிவிட பயன்பாட்டிற்கான காணி உபபிரிவிடுகையின் போது, உபபிரிவிடுகை செய்யப்பட்ட காணித்துண்டொன்றின் பரப்பளவானது 1012 சதுர மீற்றருக்கு (40 பேர்ச்) குறைவடையாமலும், மற்றும் ஒவ்வொரு காணித்துண்டும் இரு வதிவிட அலகுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டும் காணப்படுமாயின், 10% காணிப்பகுதியினை சமூக, பொழுதுபோக்கு மற்றும் திறந்த வெளி பாவனைக்காக ஒதுக்கீடு செய்யாமல் காணி உபபிரிவிடுகையை மேற்கொள்ள முடியும்.

*(2) எவ்வாறாயினும், **ஒழுங்குவிதி 25(1)** இல் குறிப்பிடப்பட்ட எந்தவொரு உப பிரிவிடுகை செய்யப்பட்ட காணித்துண்டும் மேலதிக உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்படவோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வதிவிட அலகுகளை அபிவிருத்தி செய்யவோ முற்படின், குறித்த அபிவிருத்தியாளர் அத்தகைய உப பிரிவிடுகை செய்யப்பட்ட காணிப்பகுதியின் 10% இனை பௌதீக ரீதியாக வழங்குவதற்குப் பதிலாக **அட்டவணை** 3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைப்பெற்ற நபரால் மதிப்பீடு செய்யப்பட்ட உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்பட்ட காணித்துண்டொன்றின் குறித்த விண்ணப்பத் திகதிய திறந்த சந்தை பெறுமதியின் 10% தினை தொடர்புடைய அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட கணக்கில் வைப்பிலிடல் வேண்டும்.*

*26. (1) 4047 சதுர மீற்றருக்கு (1 ஏக்கர் ) மேற்பட்ட பரப்பினைக் கொண்ட பொதுமக்கள் அணுகக்கூடிய குளம், பொது விளையாட்டு மைதானங்கள் அல்லது கடற்கரை பகுதிகள் போன்ற பகுதியிலிருந்து 0.5 கிலோ மீற்றர் ஆரை சுற்றுப்பகுதிக்குள் உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்படும் காணி காணப்படுமாயின், தொடர்புடைய அதிகாரசபையால் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியாளர் சமூக, பொழுதுபோக்கு மற்றும் திறந்த வெளி பயன்பாடுகளுக்கு காணிப்பகுதியினை பௌதீக ரீதியாக ஒதுக்கீடு செய்வதற்கு மாறாக **அட்டவணை** 3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைப்பெற்ற நபரால் மதிப்பீடு செய்யப்பட்ட உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்பட்ட காணித்துண்டொன்றின் குறித்த விண்ணப்ப திகதிய திறந்த சந்தை பெறுமதியின் ஒதுக்கீட்டு இடத்திற்கு இணையான பெறுமதியினை தொடர்புடைய அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட கணக்கில் வைப்பிலிடல் வேண்டும்.*

*(2) சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது திறந்த வெளியிடங்களானது, உள்ளக பார்வையாளர் அரங்கு, நீச்சல் தடாகம் மற்றும் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்கான கட்டடங்கள் மற்றும் சமூக மண்டபங்கள் போன்றவற்றுக்காக, அதிகபட்சம் 25% நிலமேவுகை அளவையும் அதிகபட்சம் 5.0 மீற்றர் உயரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.*

*(3) காணி உப பிரிவிடுகையின் போது சமூக, பொழுதுபோக்கு மற்றும் திறந்த வெளி தேவைப்பாடுகளுக்காக ஒதுக்கப்படவேண்டிய காணிப்பகுதியானது 300 சதுர மீற்றரை (12 பேர்ச்ஸ் ) மேற்படாவிடத்து **ஒழுங்குவிதி 23(4)** ற்கு மாற்றீடாக, தொடர்புடைய அதிகாரசபை திட்டமிடல் குழுவின் பரிந்துரையின் கீழும் தலைவரின் அனுமதியுடன் காணிப்பகுதியினை பௌதீக ரீதியாக ஒதுக்கீடு செய்யாமல் **அட்டவணை** 3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைப்பெற்ற நபரால் மதிப்பீடு செய்யப்பட்ட காணித்துண்டொன்றின் குறித்த விண்ணப்ப திகதிய திறந்த சந்தை பெறுமதியின் ஒதுக்கீட்டு இடத்திற்கு இணையான பெறுமதியினை தொடர்புடைய அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட கணக்கில் வைப்பிலிட குறித்த அபிவிருத்தியாளரை வழிநடத்தலாம்.*

*(4) காணிப்பகுதியானது 10% திறந்தவெளி தேவைப்பாட்டை பூர்த்திசெய்யாமல் உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்பட்டிருப்பின், **அட்டவணை** 3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைப்பெற்ற நபரால் மதிப்பீடு செய்யப்பட்ட சமூக,பொழுதுபோக்கு மற்றும் திறந்த வெளியிடங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 10% காணிப்பகுதியின் விண்ணப்ப திகதிய திறந்த சந்தை பெறுமதியில் ஒதுக்கீட்டு இடத்திற்கு இணையான பெறுமதியுடன் சேர்த்து மேலதிக 25% சேவை கட்டணமும் இணைந்த வகையில் தொடர்புடைய அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட கணக்கில் வைப்பிலிடல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் குறித்த காணித்துண்டிற்கான அபிவிருத்தியையோ அல்லது மேலதிக உபபிரிவிடுகையையோ தொடர்புடைய அதிகாரசபை அனுமதிக்கலாம்.*

*(5) **ஒழுங்குவிதி 24, 25 (2), 26 (1), 26 (3)** மற்றும் **26 (4)** இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய வைப்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட நிதியானது, அதிகாரசபையால் தொடர்புடைய நகர அபிவிருத்தி பகுதிக்குள் சமூக, பொழுதுபோக்கு மற்றும் திறந்தவெளி பயன்பாடுகளுக்கான இடங்களை வழங்கும் நோக்கத்திற்காக பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.*

*27. (1) பொருத்தமான அதிகாரசபையானது காணி உபபிரிவிடுகை, காணி ஒருங்கிணைப்பு அல்லது அந்நிலப்பரப்பில் இடம் பெறும் ஏனைய அபிவிருத்திகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய அபிவிருத்தி அனுமதி பத்திரத்தினை வழங்கும்.*

*(2) அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை திருப்திகரமாக பூர்த்தி செய்திருப்பின், **ஒழுங்கு விதி** 83 இல் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் காணி உபபிரிவிடுகை அல்லது காணி ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திகளுக்கான அமைவுச் சான்றிதழை தொடர்புடைய அதிகாரசபை வழங்கும்.*

*(3) எந்தவொரு நபரும் அதிகாரசபையினால் அமைவுச் சான்றிதழ் வழங்கப்படும் வரையில் குறித்த உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்பட்ட காணியினை வேறெந்த விளம்பரப்படுத்த, ஊக்குவிக்க அல்லது விற்பனை செய்ய முடியாது.*

(4) காணியின் விஸ்தீரணமானது 10 ஏக்கரை விட அதிகரித்து காணப்படும் காணியொன்றினுள் அபிவிருத்தி செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு முன்னராக, தொடர்புடைய அதிகாரசபையால் அனுமதிக்கப்பட்ட வரைப்படத்தின் இலக்கம் மற்றும் திகதியும் மற்றும் அபிவிருத்தித்தியாளர் மற்றும் உரிமையாளரின் விபரங்களும் மற்றும் தொடர்பு தகவல்களும் உள்ளடங்கலான 2.5 மீற்றர் நீளமும் மற்றும் 1.5 மீற்றர் அகலமும் கொண்ட அறிவித்தல் பலகையொன்று காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

## பகுதி III

## கட்டடங்களின் கட்டுமானம், திருத்தம் அல்லது புதுப்பித்தல்

28. (1) எந்தவொரு தனி நபரும் தொடர்புடைய அதிகார சபையின் அபிவிருத்தி அனுமதி பத்திரம் இன்றி எந்த ஒரு அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான கட்டடங்களின் கட்டுமானம், திருத்தம் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

(2) அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, அட்டவணை 1 இன் **படிவம் "இ"** இல் குறிப்பிடப்பட்டதற்கிணங்க விண்ணப்பமொன்றை **படிவம் "இ" இன் பின்னிணைப்பு** I மற்றும் II யும் சேர்த்து படிவம் **"இ" இன் பின்னிணைப்பு** III **முதல்** VI வரையில் குறிப்பிடப்பட்டதன்படி எழுத்துமூல பிரகடனத்துடன் **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த நபரால் உறுதிப்படுத்தப்பட்டு தொடர்புடைய அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) விண்ணப்பமானது தொடர்புடைய ஆவணங்களுடன், சாத்தியமான சந்தர்ப்பங்களில் இணையவழி ஊடாக தொடர்புடைய அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(4) ஒவ்வொரு விண்ணப்பமும் **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்டதன்படி தொடர்புடைய கட்டணங்களுடன் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

29. அபிவிருத்தி அனுமதி பத்திரத்தை வழங்குவதற்காக தொடர்புடைய அதிகார சபையால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் பொருத்தமான வடிவத்தில் தயாரிக்கப்பட்ட விபரமான அபிவிருத்தி முன்மொழிவு ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய முன்மொழிவுகள் தொடர்புடைய நிறுவனங்களினால் எதிர்பார்க்கப்பட்ட தொழிநுட்ப தேவைப்பாடுகளையும் மற்றும் பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசில் குறிப்பிடப்பட்ட வேறு தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

30. (1) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்படும் அபிவிருத்தி அனுமதி பத்திரமானது ஒரு வருட காலப்பகுதிக்குச் செல்லுபடியாகும்.

(2) அபிவிருத்தி அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி செயற்பாடானது ஆரம்பிக்கப்பட்டு எதிர்பாரா சூழ்நிலைகளினால் நிறைவுசெய்ய முடியாதுள்ளது என்று தொடர்புடைய அதிகாரசபையால் நம்பப்படுமிடத்து குறித்த அபிருத்தியாளரின் அல்லது அவரின் முகவரின் வேண்டுகோளினடிப்படையில், தொடர்புடைய அதிகாரசபை அபிவிருத்தி அனுமதி பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தினை இரு வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு நீடிக்க முடியும்.

(3) அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பமானது **அட்டவணை 01 இன் படிவம் "ஈ" இல்** குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு, பொருத்தமாயின் **ஒழுங்குவிதி 82** இன் கீழ் பெறப்பட்ட **பிந்தைய அனுமதிப்பத்திர தொடர் செயற்பாட்டு மற்றும் கண்காணிப்பு அறிக்கையுடன் அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் செலுத்தப்பட்டு சமர்பிக்கப்படல் வேண்டும்.

(4) அபிவிருத்தி அனுமதி பத்திரத்திற்கான செல்லுபடியாகும் காலமானது மூன்று (3) வருட கால நிறைவிற்குப் பின் முடிவடையும்.

(5) அபிவிருத்தி அனுமதி பத்திரத்திற்கான வழங்கப்பட்ட 3 வருட செல்லுபடியாகும் காலமானது நிறைவடைந்த நிலையில், அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் அபிவிருத்தி அனுமதி பத்திரத்தின் செல்லுபடி காலத்தினை மேலும் நீடிக்க விரும்புவாராயின், அத்தகைய அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் முந்தைய அபிவிருத்தி அனுமதி

பத்திரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட கட்டட வரைபட பிரதிகளுடன் இணைத்து புதிய அபிவிருத்தி அனுமதி பத்திரத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு அவற்றுக்கான கட்டணங்கள், இவ்வொழுங்குவிதியின் **அட்டவணை 02** இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய செலுத்தப்படல் வேண்டும்.

(6) அத்தகைய விண்ணப்பமானது மேலே குறிப்பிடப்பட்ட **ஒழுங்குவிதி 28(2)** இற்கு அமைய தயாரிக்க முடியும்.

(7) அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர், அபிவிருத்தி அனுமதி பத்திரமொன்றை செல்லுபடியாகும் காலப்பகுதிக்குள், அது தொடர்பான சகல உரிமைகளையும் சேர்த்து வேறெந்த நபருக்கு அல்லது அத்தகைய அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவருடன் தொடர்புபட்ட யாரேனும் ஒரு நபருக்கு கைமாற்ற தீர்மானிப்பாராயின், எழுத்து மூல கோரிக்கையுடன் சத்தியக்கூற்று மற்றும் தொடர்புடைய ஆவணங்களையும் சேர்த்து, **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் இணைந்த வகையில் தொடர்புடைய அதிகார சபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(8) ஒவ்வொரு வரைபடமும்:

அ. சர்வதேச தரப்படுத்தப்பட்ட மெற்றிக் அளவு தாள்களின் ‘எ’ தொடரில் தயார் தயாரிக்கப்பட்டிருத்தல்.

ஆ. வரைப்படத்துடன் தொடர்புடைய கட்டட அல்லது ஆதன அபிவிருத்திக்கான நோக்கத்தை எடுத்தியம்பும் வகையிலான தலைப்பினை உள்ளடக்கியிருத்தல்

இ. நான்கு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இணைந்த வகையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(9) தொடர்புடைய அதிகாரசபையால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர், வரைபடங்கள், விவரக்குறிப்புகள், தொடர்புடைய ஆவணங்கள் அல்லது தேவையான வேறு தகவல்களின் மேலதிக பிரதிகளை வழங்க வேண்டும்.

(10) விண்ணபத்துடன், அபிவிருத்தித் தளத்தைக் கண்டறிவதற்குப் போதுமானதாக சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கிய வகையிலான மாதிரி வரைப்படத்தினை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

(11) அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் அனுமதிக்கப்பட்ட நில அளவைப்படம், அனுமதிக்கப்பட்ட கட்டட வரைப்படம் மற்றும் தொடர்புடைய அபிவிருத்தி அனுமதி பத்திரம் என்பவற்றின் பிரதிகளை குறித்த அபிவிருத்தி மேற்கொள்ளப்படும் தளத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதுடன் தேவைப்படின் தொடர்புடைய அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அவை காண்பிக்கப்படல் வேண்டும்.

31. ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக, கட்டடங்களின் வகைகள் பின்வரும் அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

| இலக்கம் | வகை | | தளப்பரப்பு (சதுர மீற்றர்) | பண்புகள் |
|---|---|---|---|---|
| | பிரதான வகை | உப வகை | | |
| 31.1 | அ | - | - | • தரைதளத்துடன் நான்கு மாடிகளை (G+4) அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகள் அல்லது 15 மீற்றர் உயரத்திற்கு மேற்பட்ட கட்டடம் |
| 31.2 | ஆ | - | - | • காணியின் எல்லையில் அமையப்பெற்ற சுவர் அல்லது தூண்களைக் கொண்ட கட்டடம்<br>• அடித்தளத்தை கொண்ட ஒரு கட்டடம்<br>• பாரமுனை அத்திவாரம், உருளை வடிவம், கைசன்ஸ் அல்லது அகழ்வு நடவடிக்கை மற்றும் மீள் நிரப்புகை உள்ளடங்கலான மண் வளப்படுத்தல் அல்லது தெப்ப மற்றும் துண்டு அத்திவாரம் உள்ளடங்கலான ஆழ்ந்த அடித்தளத்தைக்கொண்ட எந்த ஒரு கட்டட வகையும்<br>• 10 மீற்றரை விட கூடிய அகலக் கூரையைக் கொண்ட கட்டடம்<br>• மக்கள் ஒன்றுகூடும் இடம் அல்லது ஒரு பொதுக் கட்டடம்.<br>• பண்டகசாலை அல்லது தொழிற்சாலைக் கட்டடம் போன்ற காற்று உணர்திறன் தன்மையைக்கொண்ட கட்டடம்.<br>• உயர்ந்தபட்சம் 20 - 45 பாகை சாய்வுநிலையினை கொண்ட தரைப்பகுதியில் காணப்படும் கட்டடக் கட்டுமானம்<br>• பல்வகை உணர்திறன்களை கருத்தில் கொள்ள வேண்டிய கட்டடங்கள் |

| இலக்கம் | வகை | | தளப்பரப்பு (சதுர மீற்றர்) | பண்புகள் |
|---|---|---|---|---|
| | பிரதான வகை | உப வகை | | |
| 31.3 அ | இ | இ I | பிரிவு ''ஆ'' இல் உள்ளடக்கப்படாத, 500 சதுர மீற்றர் வரையிலான வதிவிட கட்டடங்கள் மற்றும் 400 சதுர மீற்றர் வரையிலான வதிவிடம் அல்லாத கட்டடங்கள் | • அடித்தளமற்ற கட்டடம் அல்லது 2 மீற்றர் ஆழத்திற்கு மேற்படாத அத்திவார அகழ்வினைக்கொண்ட கட்டடம்<br>• நிலத் தடுப்புடன் கூடிய 3 மீற்றர் உயரத்திற்கு மேற்படாத தடுப்புச்சுவர்<br>• உயர்ந்தபட்ச சாய்வானது 20 பாகையை விட குறைவாகக் கொண்ட தரைப்பகுதியில் காணப்படும் கட்டடக் கட்டுமானம் |
| 31.3 ஆ | | இ II | பிரிவு ''ஆ'' இல் உள்ளடக்கப்படாத 400 சதுர மீற்றர் வரையிலான வதிவிட கட்டடம் மற்றும் 300 சதுர மீற்றர் வரையிலான வதிவிடம் அல்லாத கட்டடம் | • அடித்தளமற்ற ஒரு கட்டடம் அல்லது 2 மீற்றர் ஆழத்திற்கு மேற்படாத அத்திவார அகழ்வினைக்கொண்ட ஒரு கட்டடம்.<br>• நிலத் தடுப்புடன் கூடிய 3 மீற்றர் உயரத்திற்கு மேற்படாத தடுப்புச்சுவர்<br>• உயர்ந்தபட்ச சாய்வானது 20 பாகையை விடக் குறைவாகக் கொண்ட தரைப்பகுதியில் காணப்படும் கட்டட கட்டுமானம் |
| 31.3 இ | | இ III | பிரிவு ''ஆ'' இல் உள்ளடக்கப்படாத, 100 சதுர மீற்றர் வரையிலான வதிவிடம் அல்லது வதிவிடம் அல்லாத கட்டடம் | • உயர்ந்தபட்சம் தரைத்தளத்துடன் கூடிய ஒரு மாடிக்கட்டடம்<br>• நிலத் தடுப்புடன் கூடிய 3 மீற்றர் உயரத்திற்கு மேற்படாத தடுப்புச்சுவர்<br>• உயர்ந்தபட்ச சாய்வானது 10 பாகையை விடக் குறைவாகக் கொண்ட தரைப்பகுதியில் காணப்படும் கட்டடக் கட்டுமானம் |

32. அனைத்து கட்டட தள வரைபடங்கள், குறுக்கு வெட்டு முகங்கள் மற்றும் தோற்றப்படங்கள் யாவும் ஒவ்வொரு வரைபடத்திற்கும் குறிப்பிடப்பட்ட கீழ்வரும் அளவுத் திட்டங்களில் வரையப்படல் வேண்டும்:

அ. நிலைய வரைபடம் - 1:1000 அல்லது காணிப்பரப்பிற்குப் பொருத்தமான அளவீடுகளில்

ஆ. கட்டடத்தின் தள மற்றும் குறுக்கு வெட்டு வரைபடங்கள்:- கட்டடத்தின் அளவு பெரிதாக காணப்படும் சந்தர்ப்பங்களில் தொடர்புடைய அதிகாரசபையானது 1:200 இற்கு குறையாத அளவுத்திட்டங்களில் வரைபடங்களை ஏற்றுக்கொள்ள முடியும். இவை தவிர, ஏனைய அனைத்து வரைபடங்கள் யாவும் தரமான தாள்களில் 1: 100 எனும் அளவுத்திட்டத்தில் வரைதல் வேண்டும்.

33. கட்டட அபிவிருத்தி வேலைகளுக்காக, கட்டட அனுமதி பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் சமர்ப்பிக்கப்படும் கட்டட வரைபடம் **ஒழுங்கு விதி 34, 35, 36, 37 மற்றும் 38** பகுதிகளில் பரிந்துரைக்கப்பட்ட நிறங்கள் மற்றும் குறியீடுகளை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

**நிலைய வரைபடம்**

34. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை குறிக்கும் வகையில் நிலைய வரைபடம் தயாரிக்கப்படல் வேண்டும் :

(1) அபிவிருத்தி செய்யப்படும் ஆதனத்தின் எல்லைகள், ஆதனத்தின் நீளம் மற்றும் அகலம், தற்போதுள்ள மற்றும் பிரேரிக்கப்பட்ட கட்டடத்திற்கும் எல்லைக்கும் இடையிலான தூரம் போன்ற தகவல்களின் அளவுப் பிரமாணங்கள் ;

(2) அனுமதிக்கப்பட்ட நிலஅளவைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலஅளவைப்படத்தின் அளவுத்திட்டம், வட திசைக் குறியீடு மற்றும் அயல் ஆதனத்தின் அல்லது கட்டடங்களின் மதிப்பீட்டு இலக்கங்கள் ;

(3) அபிவிருத்தித் தளத்திற்கான அணுகல் வழி ;

(4) அனைத்து வீதி எல்லைக் கோடுகள், கட்டட எல்லைக் கோடுகள், வீதி அகலமாக்கல் எல்லைக் கோடுகள், சேவை வீதிகள், வடிகாலமைப்பு மற்றும் ஏனைய ஒதுக்கீடுகள் மற்றும் வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது தொடர்புடைய அதிகாரசபையால் அல்லது நிறுவனங்களால் குறிப்பிடப்பட்ட ஏனைய விபரங்கள் ;

(5) பிரேரிக்கப்பட்ட கட்டடத்திற்கும் தற்போதுள்ள அனைத்து வடிகாலமைப்பிற்குமிடையிலான தூரம், நீர் மூலங்கள், கழிவு நீர் வழிகள், சாக்கடைக் குழிகள், வேலிகள், தடுப்பு சுவர்கள் மற்றும் காணிப்பகுதியினுள் மற்றும் அயல் காணித்துண்டுகளின் சாய்வுநிலை போன்ற தகவல்களின் அளவுப் பிரமாணங்கள் ;

(6) நீர்பாசன திணைக்களம், இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனுமொரு அதிகார சபையினால், குறித்த காணியானது உயர்ந்தபட்ச வெள்ள நீர்மட்ட அபாயப்பகுதியென அடையாளப்படுத்தப்பட்டிருப்பின் ;

(7) காணி மற்றும் அருகாமையில் அமைந்துள்ள வீதிகளின் தற்போதுள்ள அனைத்து சமஉயரக்கோடுகள் அல்லது இடைநிலை மட்டங்கள் என்பனவற்றினை சாய்வு 45 பாகையினை விட அதிக சரிவையும் மற்றும் 1.5 மீற்றரை விட அதிக உயரத்தினையும் கொண்ட பகுதிகளில் தெளிவாக குறித்துக் காட்டப்படல் வேண்டும் ;

(8) புதிதாக உருவாக்கப்பட்ட சாய்வுநிலை அல்லது அணைக்கட்டு மற்றும் ஏற்படுத்தப்படும் தடுப்புச்சுவர் அல்லது ஏனைய கட்டமைப்புகள், தற்போதுள்ளதை விட உயரமாகக் காணப்படுமாயின் அத்தகைய சாய்வுநிலையை அல்லது அணைக்கட்டை நிலைப்படுத்துவதற்கு ;

(9) பிரேரிக்கப்பட்ட மேற்பரப்பு அல்லது நிலத்தடி வாய்க்கால் மற்றும் கழிவுநீர் அகற்றும் பகுதி அல்லது தற்போதுள்ள வடிகால் அல்லது நீர் மூலத்துடனான தொடர்பு ;

(10) பிரேரிக்கப்பட்ட கழிவு நீர் வழி மற்றும் சாக்கடைக் குழிகள் மற்றும் அவை முறையே தற்போதுள்ள கழிவு நீர்ப் பாதை அல்லது சாக்கடைக் குழிகளுடனான தொடர்பு ;

(11) பிரேரிக்கப்பட்ட தரைத்தோற்ற ஏற்பாடுகள் ;

(12) பிரேரிக்கப்பட்ட அனைத்து அபிவிருத்திகளுக்குமான வாகன நிறுத்துமிட ஏற்பாடுகள்.

**தள வரைபடம்**

35. ஒவ்வொரு மாடி பகுதியின் தள வரைப்படம் மற்றும் கட்டடத்தின் கூரை வரைபடம் என்பன பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்படல் வேண்டும் :

(1) கட்டடத்தின் ஒவ்வொரு பகுதியும் பயன்படுத்தப்படவுள்ள நோக்கத்தினை தெளிவாகக் குறித்தல் ;

(2) கட்டடத்தின் அல்லது கட்டட வேலைகளின் போது மேற்கொள்ளப்படுகின்ற சுவர்கள், மேலடுக்குக் கட்டமைப்பு மற்றும் தள அடுக்குகள் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் வகைகள் மற்றும் அத்தகைய வடிவமைக்கப்பட்ட தள அடுக்குகள் தாங்கக்கூடிய உயர்ந்தபட்ச அனுமதிக்கப்பட்ட உயிர் எடைகள் ;

(3) கட்டடத்தின் அனைத்து அறைகள், அலகுகள், நடைபாதைகள், படிக்கட்டுகள், தீயனைப்பு அலகுகள், மின்தூக்கி வழிகள், விறாந்தைகள் மற்றும் கூரை மேற்தளம், சுவர் மற்றும் தூண்களின் தடிப்புகள் ;

(4) வெவ்வேறு வெவ்வேறு அலகுகள் வேறுபட்ட வர்ணங்களில் தெளிவாகக் குறிப்பிடல் ;

(5) கட்டடத்தினைச் சூழ அமைந்துள்ள காற்று துளைகள், பின்புறப் பகுதி, முற்றம் மற்றும் திறந்த வெளியிடங்களின் அளவுப் பிரமாணங்கள் மற்றும் கட்டடத்தின் வெளிப்புற சுவர்களுக்கும் வீதியின்/ வீதிகளின் மையப்பகுதிக்கும், வீதி ஒதுக்கீடுகள் மற்றும் காணிப்பகுதியினுள் அல்லது அருகாமையிலுள்ள வடிகால் ஒதுக்கீடுகளுக்கும் இடையிலான தூரம் ;

(6) அனைத்து சுவர்கள், தூண்கள், பியர்ஸ் (piers) போன்றவற்றிக்கு இடையிலான அளவுப் பிரமாணங்கள் ;

(7) அனைத்து சுகாதார சாதனங்கள், வெளியேற்று குழாய் மற்றும் வடிகட்டு குழாய்கள் போன்றவற்றின் அமைவிடங்கள் மற்றும் வடிகால் குழாய்களுடன் அவை தொடர்புபடும் விதம் ;

(8) கட்டடத்தின் உட்புறமாக அல்லது அதைச் சுற்றியமைந்துள்ள மேற்பரப்பு வடிகாலின் நீரோட்ட திசையைக் குறிக்கும் அம்புக்குறி மற்றும் நீர் வெளியேற்றும் வெளியக வடிகால் மற்றும் அதன் அளவுகள் ;

(9) ஒழுங்குமுறை தேவைப்பாட்டின் அடிப்படையில் தீயனர்த்த வெளியேற்றுகை, தீயனர்த்த ஒன்றுகூடும் பகுதிகள், தீயனர்த்த லொபிகள் (fire lobbies), தீயனர்த்த வெளியேற்ற குறியீடுகள், தீயனர்த்த இயந்திர அணுகு வழி மற்றும் கடினமான இடங்கள் போன்றன ;

அ. வெளிப்புற தூண்களின் உறிஞ்சல் குழாய்களின் அமைவிடம், உட்செலுத்துதல் மற்றும் தீ அணைக்கும் கருவிகள் போன்றன உள்ளடங்களான கட்டடத்தின் தீயணைப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் ;

ஆ. உள்ளூர் மற்றும் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் மின்னல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சமனிலை பிணைப்பு மற்றும் புவியியல் தேவைகளை நிறுவுதல் ;

இ. கட்டடத்திற்குள் அல்லது வெளியே தீயணைப்புக்காக நீர் சேமிக்குமிடம் ஒதுக்கப்படல்.

(10) குளிரூட்டப்படவுள்ள கட்டடத்தின் ஒவ்வொரு மாடியின் ஒவ்வொரு பாகத்தையும், பொறிமுறை ரீதியில் காற்றோட்டப்படவுள்ள அல்லது அழுத்தம் பிரயோகிக்கப்படவுள்ளதுடன் அப்பாகமானது மையப்படுத்தப்பட்ட தொகுதி ஒன்றின் மூலமாகவோ அல்லது தனி அல்லது கூட்டு அலகு ஒன்றின் மூலமாகவோ குளிரூட்டப்படவுள்ளது என்பதும் சாத்தியமான சந்தர்ப்பங்களில் குளிரூட்டல் உபகரணங்கள் /அலகுகள் மற்றும் பொறிமுறை காற்றோட்ட உபகரணங்கள் போன்றவற்றின் அமைவிடம் பின்தேக்கி நீரை வெளியேற்றும் இடம் என்பவை காட்டப்பட வேண்டும்.

(11) வாகன நிறுத்துமிடம், சாய்வுத்தளம், படிக்கட்டுகள், தரையிறக்கம், மின் உயர்த்தி/நகரும் படிக்கட்டுகள் , மின் பிறப்பாக்கி, மின் மாற்றிகள் அமைவிடங்கள், பொறிமுறை பரிமாற்ற புள்ளிகள், மின் அளவீட்டு புள்ளிகள், கழிவுநீர் தொட்டிகள், உறிஞ்சல் குழிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நீர் சேமிப்பு தொட்டி, மையப்படுத்தப்பட்ட அல்லது பரவலாக்கப்பட்ட நீர் சூடாக்கும் அமைப்புகள், மத்திய வெப்பமாக்கல் அமைப்புச் சாதனம், சேவை குழாய்கள், எரிபொருள் சேமிப்பு, எரிவாயு (LP Gas) விநியோக மத்திய பகுதி, தகவல் தொடர்பு மற்றும் வலையமைப்பு உபகரணங்கள், பாதுகாப்பு மற்றும் தீயனர்த்த எச்சரிக்கை உபகரணங்கள், காப்பரண் மற்றும் அஞ்சல் பெட்டிகளுக்கான இடம் ஒதுக்கப்படல் வேண்டும் .

(12) மழைநீர் சேகரிப்பிற்கு பயன்படுத்தக்கூடிய அனைத்து குழாய்கள் மற்றும் தாங்கிகள், அவற்றின் அளவுப் பிரமாணங்கள், அமைவிடங்கள் மற்றும் சேமிப்புக் கொள்ளளவு மற்றும் நீரோட்ட திசை

(13) கூட்டடைமை சொத்தாக இருப்பின், 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அடுக்குமாடி குடியிருப்பு உரிமைச் சட்டத்திற்கு மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய வரைபடம் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும்.

(14) கழிவகற்றல் பகுதி/பகுதிகளின் அமைவிடங்கள்

**குறுக்கு வெட்டு தோற்ற வரைபடங்கள்**

36. அருகிலுள்ள நிலப்பகுதியின் நிலைமையைத் தெளிவாக விபரிக்கும் வகையிலான குறித்த கட்டடத்தின் குறுக்கு, நெடுக்கு மற்றும் ஏனைய வெட்டுமுக தோற்ற வரைபடங்கள் பின்வரும் விபரங்களை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.

(1) கட்டடத்தின் சகல சுவர்கள், தளங்கள், கூரைகள், உட்கூரைகள், அத்திவாரங்கள், தூண்கள், கிடைத்தூண்கள் (beams), கூரை மேற்றளம் மற்றும் ஏனைய தொடர்புள்ள பாகங்களில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் வகைகள் மற்றும் அவற்றின் தடிப்பு

(2) தற்போதைய நில மட்டத்திலிருந்து புதிதாக பிரேரிக்கப்படும் நிலமட்டம் உயர்த்த அல்லது குறைக்கப்படுமாயின், ஏதேனுமொரு அருகமைந்த காணிகள் அல்லது கட்டடங்களின் உறுதித்தன்மையை எவ்வாறு பாதிக்கும் என்பதுடன் அதிலிருந்து பாதுகாப்பதற்கு எத்தகைய படிமுறைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பவை தொடர்பான புதிய நில மட்டதிக்கான அறிக்கை.

(3) 1.5 மீற்றர் உயரத்திற்கு கூடிய ஏதேனுமொரு தற்போதுள்ள அல்லது தேவையுடைய தடுப்புச் சுவர் அல்லது சாய்வு நிலைகளுக்கும் பிரேரிக்கப்பட்ட கட்டடத்திற்கும், காணி எல்லைகளுக்கும் இடையிலான தூரம் மற்றும் எல்லைக் சுவர் அல்லது சாய்விலிருந்து 10 மீற்றருக்குள் அயலாதனத்தில் காணப்படும் எந்தவொரு தற்போதுள்ள கட்டடமும் என்பவற்றின் அளவுப் பிரமாணங்கள் ;

(4) கதவுகள், யன்னல்கள், அல்லது வேறு காற்றோட்ட வெளிகள் ஒவ்வொரு மாடியினதும் உயரங்கள், உட்கூரை உயரங்கள் மற்றும் தரைத்தள மட்டம் மற்றும் நடைபாதை மட்டம் அல்லது கட்டடத்தின் மட்டம் தற்போதைய நில மற்றும் வீதி மட்டம் அல்லது மட்ட ங்களுடன் சம்பந்தப்பட்ட தரவுகளின் அளவுப் பிரமாணங்கள். கட்டடத்தின் வெளிச்சுவர் மற்றும் காணி எல்லைகளுக்கு இடையிலான தெளிவான தூரங்கள்.

### தோற்றம்

37. கீழ்வரும் தகவல்களை உள்ளடக்கிய வகையில், கட்டடத்தின் முற்புற, பின்புற மற்றும் பக்கப்புறத் தோற்றங்கள் வரையப்படல் வேண்டும்.

(1) கட்டடத்தின் சகல வெளிப்புறச் சுவர்கள், வெளிப்புறத் தூண்கள், கைப்பிடிச் சுவர்கள், கதவுகள், யன்னல்கள் அல்லது காற்றோட்டத் துவாரங்கள், விதானங்கள், மேல்மாடங்கள் (பல்கனிகள்) மற்றும் கூரை ஆகியவற்றின் அளவுப் பிரமாணங்களும் மற்றும் அவற்றின் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் வகைகள் ;

(2) குறித்த ஆதனத்தினுள் காணப்படும் தற்போதுள்ள ஒவ்வொரு கட்டடங்களின் உயரம், தளமட்டங்கள், வெளிப்புறச்சுவர்கள், கதவுகள், யன்னல்கள், கூரை மற்றும் ஏனைய வெளிப்புற மற்றும் புலப்படும் அம்சங்களுடன் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் வகைகள் என்பவற்றை குறித்துக் காட்டும் வகையிலான பகுதித் தோற்றம் அல்லது தோற்றங்கள் அத்துடன் விசேட இடங்களுக்குத் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய அதிகாரசபையால் கோரலாம் ;

(3) அருகாமையிலுள்ள ஒவ்வொரு நடைபாதைகள், விறாந்தை வழி, வீதி மற்றும் கட்டடத்தின் தரை என்பவற்றின் மட்டங்கள் மற்றும் சகல பிரேரிக்கப்பட்ட மட்டங்களின் நடைபாதையின் எதிர்ச்சுவர், விறாந்தை வழி, வீதி மற்றும் தரை.

### கட்டமைப்புசார் விபரங்கள் மற்றும் கணிப்பீடுகள்

38. பிரேரிக்கப்பட்ட கட்டடப் பணிகள் தொடர்பான கட்டமைப்புச் சார் வடிவமைப்பு சுருக்கமானது **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த நபரால் தயாரிக்கப்பட்டு மற்றும் உறுதியளிக்கப்பட்டு தொடர்புடைய அதிகாரசபைக்குச் சமர்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் ஏதேனுமொரு கட்டட பணி தொடர்பான விரிவான கட்டமைப்புச் சார் பொறியியல் வடிவமைப்பு, வடிவமைப்பு சார் கணக்கீடுகளின் பிரதி, மின் உயர்த்தி மற்றும் நகரும் படிக்கட்டுகள் செலுத்தப்படும் சக்தி உள்ளடங்கலாக, ஒரு வரைப்படம் மற்றும் குறுக்கு வெட்டு தோற்ற வடிவத்தில் தொடர்புடைய அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். அத்துடன் ஒரு மின் பிரதியும் தொடர்புடைய அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

39. விபரமான கட்டமைப்புச்சார் பொறியியல் வரைபடங்கள் மற்றும் வடிவமைப்பு கணக்கீடுகள் என்பன இவ்வொழுங்குவிதியின் வழங்கல்களுக்கு அமைவாகவும் கட்டடப் பணிகள் தொடர்பான வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு அவை **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த நபரால் உறுதியளிக்கப்பட்டு பின்வரும் விபரங்களை உள்ளடக்கியதாகக் காணப்படல் வேண்டும்:

1. ஒவ்வொரு மாடி முறைமைக்கும் அல்லது அதன் பகுதிக்குமான உபரிச்சுமை வடிவமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

2. முன்னெடுக்கப்பட்ட ஏதேனும் மண் பரிசோதனைகளின் பெறுபேறுகள், மண்ணின் தாங்குதிறனை நிர்ணயிக்கும் கணிப்பீடுகள் மற்றும் பூரண ஆழ்துளை ஆய்வுகள் மற்றும் மண்ணின் விபரங்கள் என்பவற்றோடு சாய்வு நிலை 10 பாகைக்கு மேல் அல்லது குறித்த மண் நிலையற்றதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், ஒரு மாடி கட்டடத்திற்கும் புவியியல் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும் ;

3. பயன்படுத்தப்படவுள்ள அத்திவாரத்தின் வகை ;

4. பொருந்துமான சந்தர்ப்பங்களில், பாரமுனைகளின் வகை, பாரமுனை துளையிடல் முறைமை மற்றும் பாரமுனை பணிகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ள இயந்திரத்தின் வகை.

## கட்டட சேவைகளுக்கான வடிவமைப்புகள்

*40. (1) 500 சதுர மீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட தளப்பரப்பளவைக் கொண்ட கட்டடம் ஒன்றிக்கு, தொடர்புடைய அதிகார சபை தேவையென கருதும் சந்தர்ப்பத்தில், தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து கட்டட சேவைகள் தொடர்பான அபிவிருத்திக்குச் சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*(2) இலத்திரனியல் பரவலாக்கல், நீர் குழாய் பொருத்துகை, நகரும் படிக்கட்டுகள்/ மின் உயர்த்தி, ஒளியூட்டல் பாதுகாப்பு, காற்றோட்டம் , வளி பதனாக்கி, வெப்பமாக்கல், கழிவு நீர் முறைமைகள், வடிகாலமைப்பு, தீ பாதுகாப்பு, தொலைத்தொடர்பு மற்றும் வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் தீயனர்த்த எச்சரிக்கைகள் போன்றவற்றிற்கான விரிவான கட்டட சேவைகள் பொறியியல் வடிவமைப்புகள் என்பன இவ்வொழுங்குவிதிகள், வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டம்/ ஒழுங்குவிதிகள் மற்றும் பொருந்தக்கூடிய உள்நாட்டு மற்றும் சர்வதேச நியமங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் குறித்த அதிகாரசபையால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில், **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நபர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டு உறுதியளிக்கப்பட்டு வடிவமைப்பு சுருக்கம் ஒன்றின் பிரதி, தொடர்புடைய அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன், தேவைப்படின் ஒரு மின் பிரதியும் தொடர்புடைய அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*(3) **ஒழுங்குவிதி 40 (2)** இல் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான கட்டட சேவைகள் பொறியியல் வடிவமைப்புகள் அந்தந்த கட்டட சேவைகளின் வடிவமைப்பை பிரதிபலிக்க தெளிவாக வரையப்படல் வேண்டும். தற்போதுள்ள கட்டட சேவைகளுக்கான சகல மாற்றங்களும் தெளிவாகக் குறிக்கப்படுவதுடன் புதிய இணைப்புக்கள் சிவப்பு நிறத்தில் காண்பிக்கப்படல் வேண்டும்.*

*41. குறித்த அதிகாரசபையால் அல்லது தொடர்புடைய தீயணைப்பு சேவைகள் திணைக்களங்களால் குறிப்பிடப்பட்ட தீயணைப்புத் தேவைப்பாடுகள்*

*அ. 15 மீற்றர் உயரம் அல்லது ஐந்து (05) அல்லது அதற்கு மேற்பட்ட அலகுகளைக் கொண்ட வதிவிடக் கட்டடங்கள்*

*ஆ. 15 மீற்றர் உயரம் அல்லது 500 சதுர மீற்றருக்கு மேற்பட்ட வதிவிடம் அல்லாத நோக்கினையுடைய கட்டடங்கள்*

*இ. பொதுக்கட்டடங்கள்*

## தற்போதுள்ள கட்டடம்

*42. தற்போதுள்ள கட்டடம் ஒன்றில் திருத்தம் அல்லது மாற்றம் அல்லது அதில் ஏதேனும் சேர்க்கையை மேற்கொள்ளல் போன்ற ஏதேனும் கட்டடப் பணிகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கட்டடப் பணிகளுக்குரிய வரைபடம் அல்லது வரைபடங்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன் தொடர்புடைய அதிகாரசபையால் கோரப்படின், அத்தகைய வரைபடங்கள் **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நபர் ஒருவரினால் பரிசீலிக்கப்பட்டு அக்கட்டடம் இத்தகைய திருத்தம், மாற்றம் அல்லது சேர்த்தல் காரணமாக ஏற்படும் அதிகரிப்பு அல்லது மாற்றங்களைத் தாங்கும் திறன் கொண்டது என உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழானது இணைக்கப்படல் வேண்டும்.*

*43. (1) தற்போதுள்ள கட்டடப் பணிகளில் மேற்கொள்ளப்படும் சகல மாற்றங்கள் தெளிவாகக்காட்டப்படுவதுடன் புதிய இணைப்புக்கள் சிவப்பு நிறத்தில் காண்பிக்கப்படல் வேண்டும்.*

*(2) தற்போதுள்ள கட்டடத்தின் அகற்றப்படவுள்ள சகல பகுதிகளும் வரைபடங்களில் கறுப்பு நிறப் புள்ளிக் கோடுகளால் காண்பிக்கப்படல் வேண்டும்.*

## பசுமைக் கட்டடங்கள்

*44. (1) தொழிற்துறைக் கட்டடங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தவிர்ந்த 1000 சதுர மீற்றர் தளப்பரப்பைக் கொண்ட ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்படும் **பசுமை கட்டடச் சான்றிதழை** பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

(2) பசுமை கட்டட மதிப்பீட்டு சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் யாவும் **அட்டவணை 03** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நபர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டு **அட்டவணை 1 இன் படிவம் "இ"** மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் இணைந்த வகையில் **அட்டவணை 01 இன் படிவம் "உ"** இல் குறிப்பிட்டதற்கு இணங்க நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

(3) **ஒழுங்குவிதி 44(1)** இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் **அட்டவணை 5** இல் குறிப்பிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பசுமைக் கட்டட மதிப்பீட்டின் **"பசுமை சான்றிதழ் நிலை"** க்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு விண்ணப்பங்களும் **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்ட கட்டணங்களுடன் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## பகுதி IV

### கட்டடத்தின் திட்டமிடல், கணக்கீடு மற்றும் வடிவமைத்தல்

45. எந்தவொரு காணித் துண்டிலும் அனுமதிக்கப்பட்ட அபிவிருத்திக்கான தளப்பரப்பு பின்வரும் காரணிகளில் தங்கியிருத்தல் வேண்டும் :

அ. காணியின் விஸ்தீரணம் ;

ஆ. பாவிப்புரித்தைக் கொண்ட வீதி ஒன்றோடு நேரடியாக இணைந்து காணப்படும் காணித்துண்டொன்றின் எல்லையின் நீளம் (காணியின் முகப்பு) ;

இ. காணிக்கான அணுகலை/ அணுகுவழியை வழங்கும் வீதியின் அகலம் ;

ஈ. குறித்த ஒரு பகுதிக்கு குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி அடர்த்தியைக் குறிக்கும் வலயக் காரணி ;

உ. ஏனைய பொருத்தமான சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளினால் அமுல்படுத்தப்படும் ஏனைய நிபந்தனைகள்.

46. (1) ஏதேனுமொரு காணித்துண்டில் அமையப்பெற்ற கட்டடத்தின் அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு :

அ. ஒரு வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் காணப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வலயக் காரணி தொடர்பாக, **அட்டவணை 6 இன் படிவம் "அ" மற்றும் "ஆ"** ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

ஆ. ஒரு வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் காணப்படாத சந்தர்ப்பத்தில், மாதிரி அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வலயம் தொடர்பாக **அட்டவணை 6 இன் படிவம் "இ" மற்றும் "ஈ"** ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

(2) அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பானது, ஒழுங்குவிதி தேவைப்பாட்டிற்கமைவான வாகன தரிப்பிட வசதிகள், குளிரூட்டப்பட்ட ஆலை மற்றும் கட்டடப் பயன்பாட்டிற்கு சேவையளிக்கும் ஏனைய சேவைஇயந்திரங்கள் போன்றவற்றிற்காக ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர்த்து கணக்கிடப்படும்.

(3) **ஒழுங்குவிதிமுறை 73** இல் குறிப்பிடப்பட்ட வாகன நிறுத்துமிட ஒழுங்குவிதி தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட வாகன நிறுத்துமிட பகுதிகள் அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு கணக்கிட லினுள் உள்வாங்கப்படும்.

(4) கூரையின் மேற்றளப்பகுதியானது, அத்தகைய கட்டடத்தின் துணை வசதிகள் தவிர்ந்த ஏதேனுமொரு நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படின், அது அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பிற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(5) 1.2 மீற்றருக்கு மேற்பட்ட வகையில் அமைக்கப்படும் விறாந்தை, மேல்மாடம் மற்றும் முனைநெம்பு போன்றவை அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பிற்குள் உள்வாங்கப்படும்.

47. பிரேரிக்கப்பட்ட அபிவிருத்திக்கான அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பானது, காணித் துண்டின் வீதி எல்லைக்கோட்டு/ கோடுகளினுள் வரும் பகுதியைத் தவிர்த்து கணக்கிடப்படல் வேண்டும்.

*48.* *நிலமூடுகையானது ;*

*அ.* *ஒரு வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், 50 மீ அல்லது அதற்கு மேற்பட்ட உயரத்தைக் கொண்ட கட்டடங்களுக்கான நில மூடுகையானது, குறித்த வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் அல்லது வரைபுபடுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் அல்லது அபிவிருத்தி வாழிகாட்டல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டை விட குறைவாக காணப்படின் அத்தகைய தேவைப்பாடுகள்* ***அட்டவணை 6 இன் படிவம்*** ***"உ"*** *இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும்.*

*ஆ.* *ஒரு வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் காணப்படாத சந்தர்ப்பத்தில்* ***அட்டவணை 6 இல் படிவம் "ஈ"*** *யுடன் இணங்கியிருத்தல் வேண்டும்.*

*49.* *பாவிப்புரித்தைக் கொண்ட வீதி ஒன்றிற்கான வீதி எல்லைக்கோட்டின் அகலமானது அவ்வீதியின் மொத்த அகலமாக கருதப்பட்டு, குறித்தக்காணிக்கான அனுமதிக்கக்கூடிய தளப்பரப்பு வீதம் தீர்மானிக்கப்படும். மேலும் குறித்த வீதிக்கான வீதி எல்லைக்கோடுகள் அமையப்பெறாத சந்தர்ப்பத்தில், குறித்தக்காணி அணுகலைப் பெறும் அவ்வீதியின் பௌதீக அகலமானது அபிவிருத்திக்கான அகலமாக கருதப்படும்.*

*50.* *காணியானது ஒன்றுக்கு மேற்பட்ட பாவிப்புரித்தைக் கொண்ட வீதிகளை எதிர்கொண்டுள்ள நிலையில், அத்தகைய காணித்துண்டுகளுக்கான அனுமதிக்கக்கூடிய தளப்பரப்பை கணக்கிடுவதற்கான வீதி முகப்பானது சூழ்நிலைக்கு பொருந்தக்கூடிய வகையில் பின்வரும் முறையில் கருத்திற் கொள்ளப்படும்.*

*(1)* *காணியானது குறைந்தபட்சம் 6 மீ அல்லது அதற்கு மேற்பட்ட அகலத்தைக் கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுயாதீன வீதிகளை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில், குறித்த வீதி முகப்பானது, பிரதான அணுகல் வீதிகளை எதிர்கொள்ளும் வீதி முகப்பின் மொத்த அளவு மற்றும் ஏனைய வீதிகளை எதிர்கொள்ளும் வீதி முகப்பின் மொத்த அளவு என்பவற்றினை கருத்திற் கொண்டு, பிரதான அணுகல் வீதியின் அகலத்திற்கும் அந்தந்த மற்ற வீதிகளின் அகலத்திற்கும் இடையிலான வீதத்திற்கு விகிதாசாரமாக, கணக்கிடப்படும்.*

*(2)* *காணியானது 6 மீட்டருக்கு குறைந்த அகலத்தைக் கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுயாதீன வீதிகளை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில், குறித்த வீதி முகப்பானது, பிரதான அணுகல் வீதிகளை எதிர்கொள்ளும் வீதிமுகப்பின் மற்றும் ஏனைய வீதிகளின் அகலங்கள் என்பவற்றின் மொத்த அளவாகக் கணக்கிடப்படும்.*

*(3)* *காணியானது, இரண்டு வீதிகளுடன் இணைக்கப்படாமல், பிரதான வீதியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணை வீதிகளை எதிர்கொள்ளுமாயின், குறித்த வீதி முகப்பானது பிரதான அணுகல் வீதியை எதிர்கொள்ளும் வீதி முகப்பின் மற்றும் அத்தகைய துணை வீதிகளின் அகலங்கள் என்பவற்றின் மொத்த அளவாகக் கணக்கிடப்படும்.*

*51.* *காணித்துண்டொன்றில் கட்டட எல்லைக்கோட்டிற்குள் வரும் பகுதியானது அக்காணித்துண்டின் பரப்பில் 80% அல்லது அதற்கு மேற்படின் அத்தகைய பகுதியை கையகப்படுத்தும் வரை அக்காணியினுள் உயர்ந்தபட்சம் 2 மாடிகள்* (G+1) *கொண்ட கட்டட அபிவிருத்தியானது அனுமதிக்கப்படும். அக் காணியை கையகப்படுத்தும் போது, தொடர்புடைய அதிகாரசபை/ நிறுவனத்தால் கட்டடம் மற்றும் நிலம் ஆகிய இரண்டிற்கும் இழப்பீடு வழங்கப்படலாம்.*

*52.* *காணித்துண்டொன்றில் கட்டட எல்லைக்கோட்டிற்குள் வரும் பகுதியானது அக்காணித்துண்டின் பரப்பில் 20% அல்லது அதற்கு மேற்படின், இவ்வொழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை திட்டமிடல் குழு தளர்த்தலாம்.*

*53.* *ஏதேனுமொரு பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியானது அப்பிரதேசத்தின் வாகன போக்குவரத்து ஓட்டம், சுற்றுப்புறங்களின் சுற்றுச்சூழல் நிலைமைகள், சமூக மற்றும் கலாச்சார மதிப்புகள், தொல்பொருள் மற்றும் வரலாற்று மதிப்புகள், கட்டடக்கலை மற்றும் அழகியல் மதிப்புகள், தீ அபாயம், பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் குறித்த பிரதேசத்தின் தோற்றம் மற்றும் பண்பு என்பவற்றில் ஏதேனும் பாதக விளைவுகளை ஏற்படுத்துமாயின் தொடர்புடைய அதிகாரச்சபையானது, அபிவிருத்திக்கென பிரேரிக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவினை மட்டுப்படுத்த இயலும் என்பதோடு அத்தகைய அபிவிருத்திக்கான பிரேரணைகள் ,இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பிடப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு இயைந்த வகையில் இருத்தல் வேண்டும்*

*54.* *எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குமான எதிர்பார்க்கப்படும் பசுமை கட்டட மதிப்பீட்டு மட்டம் அட்டவணை 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கணக்கிடப்படும்.*

**திறந்தவெளிகள் மற்றும் கட்டடப் பின்நகர்வுகள்**

55. (1) அனைத்து பிரேரிக்கப்பட்ட அபிவிருத்திகளின் பிற்பக்க மற்றும் பக்க இடைவெளிகள், **அட்டவணை 6 இன் படிவம் "உ"** இல் குறிப்பிடப்பட்டதற்கு அமைய பேணப்படல் வேண்டும்.

(2) கட்டடத்தின் பராமரித்தல் அல்லது அயல் ஆதனங்களிலிருந்து வேறுபடுத்தல் போன்ற நோக்கங்களுடன் காணிப்பகுதியொன்றினுள் திறந்தவெளி ஒன்று ஒதுக்கப்படுமாயின் அத்தகைய திறந்த வெளியானது 1.0 மீ அகலத்திற்கு குறைவடையாமல் இருத்தல் வேண்டும்.

(3) காணித்துண்டொன்றினை அண்மித்திருக்கும் குறித்த ஒரு வீதி/வீதிகளுக்கான கட்டட எல்லைக் கோடு, வீதி எல்லைக் கோடு அல்லது வேறு ஏதேனும் வீதி ஒதுக்கீடு காணப்படாவிடத்து, அத்தகைய காணித்துண்டினுள் பிரேரிக்கப்பட்ட கட்டட அபிவிருத்தியானது அத்தகைய வீதி/வீதிகளின் ஓரத்திலிருந்து 1 மீ பின் நகர்வை பராமரித்தல் வேண்டும்.

(4) அ. ஒழுங்குவிதி தேவைப்பாட்டின் அடிப்படையில் கட்டடத்திற்கு வெளியே பேணப்படும் 50% திறந்தவெளியானது, கடினமான உறிஞ்சல் தன்மையற்ற பொருட்களால் மூடப்படாமல், பசுமை தரைப்பகுதியாக அல்லது பொருத்தமான மென்மையான தரைத்தோற்றப் பொருட்களால் பராமரிக்கப்படல் விரும்பத்தக்கதாகும்.

ஆ. **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நபரால் தயாரிக்கப்பட்ட, பிரேரிக்கப்பட்ட அபிவிருத்திக்கான தரைத்தோற்றத் திட்டம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

i. அத்தகைய அபிவிருத்தியானது 10,000 சதுர மீற்றர் தளப்பரப்பினை விட அதிகரிக்குமாயின் அல்லது

ii. அத்தகைய அபிவிருத்தியானது 1 ஹெக்ரெயருக்கு மேற்பட்ட காணித் துண்டினுள் பிரேரிக்கப்பட்டிருப்பின் அல்லது

iii. வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டம் அல்லது வழிகாட்டல் திட்டத்தில் விசேட தரைத்தோற்ற தேவைப்பாடுகள் குறிக்கப்பட்ட வலயத்திற்குள் குறித்த அபிவிருத்தியானது அமைந்திருப்பின்

56. (1) ஒழுங்கற்ற வடிவங்களை கொண்ட காணித்துண்டொன்றினுள் அபிவிருத்தியானது பிரேரிக்கப்பட்டிருப்பின் அல்லது கட்டடத்தின் பின்புறத்தில் முழுமையான அகலத்திற்கும் திறந்த வெளி ஒன்றினை ஏற்பாடு செய்வது நடைமுறைச் சாத்தியமற்றதாகவோ அல்லது குறித்த தளமானது பல்வேறு வீதிகளுடன் இணைக்கப்பட்டவகையிலும் அமையும் சந்தர்ப்பத்தில், தொடர்புடைய அதிகார சபையானது பொருத்தமானது என கருதுமாயின் கட்டடத்தின் பின்புறத்தில் திறந்தவெளிக்கான மாற்று வழிகளை வழங்க அபிவிருத்தியாளரை வழிநடத்தலாம்.

(2) ஒழுங்கற்ற வடிவிலமைந்த ஏதேனுமொரு காணித்துண்டு குறைந்தபட்சம் 3.0 மீ அளவிலான முகப்பைக் கொண்டிருக்கும் அதே வேளை காணியின் அகலமானது 6.0 மீ ஆக ஆரம்பிக்கும் பகுதியிலிருந்து (காணியினை உள்நோக்கியதாக) குறித்த காணித்துண்டிற்கான அபிவிருத்தி அனுமதிக்கப்படலாம்.

(3) காணித்துண்டொன்றின் பின்பக்க இடைவெளியானது வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டம் அல்லது மாதிரி அபிவிருத்தி திட்டம் அல்லது தொடர்புடைய அதிகார சபை அல்லது வேறு நிறுவனங்களால் குறிப்பிடப்பட்டதற்கு அமைய ஆறு, கால்வாய், ஈரநிலம், காடு அல்லது ஒத்த இயற்கை அம்சங்களின் ஒதுக்கீடுகளுக்கு அருகாமையில் காணப்படுமாயின், அத்தகைய ஒதுக்கீடுகள் இவ்வொழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட காணிக்கான பிற்பக்க இடைவெளி தேவைப்பாட்டை கணக்கீடு செய்வதில் கருத்தில் கொள்ளப்படும்.

57. (1) காணித்துண்டின் எல்லையில் நிர்மாண நடவடிக்கையை மேற்கொள்ளும் ஏதேனும் ஒரு கட்டட பணிகளின் போது, அத்தகைய கட்டுமானமானது ஒரு மறைச்சுவராக காணப்படல் வேண்டும் என்பதோடு அத்தகைய நிர்மாண பணிகளை மேற்கொள்வதற்கு முன் அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் அத்தகைய கட்டுமானங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்காக பின்வருவனவற்றோடு சேர்த்து அதிகார சபைக்கு விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த நபரால் குறித்த கட்டுமானமானது அயலாதனங்களுக்கு எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தாது என்பதற்கான எழுத்துமூல பிரகடனம்.

ஆ. கட்டடமானது 4 மாடிகளுக்கு மேற்பட்டிருப்பின் குறித்த அதிகாரசபையின் கோரிக்கைக்கிணங்க, அயலாதனங்களுக்கு ஏற்படும் அனைத்து சேதங்களையும் ஈடுசெய்யும் வகையிலான ஒரு காப்புறுதிக்கொள்கை

இ. **அட்டவணை 1 இன் பின்னிணைப்பு** VII **படிவம் "இ"** இல் குறிப்பிடப்பட்டபடி இழப்பெதிர்க்காப்புக் கடிதம்.

(2) வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் அல்லது வரைபுபடுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களை தவிர, வாயிற்கதவு நீங்கலாக எல்லைச் சுவரின் அல்லது எல்லையில் ஏற்படுத்தப்படும் ஏதேனும் ஒரு நிர்மாணங்களின் அதிகபட்ச உயரம் நில மட்டத்திலிருந்து 2.0 மீற்றருக்கு மிகையாகாது இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் உயிர்வேலிகள் (foliage or hedges etc.), இரும்பு வேலிகள் அல்லது கம்பி வேலிகள் அனுமதிக்கப்படலாம்.

(3) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, குறித்த காணியின் எல்லைக்கும், அடித்தளத்தின் அகழ்வுக்கோட்டிற்கும் இடையில் குறைந்தபட்சம் 1 மீற்றர் தூர இடைவெளி பேணப்படல் வேண்டும்:

அ. கட்டமைப்பு/ புவித்தொழில்நுட்பவியல் பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் குறித்த 1 மீற்றர் தூர இடைவெளியானது அதிகரிக்கப்படலாம்.

ஆ. காணித்துண்டொன்றில் கட்டட எல்லைக்கோடு, வீதி எல்லைக்கோடு அல்லது வேறு ஏதேனும் வீதி ஒதுக்கீடுகள் செல்வாக்குச்செலுத்துமாயின், அத்தகைய அடித்தள அகழ்வானது கட்டட எல்லைக்கோடு, வீதி எல்லைக்கோடு அல்லது வேறு ஏதேனும் வீதி ஒதுக்கீடுகளின் மட்டம் வரை அனுமதிக்க முடியும் மற்றும்

இ. அடித்தளத்துடன் கூடிய கட்டடம் தொடர்பான ஏதேனும் ஆழ்துளை அத்திவார பணிகளில் ஈடுபட்டால், அத்தகைய வேலைக்கான அனுமதியினை/ சிபாரிசினை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

58. (1) அனைத்து கட்டுமானங்களும் வீதி எல்லைக் கோடுகள், கட்டட எல்லைக்கோடுகள் அல்லது வேறு ஏதேனும் வீதி ஒதுக்கீடுகள், தொடர்புடைய வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது வரைபுபடுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தில் அல்லது தொடர்புடைய அதிகாரசபையால் அல்லது நிறுவனங்களால் குறித்துரைக்கப்பட்டதற்கு இயைந்திருத்தல் வேண்டும்.

(2) வீதி எல்லைக் கோட்டினுள் அமையும் காணிப்பகுதியினை உரிமையாளர் அன்பளிப்பாக வழங்குவதற்கு இணங்குவாராயின், தொடர்புடைய அதிகாரசபையானது அபிவிருத்திக்கான அனுமதிக்கக்கூடிய தளப்பரப்பினை தீர்மானிக்கும் பொழுது, வீதி எல்லைக்கோட்டின் முழு அகலத்தையும் பௌதீக அகலமாக கருத்தில் கொள்ள முடியும்.

59. ஏதேனுமொரு கட்டடத்தின் எந்த ஒரு பகுதியும் அல்லது மேலதிக கட்டடச் சேர்க்கையும் பின்வரும் அம்சங்களுக்குள் நீட்டப்படலாகாது: -

அ. ஒரு வீதியின் மீது ; அல்லது

ஆ. வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது வரைபுபடுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தில் அல்லது தொடர்புடைய அதிகாரசபையால் அல்லது நிறுவனங்களால் குறித்துரைக்கப்பட்ட கையகப்படுத்தல் எல்லைக் கோடு/ வீதி எல்லைக் கோடுகளுக்கு அப்பால்.

60. (1) கட்டடம் ஒன்றின் மேற்தாங்கல் பகுதி, மேல் விதானங்கள், பக்கத்தள கட்டட பிரிவு மற்றும் ஏனைய சூரிய நிழல் அமைப்புகள் போன்றன கட்டட எல்லைக் கோட்டிற்கு அப்பால் அல்லது பிற்பக்க இடைவெளியை நோக்கி உயர்ந்தபட்சம் 1.2 மீற்றர் வரை அனுமதிப்பதோடு இது வீதி எல்லைக் கோட்டினை தாண்டி செல்லாதவாறு அமைதல் வேண்டும்.

(2) ஒரு மேல்மாடம் அல்லது மேற்தளமானது அயலாதனத்தை எதிர்கொள்ளும் வகையில் அமையப்பெறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய மேல்மாடம் அல்லது மேற்தளத்தின் வெளிப்புற விளிம்பிலிருந்து தொடர்புடைய எல்லை வரை குறைந்தபட்சம் 1.0 மீற்றர் தூரம் பேணப்படல் வேண்டும்.

(3) மேல்மாடம் அல்லது இணையான பயன்பாடுகளுக்காக ஒதுக்கப்படும் பகுதியானது அயலாதனத்தின் எல்லை வரை கட்டப்பட்டிருப்பின், அத்தகைய எல்லையானது ஒரு மறைப்புச் சுவராக கருத்தில் கொள்ளப்பட்டு, குறைந்தபட்சம் 2 மீற்றர் உயரமுடைய பாதுகாப்பு சுவரொன்று நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

61. (1) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்திற்காக, கட்டடத்தின் பிற்பக்க இடைவெளியானது கட்டடம் அமைந்துள்ள குறித்த காணித்துண்டொன்று அணுகுதலைப்பெறும் வீதிக்கு தூரமாகவுள்ள பக்கம் என கருத்தப்படல் வேண்டும்.

(2) கட்டடமானது ஒன்றுக்கும் மேற்பட்ட வீதிகளிலிருந்து அணுகுதலை பெறும் சந்தர்ப்பத்தில், பொருத்தமான அதிகார சபையால் வழிநடத்தப்படாத விடத்து, காணித்துண்டொன்று பாவிப்புரித்தைக் கொண்ட அகலம் கூடிய வீதியின் தொலைவில் அமைந்துள்ள பகுதியானது கட்டடத்தின் பிற்பக்க இடைவெளியாக கருதப்படும்.

(3) கட்டடத்தின் பின்பக்க இடைவெளியானது, குறித்த கட்டடம் அமையப்பெற்ற காணித்துண்டு பாவிப்பு உரித்தைக் கொண்ட 6 மீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட அகலத்தையுடைய ஒரு பொது அல்லது தனியார் வீதி ஒன்றினை அண்மித்து காணப்படுமாயின் பிற்பக்க இடைவெளியை வழங்க வேண்டியது கட்டாயமற்றதாகும்.

(4) **ஒழுங்குவிதி 61 (1) மற்றும் 61 (2)** இல் குறிப்பிடப்பட்டுள்ள, பின்பக்க இடைவெளியின் ஒளியூட்டல் மற்றும் காற்றோட்டத்திற்குத் தடையை ஏற்படுத்தும் வகையில், அவசர வெளியேறுகைக்கான திறந்த துவாரம் அல்லது சுழல் படி தவிர்ந்த வேறு ஏதேனும் கட்டுமானங்கள் அமையுமாயின், அவை அனுமதிக்கப்படமாட்டது.

(5) 3 மீற்றர் அல்லது அதற்கு அதிகமான அகலத்தைக் கொண்ட பிற்பக்க இடைவெளி காணப்படும் சந்தர்ப்பத்தில் பின்பக்க இடைவெளியின் பரப்பில் 50% ற்கு மேற்படாத அளவில் நீச்சல் தடாகத்திற்கு அனுமதி வழங்க முடியும்.

62. கட்டடத்தின் ஏதேனுமொரு மூடப்பட்ட/ மூடப்படாத நடைபாதை, முன்றல் அல்லது விராந்தையானது:

i. கட்டடத்திற்குரிய காணித் துண்டினுள் மாத்திரம் அமைந்திருத்தல் வேண்டும் மற்றும்
ii. வீதியை அண்மித்துள்ள கட்டடத்தின் முழுப் பாகத்திற்கும் தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்புடைய அதிகார சபையின் வழிநடத்தலுக்கு அமைவாகவோ இருத்தல் வேண்டும்.

63. இரு வீதிகளின் சந்திப்பு பகுதியில் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு அத்தகைய கட்டடத்தின் மூலையின் சாய்வு அல்லது வளைவின் வீதமானது வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம், மாதிரி அபிவிருத்தித்திட்டம் அல்லது அபிவிருத்தி வழிகாட்டல் திட்டம் போன்றவற்றில் குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில், அத்தகைய கட்டடத்தின் மூலை வளைவு அல்லது சாய்வானது **ஒழுங்குவிதி 22 ற்கு** அமைவாக, வீதி மட்டத்திற்கு மேல் 6.0 மீற்றர்களுக்கு குறையாத உயரத்தை கொண்டு வளைக்கப்படல் வேண்டும்.

64. கட்டடம் ஒன்றினை பராமரிப்பதன் பொருட்டு நடைபாதை அல்லது ஏதேனுமொரு திறந்தவெளி வழங்கப்படுமாயின் அத்தகைய நடைபாதை அல்லது இடமானது வேறு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் இயலாது. அத்தகைய நடைபாதை அல்லது திறந்தவெளிகளின் மேலே முழு நீளத்திற்கோ அல்லது பகுதி அளவிலோ கட்டப்படும் கூரை அமைப்பானது இவ் நடைப்பாதை அல்லது திறந்தவெளியின் இட அளவைக் குறைக்குமாயின் அவை அனுமதிக்கப்பட மாட்டாது.

## கட்டடங்களின் உள்ளக அளவு பிரமாணங்கள்

65. வதிவிட கட்டடமொன்றிலுள்ள ஏதேனுமொரு வசிக்கக்கூடிய அறையின் தளப்பரப்பானது **அட்டவணை 7** இல் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.

66. (1) வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில், வரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தில் அல்லது தொடர்புடைய நிறுவனங்களினால் குறிப்பிடப்பட்டால் அன்றி, கட்டடத்தின் உயரம் மற்றும் மாடிகளின் எண்ணிக்கையானது இவ்வொழுங்குவிதிகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.

(2) வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில், வரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் அல்லது அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டால் அன்றி, தற்போதுள்ள காணித்துண்டொன்றினுள் உள்ள கட்டடத்தின் அதிகபட்ச உயரமானது பின்வரும் சந்தர்ப்பங்களில் 10.0 மீற்றரை அதிகரித்தலாகாது:

அ. காணியின் விஸ்தீரணம் 150 சதுர மீற்றருக்கும் குறைவாக இருத்தல் ; அல்லது
ஆ. காணியானது 3 மீற்றருக்கு குறைவான அகலத்தைக்கொண்ட வீதி ஒன்றிலிருந்து அணுகுதலை பெறல் ; அல்லது
இ. குறித்த காணியின் வீதி முகப்பானது 6.0 மீற்றருக்கு குறைவாக இருத்தல்.

67\. (1) வதிவிடக் கட்டடத்திலுள்ள அறையின் குறைந்தபட்ச உயரமானது:

அ. வரவேற்பறைகள், படுக்கையறைகள் மற்றும் சமயலறைகளுக்கான சராசரி உயரமானது 2.8 மீற்றருக்கும் தாழ்ந்த மட்டத்திலிருந்து 2.4 மீற்றருக்கும் குறைவடைதல் ஆகாது ;

ஆ. குளியலறைகள், கழிவறைகள், நீர் ஒதுக்கிடங்கள், விறாந்தைகள், மேல்மாடங்கள், மேற்தளங்கள் மற்றும் வாகனக் கூடங்கள் போன்றவற்றின் உயரமானது 2.2 மீற்றருக்கு குறைவடைதல் ஆகாது.

(2) வியாபாரக் கட்டடம் ஒன்றின் தரைத் தளத்திலுள்ள அறையின் உயரமானது 3.0 மீற்றருக்கு குறையாமலும் மற்றும் மேற் தளத்திலுள்ள அறையின் உயரமானது சராசரியாக 2.8 மீற்றருக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும் என்பதோடு தாழ்வான மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.4 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(3) பாடசாலை ஒன்றிலுள்ள வகுப்பறையின் சராசரி உயரமானது 3.5 மீற்றருக்கு குறையாமலும் மற்றும் தாழ்வான மட்டத்திலிருந்து 2.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(4) வைத்தியசாலை ஒன்றில் நோயாளர்கள் தங்குமிடமாக பயன்படுத்தப்படும் அறையின் சராசரி உயரமானது 3.5 மீற்றருக்கு குறையாமலும் மற்றும் தாழ்வான மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.8 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(5) தொழிற்சாலை ஒன்றிலுள்ள அறையின் சராசரி உயரமானது 3.5 மீற்றருக்கு குறையாமலும் மற்றும் தாழ்வான மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.8 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(6) அ. **ஒழுங்குவிதிகள் 67 (1) தொடக்கம் 67 (5)** வரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை தவிர வேறு ஒரு கட்டடத்தின் தரைத் தளத்திலுள்ள அறையின் உயரமானது 2.8 மீற்றருக்கு குறையாமலும் மேல் தளத்திலுள்ள எந்த ஒரு பகுதியின் உயரமானது 2.4 மீற்றருக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

ஆ. **ஒழுங்குவிதி 67 (6-அ)** இல் குறிப்பிடப்பட்டதைத் தவிர்த்து, ஏதேனுமொரு மேற்தளத்தளமானது மூடப்பட்ட தோட்டமாகப் பயன்படுத்தப்படுமாயின், அத்தகைய தோட்டப்பகுதியின் உயரமானது 2.6 மீற்றருக்கு அதிகரித்தலாகாது.

(7) அ. அடித்தளம் அல்லது பகுதி அடித்தள மாடியின் குறைந்தபட்ச தெளிவான உயரமானது வாகன தரிப்பிடங்கள், களஞ்சியங்கள் மற்றும் பயன்பாட்டு சேவைகளாயின் 2.4 மீற்றருக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

ஆ. அடித்தளமானது ஒழுங்குவிதி 67(7 -அ) இல் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு மாறாக பயன்படுத்தப்படுமாயின், தொடர்புடைய அதிகாரசபையால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் ஏனைய நிபந்தனைகளுக்கு இயைந்த வகையில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(8) **ஒழுங்குவிதி 67(6) மற்றும் 67(7)** இல் குறிப்பிடப்பட்டதற்கு மாறாக, கட்டடத்தின் தரைத்தளத்தை தவிர வேறு ஏதேனும் ஒரு பகுதி வாகன தரிப்பிட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட தீர்மானிக்கப்பட்டிருப்பின், அத்தகைய கட்டடத்தின் அல்லது பகுதியின் உட்கூரை, விட்டங்கள், குழாய்கள், தெளிப்பான், மேற்பகுதி (கதவுநிலையின்), சேவை குழாய்கள், ஒளியூட்டல் மற்றும் பொறுத்துகைகள் போன்றவற்றின் உள்ளகப்பகுதியானது குறைந்தபட்சம் 2.4 மீட்டர் உயரத்தை விட குறைவடைந்திருத்தல் ஆகாது.

(9) கட்டடத்தினுள் கட்டப்பட்ட ஏதேனுமொறு மூடிய நடைபாதையின் குறைந்தபட்ச உயரம் 2.8 மீற்றருக்கு குறைவடையாமல் இருத்தல் வேண்டும் என்பதோடு அத்தகைய நடைபாதையின் உள்ளக உயரம் 2.5 மீற்றரையும் விட குறைவடையாத சந்தர்ப்பத்தில் பின்வரும் விடயங்கள் அனுமதிக்கப்படலாம்:

அ. சீமெந்துவளை ;

ஆ. படிக்கட்டுகள் மற்றும் தாங்குமேடை ;

இ. மறைப்பு ; அல்லது

ஈ. அடையாளப் பலகைகள் அல்லது விளம்பரம் ; அல்லது

உ. மின்குமிழ்கள், மின்விசிறிகள் மற்றும் ஒத்த கூறுகள்.

68. (1) படிகளின் குறைந்தபட்ச அகலமும் மற்றும் மிதிகளினதும் மற்றும் உயரெழும்பிகளினதும் குறைந்தபட்ச அளவுப் பிரமாணங்கள் **அட்டவணை 8** இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இயைந்திருத்தல் வேண்டும்.

(2) அ. கட்டடமானது பொது கட்டடமாக இல்லாத சந்தர்ப்பத்தில், கை பிடி ஒன்றின் குறைந்தபட்ச உயரம் 1.0 மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

ஆ. கட்டடமானது பொது கட்டடமாக அமையும் சந்தர்ப்பத்தில், கை பிடி ஒன்றின் குறைந்தபட்ச உயரம் 1.1 மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

69. (1) நான்கு (04) மாடிகளுக்கு அல்லது 15 மீற்றர் உயரத்திற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கான, நிலைக்குத்து போக்குவரத்து முறைமையானது அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள, தொடர்புடைய தகுதி வாய்ந்த நபரால் வடிவமைக்கப்பட்டு **ஒழுங்குவிதிமுறை 69 (2) தொடக்கம் 69 (7)** வரை குறிப்பிடப்பட்டுள்ள தேவையான நியமங்களுக்கு இணங்க நிறுவப்படல் வேண்டும்.

(2) நிலைக்குத்து போக்குவரத்து முறைமையானது தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு நியமங்களுக்கு இணங்க வடிவமைக்கப்படல் வேண்டும்.

(3) நிலைக்குத்து போக்குவரத்து முறைமையானது ஏற்றுக்கொள்ளக்கூடிய போக்குவரத்து பகுப்பாய்வின் அடிப்பபடையில் வடிவமைக்கப்படல் வேண்டும்.

(4) ஒன்றுக்கும் மேற்பட்ட தள மட்டங்களைக் கொண்ட ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் (கட்டடத்தின் உயரத்தைப் பொருட்படுத்தாமல்) ஒன்று (01) அல்லது அதற்கு மேற்பட்ட படுக்கை மின்பாரந்தூக்கி வழங்கப்படல் வேண்டும்.

(5) பொது இடங்களில் நிறுவப்பட்ட மின்தூக்கி/மின்தூக்கிகள், 1996ம் ஆண்டு 28 ம் இலக்க மாற்றுத்திறனாளிகள் உரிமை பாதுகாப்பு சட்டத்தின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதோடு 17.10.2006 தேதியிடப்பட்ட 1467/15 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(6) அ. 15 மீற்றருக்கு குறைவான உயரத்தைக்கொண்ட கட்டடத்தில் அவசரக்கால தீயணைப்பு திரும்புகை செயற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் கட்டடமானது மாற்றுத்திறனாளிகள் அல்லது வயோதிபர் தங்குமிடமாகயிருந்தால், அதிகபட்சம் 900 சதுர மீற்றர் தளப்பரப்பிற்கு சேவையளிக்கும் வகையிலான குறைந்தபட்சம் ஒரு தீயணைப்பாளர் மின்பாரந்தூக்கி காணப்படல் வேண்டும்.

ஆ. 15 மீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட உயரத்தைக் கொண்ட கட்டடங்களில் அவசரகால வெளியேற்றத்திற்கும் தீயணைப்பு வீரர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் தீயணைப்பாளர் மின் உயர்த்திகள் மற்றும் தீயணைப்பு மின் உயர்த்திகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய மின் உயர்த்திகள் 02 மணி நேரத்திற்கு மதிப்பிடப்பட்டு, தீயணைப்பு முகப்பு கூடங்களில் நிறுவபப்பட்டு தீயணைப்பு வீரர்களால் அணுகக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். இம்மின் உயர்த்திகளானது தீ தடுப்பு பொருள்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு, இறங்குதள கதவுகள் 01 மணிநேரத்திற்கு தீயனர்த்தத்திற்கு எதிராக மதிப்பிடப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு 900 சதுர மீற்றர் தளப்பரப்பிற்கும் குறைந்தது ஒரு தீயணைப்பாளர் மின் உயர்த்திகள் நிறுவப்படல் வேண்டும்.

(7) ஒவ்வொரு பயணிகள் மற்றும் பொருட்கள் மின் உயர்த்திகள், அல்லது நகரும் இயங்கும் படிக்கட்டு (escalator) என்பன உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களின்படி பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பரீட்சிக்கப்படுவதோடு 30 மீற்றர் உயரத்திற்கு அதிகமான கட்டடங்களுக்கான கட்டளையிடல் பரீட்சித்தலானது அட்டவணை 3 ல் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த நபரின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்கான சான்றிதழானது **ஒழுங்குவிதி 83 (2)** இல் குறிப்பிடப்பட்டதற்கிணங்க அமைவுச்சான்றிதலுக்கான விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### ஒளி மற்றும் காற்றோட்டம்

70. (1) ஒவ்வொரு கட்டடத்திற்கும் பின்வரும் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்

அ. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை ஒளியூட்டல் வழிகள். உதாரணம்: கண்ணாடி யன்னல்கள், கூரைமூல ஒளியூட்டல், விசிறிப்பலகணிகள், கதவுகள் அல்லது பொருத்தமான அதிகாரசபையால் அனுமதியளிக்கப்பட்ட ஏதேனும் இயற்கை ஒளியை கடத்தும் ஊடகம் ; மற்றும்

ஆ. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை காற்றோட்ட வழிகள் உதாரணம்: யன்னல்கள், கூரைமூல ஒளியூட்டல், விசிறிப்பலகணிகள், கதவுகள், காற்றுபுக விடுவதற்கான துவாரங்கள் (டழரஎசநள) அல்லது காற்றோட்டத் துவாரங்கள் மற்றும் பல.

(2) கட்டடத்தின் ஒரு அறையின் இயற்கை ஒளி மற்றும் காற்றோட்ட வழிகளுக்கும் திறந்தவெளியின் எதிர் எல்லைக்கும் இடையிலான தூரம் **அட்டவணை 6 இன் படிவம் "உ"** ல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய பேணப்படல் வேண்டும்.

(3) கட்டடத்திலுள்ள ஒரு அறைக்கான அல்லது இடத்திற்கான இயற்கை ஒளி மற்றும் காற்றோட்டம் பெறப்படும் வழிகளான யன்னல்கள் மற்றும் திறந்த வெளியின் அளவு பிரமாணங்களானது, அத்தகைய அறை அல்லது இடத்தின் தளப்பரப்பில் 1/ 5 க்கும் குறைவடைந்து இருத்தலாகாது என்பதுடன் அத்தகைய திறந்தவெளிகள் அல்லது யன்னல்களின் குறைந்தது 50மூ திறந்தவெளியாக பேணப்படல் வேண்டும்.

(4) அத்தகைய ஒவ்வொரு திறந்த வெளிகளும் பின்வருமாறு அமையப்பெற வேண்டும் :

அ. ஆகாயத்தை நோக்கி திறந்த ஒரு பகுதி ; அல்லது
ஆ. கட்டடம் பாவிப்புரித்தைக் கொண்ட ஒரு பொது வீதி அல்லது ஒரு தெரு ; அல்லது
இ. குறித்த கட்டடத்தினுள் அமையப்பெற்ற ஒரு சுற்றுக்கட்டு வெளியிடம், திறந்த வெளி அல்லது காற்றுத்-துளைகள்.

(5) நிலையான மனித வாழ்விடங்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் தொழிற்சாலைகள், பயிற்சிப்பட்டறைகள் அல்லது பண்டகசாலை போன்ற பயன்பாடுகளுக்கு கட்டடமானது பயன்படுத்தப்படுமாயின், யன்னல்கள் மற்றும் திறந்த வெளிகளால் சேவையளிக்கப்படும் அத்தகைய கட்டடத்திலுள்ள அறையின் எந்த ஒரு பகுதியும்:

அ. அத்தகைய திறந்தவெளிகளிலிருந்து சம தளப்பரப்பின் செங்குத்தான திசையில் 12 மீற்றருக்கு மேற்பட்டும் அத்தகைய அறையின் எந்த ஒரு பகுதியும் அத்தகைய திறந்தவெளிகளுக்கு சமாந்தரமான திசையில், திறந்தவெளிகளின் விளிம்பிலிருந்து 5 மீற்றருக்கு மேற்பட்டும் இருத்தலாகாது ;

ஆ. அத்தகைய மூலமானது குறித்த அறையின் கூரையில் அமையப்பெற்ற காற்றோட்ட சாதனமாகவோ அல்லது இயற்கை காற்றோட்டமாகவோ அமையும் சந்தர்ப்பத்தில், அத்தகைய மூலத்திலிருந்து நிலைக்குத்தாக 9 மீற்றருக்கு மேற்பட்டு அமைதல்.

(6) **ஒழுங்குவிதி 70(5)** இல் குறிப்பிடப்பட்ட கட்டடங்கள், **ஒழுங்குவிதி 70 (4)** இல் குறித்துரைக்கப்பட்ட அறைக்கான காற்றோட்ட மூலங்கள் தவிர்ந்த ஏனைய அறைகளின் எந்த ஒரு பாகமும் ஒளியூட்டல் மற்றும் காற்றோட்ட புகுவழிகளின் சமதளபரப்பின் செங்குத்தானத்திசையில் அத்தகைய புகுவழியிலிருந்து 10 மீற்றர் தூரத்திற்கு அப்பால் இருத்தலாகாது என்பதுடன் அத்தகைய அறையின் எந்த பாகமும் சமதளப்பரப்பிற்கு இணையான திசையில் புகுவழியின் முனையிலிருந்து 3 மீற்றருக்கு மேற்பட்டு இருத்தலாகாது.

(7) அ. மேல்மாடம், விறாந்தை, அல்லது வாயில்மாடம் போன்ற மூலங்களிலிருந்து இயற்கை ஒளியூட்டல் மற்றும் காற்றோட்டங்களை பெறும் அறையொன்றின் உயர்ந்தபட்ச நீளமானது அத்தகைய மேல்மாடம், விறாந்தை, அல்லது வாயில்மாடம் போன்ற மூலங்களின் வெளி முகப்பிலிருந்து 10 மீற்றருக்கு மேற்படலாகாது.

ஆ. **ஒழுங்குவிதி 70 (7-அ)** இல் குறிப்பிடப்பட்ட மாடி முகப்பின், விறாந்தையின், அல்லது வாயில் மாடத்தின் முற்பகுதி, வெளிப்புறக்காற்றை ஈர்க்கும் வகையில் குறித்த அறையின் உட்கூரை மட்டம் மற்றும் தளமட்டம் ஆகியவற்றிற்கிடையேயான உயரத்தின் 75% இல் புகுவழி ஒன்றை அமைக்கலாம்.

71. (1) ஏதேனுமொரு அறை/ அறைகள் மற்றும் பயன்பாட்டு அறை/ அறைகளுக்கான இயற்கை ஒளியையும் காற்றோட்டத்தையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் காற்றுத்துளைகளை அல்லது அடைக்கப்பட்ட வெளியிடங்களை (courtyard) ஏற்பாடு செய்ய வேண்டியுள்ள சந்தர்ப்பத்தில் இவ்வொழுங்குவிதியின் **அட்டவணை 9** இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இயைந்திருத்தல் வேண்டும்.

(2) இயற்கை ஒளியையும் காற்றோட்டத்தையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வழங்கப்பட்ட உள்ளக காற்றுத்துளைகள் அல்லது அடைக்கப்பட்ட வெளியிடங்கள் (courtyard) தடைப்படலாகாது.

(3) காற்றுத்துளையின் குறுகிய பக்கமானது 5.0 மீற்றரிலும் குறைவாக இருப்பின், அத்தகைய குறுகிய பக்கத்தை நோக்கி நீட்டப்படும் மேற்தாங்கல் பகுதி, மேல் விதானங்கள், சூரிய நிழல் அமைப்புகள், தாழ்வாரங்கள் அல்லது மேல்மாடங்கள் போன்றவை 0.5 மீற்றரை விட அதிகரித்தலாகாது.

(4) உள்ளக முற்றங்களின் தளமானது கல் அல்லது புல் பதித்தல் மற்றும் பொருத்தமான வடிகால் அமைப்புகளுடன் உள்ளக தோட்டமாக பராமரிக்கப்படல் வேண்டும்.

(5) நீர் மூல மலசலகூடங்கள், கழிவறைகள் அல்லது குளியலறைகளுக்கான இயற்கை ஒளியூட்டல் மற்றும் காற்றோட்ட மூலத்திற்கும், திறந்த வெளியின் எதிர் எல்லைக்கும் இடைப்பட்ட குறைந்தபட்ச தூரம் 1.0 மீற்றருக்கு குறைவடைதலாகாது.

(6) தீயணைப்பு முன்னெச்சரிக்கை நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி, மூடப்பட்ட படிக்கட்டு, நடைக்கூடம் அல்லது முகப்புக்கூடத்திற்கான இயற்கை ஒளியூட்டல் மற்றும் காற்றோட்டத்திற்கான புகுவழியின் குறைந்தபட்ச அளவுப் பிரமாணங்கள் **ஒழுங்குவிதி 70 (3)** ற்கு இயைந்திருத்தல் வேண்டும்.

(7) 12 மீற்றருக்கும் அதிகமான நீளம் கொண்ட மொட்டை மாடி வீடுகளில் ஒவ்வொரு தளத்திலும் அனைத்து முன்புறம், பின்புறம் மற்றும் குறுக்கு சுவர்களில் பொருத்தமான துவாரங்கள் மூலம் நிரந்தர காற்றோட்ட ஆதாரங்களை பெற முடியும் என்பதோடு அத்தகைய காற்றோட்ட புகுவழிகள் **0.5 சதுர மீற்றர்** பரப்பளவிற்கு குறைவடைதலாகாது.

(8) ஏதேனும் அறைக்கும் அடுத்துள்ள அறைக்கும் இடையிலான பொதுச் சுவரின் அரைவாசியானது திறந்தோ/ வெளிப்படுத்தப்பட்டோ மற்றும் தடையற்றோ காணப்படும் சந்தர்ப்பங்களில், அத்தகைய அறைக்கான ஒளி மற்றும் காற்றோட்டத்திற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானிப்பதற்காக அத்தகைய அறையானது அடுத்துள்ள அறையின் பகுதியாகக் கருத்திற் கொள்ள முடியும்.

(9) அறையானது அடித்தளமொன்றில் அமையப்பெற்றிருப்பதுடன் இயற்கையான ஒளி மற்றும் காற்றோட்டத்தை பெற்றுக்கொள்ள முடியுமாயின் அவ்வறையானது தரைமட்டத்திற்கு மேற்பட்ட வெளிப்புறச் சுவரின் உயரத்தின் குறைந்தது 1/3 மடங்கை கொண்டிருக்க வேண்டும் என்பதோடு **ஒழுங்குவிதி 70 (3)** இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளையும் நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

### பொறிநுட்பமுறையான காற்றோட்டம், குளிரூட்டல் மற்றும் செயற்கை ஒளியூட்டல்

72. (1) குறித்த கட்டடம் ஒன்றில் பொறிநுட்பமுறையான குளிரூட்டல், காற்றோட்டம் அல்லது செயற்கை ஒளியூட்டலானது பொருத்தப்பட்டிருப்பின் அல்லது பொருத்த தீர்மானிக்கப்பட்டிருப்பின், அத்தகைய ஏற்பாடுகளானது கட்டடத்தின் அல்லது அதன் பகுதியினை கருத்தில் கொண்டு ஒழுங்குவிதியின் தொடர்புடைய விதிகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும் என்பதோடு இவ்வொழுங்குவிதியின் **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த நபரால் வடிவமைக்கப்பட்டு அவரின் மேற்பார்வையின் கீழ் பொருத்தப்படல் வேண்டும்.

(2) கட்டடம் அல்லது அதன் பகுதியானது செயற்கை குளிரூட்டல் அலகு, பொறிநுட்பமுறையான காற்றோட்ட முறைமை அல்லது செயற்கை ஒளியூட்டல் போன்றவற்றால் தற்பொழுது சேவையளிக்கப்பட்டு அத்தகைய சேவைகள் இடைநிறுத்தப்பட தீர்மானிக்கப்பட்டால், இயற்கை ஒளியூட்டல் மற்றும் காற்றோட்டத்தினை பெற்றுக்கொள்வதற்காக **ஒழுங்குவிதி 70 மற்றும் 71** இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதன் மூலம் அதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்ள முடியும்.

(3) வதிவிட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் அறையொன்றில் ஒரு மணித்தியாலத்திற்கு குறைந்தபட்சம் 3 வளி மாற்றங்களை விநியோகிப்பதன் மூலம் பொறிநுட்பமுறை ஊடாக தூய்மையான காற்று பெறப்படுமானால், இயற்கை காற்றோட்ட மூலத்திற்கான புகுவழியின் பரப்பானது **ஒழுங்குவிதி 70(3)** இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் அரைவாசியாக குறைவடைய முடியும் என்பதோடு 0.5 சதுர மீற்றருக்கு குறைவடையாமல் இருத்தல் வேண்டும்.

(4) **ஒழுங்குவிதி 70** இல் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, வதிவிடம் அல்லாத பயன்பாட்டு அறைகள், படிக்கட்டு, நடைகூடம் அல்லது முகப்புக்கூடம் என்பவற்றின் இயற்கை காற்றோட்டத்திற்கான தேவைப்பாடுகளை தொடர்புடைய ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கேற்ப சீர் செய்ய தவறும் பட்சத்தில் அவற்றுக்கான பொறிநுட்பமுறை காற்றோட்டம் வழங்கப்படல் வேண்டும்.

(5) அ. ஒரு கட்டடத்தில் பொறிநுட்பமுறையான குளிரூட்டல், காற்றோட்டம் அல்லது செயற்கை ஒளியூட்டலானது பொறுத்தப்பட்டிருப்பின், அத்தகைய கட்டடத்தின் ஒவ்வொரு தளத்தினதும் 1/3 பரப்பானது இயற்கை காற்றோட்ட மூலங்களிலிருந்து பயன்பெறும் வகையில் காற்றோட்ட உட்புகு வழிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. அபிவிருத்தி ஒன்றில் அடித்தள கட்டுமானங்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பின், அடித்தள பரப்பளவின் 100% இற்கும் பொறிநுட்பமுறையான காற்றோட்டம் மற்றும் செயற்கை ஒளியூட்டல் வழங்கப்பட முடியும் என்பதோடு இத்தகைய சந்தர்ப்பங்களில் அவசர மின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக மின்பிறப்பாக்கி ஒன்றினை நிறுவுதல் வேண்டும்.

இ. பொறிநுட்பமுறையான குளிரூட்டல் வெளியேற்றல்/ வெளிப்புற அலகு நிறுவப்பட்டிருப்பின், அத்தகைய வெளியேற்றல்/ வெளிப்புற அலகிற்கும் அயலாதனத்தின் எல்லைக்கும் இடையில் குறைந்தபட்சம் 2.3 மீற்றர் இடைவெளி பேணப்படல் வேண்டும்.

ஈ. கட்டடத்தில் காணப்படும் ஒரு அறையில், இருபத்தி நான்கு மணிநேரம் (24) காற்றுப் போக்கி/ உறிஞ்சல் விசிறிகள் செயற்படுமாயின், காற்றுப் போக்கி/ உறிஞ்சல் விசிறிகள் நிறுவப்பட்டிருக்கும் வெளிப்புற சுவருக்கும் திறந்தவெளியின் எதிர் எல்லைக்கும் இடையேயான தூரம் 2.3 மீற்றருக்கும் குறைவாக இருத்தலாகாது.

### தரிப்பிடம்

73. (1) அபிவிருத்தி அனுமதி பத்திரமொன்றை பெறும் நோக்கத்திற்காக விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வரைபடமும் ஒழுங்குவிதியின் **அட்டவணை 10** இல் குறித்துரைக்கப்பட்ட வாகன தரிப்பிட தேவைப்பாடுகளுடன் இயைந்திருத்தல் வேண்டும்.

(2) வாகன தரிப்பிடங்களுக்கான வழிப்பாதையின் குறைந்தபட்ச அகலம் மற்றும் நிறுத்துமிடங்களின் அளவு பிரமாணங்கள் போன்றவை **அட்டவணை 11** ன் கீழ் **படிவம் "அ" மற்றும் "ஆ"** இல் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.

(3) **ஒழுங்குவிதி 73(1) மற்றும் 73(2)** இல் குறிப்பிடப்பட்ட வாகன தரிப்பிட தேவைப்பாடுகளை வழங்குவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என திட்டமிடல் குழு தீர்மானிக்குமாயின், இவ்வொழுங்குவிதிகளின் **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்டவாறு சேவைக்கட்டணத்தை அறவிடுவது அவசியமாகும்.

(4) கட்டட எல்லைக்கோட்டு ஒதுக்கீடுகளுக்குள் எவ்விதமான வாகன தரிப்பிட வசதிகளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(5) அ. வதிவிட வாகன தரிப்பிட பகுதியில் வாகனத்திற்கான நுழைவு மற்றும் வெளியேறும் பகுதிகள் தனித்தனியே வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய அணுகுவழியின் அகலமானது 3 மீற்றருக்கு குறைவடைந்திருத்தலாகாது என்பதுடன் வாகன நுழைவு மற்றும் வெளியேறும் பகுதிகள் இணைத்து வழங்கப்பட்டிருப்பின், அணுகுவழியின் அகலமானது 6 மீற்றருக்கு குறைவடைந்திருத்தலாகாது.

ஆ. வர்த்தக நோக்கத்திற்காக வழங்கப்படும் வாகன தரிப்பிட பகுதியில் வாகனத்திற்கான நுழைவு மற்றும் வெளியேறும் பகுதிகள், தனித்தனியே வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய ஒவ்வொரு நுழைவு மற்றும் வெளியேறும் பகுதியின் அணுகுவழியின் அகலமானது 4.5 மீற்றருக்கு குறைவடைந்திருத்தலாகாது என்பதுடன் வாகன நுழைவு மற்றும் வெளியேறும் பகுதிகள் இணைத்து வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய ஒவ்வொரு நுழைவு மற்றும் வெளியேறும் பகுதியின் அணுகுவழியின் அகலமானது 6 மீற்றருக்கு குறைவடைந்திருத்தலாகாது.

(6) இரண்டிற்கு மேற்பட்ட வாகன தரிப்பிட வசதிகள் தேவைப்படும் கட்டடத்தில், வாகன தரிப்பிற்கான அனைத்து சுழற்சி நகர்வுகளும் மற்றும் வாகன பின்னகர்வுகளும் கட்டடம் அமையப்பெற்ற காணிப்பகுதிக்குள்ளேயே அமையப்பெறல் வேண்டும். இவ்வாகன பின்னகர்வுகள் எச்சந்தர்ப்பத்திலும் வீதிலிருந்தோ அல்லது வீதிக்குள்ளோ அனுமதிக்கப்பட மாட்டாது.

(7) அபிவிருத்தி தளத்தின் வீதி முகப்பானது 12 மீற்றருக்கு குறைவாகவும் அதன் நீளம் 40 மீற்றருக்கு குறைவாகவும் காணப்படுமாயின் தொடர்புடைய அதிகாரசபை வாகன தரிப்பிடப்பகுதிக்கான ஓடுபாதையின் அகலத்தை 3 மீற்றராக பின்வரும் சந்தர்ப்பங்களில் குறைக்க முடியும்: -

அ. அத்தகைய ஓடுபாதைக்கு அருகாமையில் பொருத்தமான இடத்தில் வாகனம்நிறுத்தக்கூடிய போதிய அளவிலான தளமொன்று தொடர்புடைய அதிகாரசபையின் திருப்திக்கமைய அமைக்கப்பட்டிருப்பின் ;

ஆ. அத்தகைய அபிவிருத்திக்கான வாகன தரிப்பிட மொத்த தேவைப்பாடுகள் 10 இற்கு மேற்படாமல் காணப்படுமாயின்.

(8)

அ. 12 மீற்றர் அல்லது அதற்கு குறைவான சாய்வுதளங்களின் உயர்ந்தபட்ச சாய்வு நிலையானது 1:8 ஐ விட செங்குத்தானதாக அமைத்தலாகாது என்பதுடன் சாய்வுதளங்களின் நீளம் அதிகரிக்குமிடத்து சாய்வுநிலையானது 1:10 ஐ விட குறைவடைதலாகாது.

ஆ. அத்தகைய ஒவ்வொரு சாய்வுதளமும், வீதிக்குள் மேல்நோக்கி நுழையும் வகையில் காணப்படின், காணித்துண்டின் வீதி எல்லைக்கோடு அல்லது கட்டட எல்லைக்கோட்டிலிருந்து காணித்துண்டை நோக்கி 6 மீற்றருக்கு குறையாத ஒரு சமதளமானது வழங்கப்படல் வேண்டும். அத்தைகைய பிரேரிக்கப்பட்ட அல்லது ஏற்கனவே அமையப்பெற்ற வீதி எல்லைக்கோடு அல்லது கட்டட எல்லைக்கோடு காணப்படாவிடத்து, குறிப்பிடப்பட்ட சமதளமானது காணித்துண்டின் எல்லையிலிருந்து வழங்கப்படல் வேண்டும்.

இ. ஒவ்வொரு சாய்வுதளமும், வீதிக்கு கீழ்நோக்கி நுழையும் வகையில் காணப்படின், காணித்துண்டின் வீதி எல்லைக்கோடு அல்லது கட்டட எல்லைக்கோட்டிலிருந்து காணித்துண்டை நோக்கி 3 மீற்றருக்கு குறையாத ஒரு சமதளமானது வழங்கப்படல் வேண்டும். அத்தைகைய பிரேரிக்கப்பட்ட அல்லது ஏற்கனவே அமையப்பெற்ற வீதி எல்லைக்கோடு அல்லது கட்டட எல்லைக்கோடு காணப்படாவிடத்து, குறிப்பிடப்பட்ட சமதளமானது குறித்த காணித்துண்டின் எல்லையிலிருந்து வழங்கப்படல் வேண்டும்.

(9) சாய்வுதளங்களின் தெளிவான அகலமானது, நுழைவு மற்றும் வெளியேறும் பகுதி தனித்தனியே காணப்படுமிடத்து, அனைத்து நடைப்பாதைகள் மற்றும் பிற தடைகள் நீங்கலாக ,3.5 மீற்றர் அகலத்திற்கு குறைவடைதலாகாது என்பதுடன் நுழைவு மற்றும் வெளியேறும் பகுதி இணைந்து காணப்படின், சாய்வுத்தளத்தின் அகலமானது 6 மீற்றருக்கு குறைவடைதலாகாது.

(10) அடுக்குமாடி வாகன தரிப்பிட பகுதிகளில் காணப்படும் வளைவடிச் செதுக்குமானம், சீமெந்து வளை அல்லது சாய்தளத்தினுடைய சேவை இணைப்புகளின் கீழ்மட்டம் ஆகியவற்றின் தாழ்ந்த மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.4 மீற்றர் தெளிவான உயரம் பராமரிக்கப்படல் வேண்டும்.

(11) தடைகள், சாவடிகள் மற்றும் மின்தூக்கிகள் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தரிப்பிட கட்டுப்பாட்டு செயற்பாடுகள், அத்தகைய தடைகளிலிருந்து வீதியின் விளிம்பு வரை குறைந்தபட்சம் 6 மீற்றர் தெளிவான இடைத்தூரத்திற்குள் அமையப்பெறலாகாது.

(12) வாகனத் தரிப்பிடமானது, சாய்வுநிலை தளமொன்றில் வழங்கப்படுமிடத்து, அத்தகைய சாய்வு நிலையானது 1: 20 இற்கு மேற்படலாகாது.

(13) ஏதேனும் வாகனத் தரிப்பிடத்தின் நுழைவாயில் அல்லது வெளியேற்ற பாதைகளின் குறுக்கே ஒரு நடைப்பாதை தொடருமாயின், குறித்த அதிகாரசபையானது, மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட ஏற்பாடுகளுடனும், பாதசாரிகளின் நகர்வை பராமரிப்பதற்கும் அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களை, அபிவிருத்தியாளரின் செலவிலேயே செய்யப்படுவதோடு, அத்தகைய இடங்களுக்கு வர்ண பூச்சிட்டு, குறுக்கே பாதசாரிகள் கடவை அமைத்து பராமரிக்கக் கோரலாம்.

(14) உள்ளக மற்றும் வெளியக திருப்பங்களின் குறைந்தபட்ச ஆரையானது **அட்டவணை 11 இன் படிவம் "இ"** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கப்படல் வேண்டும்.

(15)

அ. பொறிமுறை வாகன தரிப்பிடத்திற்கான தேவைப்பாடுகள் **அட்டவணை 11 இல் படிவம் "ஈ", "உ", "ஊ"** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கப்படல் வேண்டும்.

ஆ. மகிழுந்து மின்தூக்கியினால் சேவையளிக்கக்கூடிய உயர்ந்தபட்ச வாகன தரிப்பிட எண்ணிக்கையானது 200 ஐ அதிகரித்தலாகாது.

(16)

அ. கீழே குறிப்பிடப்பட்ட அபிவிருத்திகளுக்கு போக்குவரத்து தாக்க மதிப்பீடு (TIA) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்:-

i. 50 அலகுகளுக்கு மேற்பட்ட வதிவிட அபிவிருத்திகள் ;
ii. 10,000 சதுர மீற்றருக்கு மேற்பட்ட வர்த்தக தளப்பரப்புகள் ;
iii. 20,000 சதுர மீற்றருக்கு மேற்பட்ட பண்டகச்சாலை தளப்பரப்புகள் ;
iv. வாகன தரிப்பிட ஒழுங்குவிதி தேவைப்பாட்டு எண்ணிக்கையானது 25 ற்கு மேற்பட்ட அளவைக் கொண்ட ஏதேனும் அடுக்குமாடி கடைத்தொகுதி/ பேரங்காடி/ துறைசார் வர்த்தகம் போன்ற அபிவிருத்திகள் ;
v. வாகன தரிப்பிட ஒழுங்குவிதி தேவைப்பாட்டு எண்ணிக்கையானது 25 ற்கு மேற்பட்ட அளவைக் கொண்ட எந்த ஒரு அபிவிருத்தியும், பிரதான வீதியில் நுழைவு மற்றும் வெளியேற்ற பகுதிகளைக் கொண்டிருப்பின், பின்வருமாறு அமையப்பெற்ற:

- போக்குவரத்து சமிக்கை விளக்குகள் அல்லது சமிக்கை படுத்தப்பட்ட சந்தியிலிருந்து 100 மீற்ற ருக்குள் ;
- தேசிய நெடுஞ்சாலை ;
- பேருந்து நிறுத்தம் அல்லது பேருந்து தரிப்பிடத்திலிருந்து இருமருங்கிலும் 15 மீற்றருக்குள் ;
- பாதசாரிகள் கடவையிலிருந்து இரு மருங்கிலும் 25 மீற்றருக்குள் ;
- நெடுஞ்சாலைக்கான அணுகல் கட்டுப்பாட்டு அதிவேகச்சாலை ; அல்லது
- தொடர்புடைய அதிகாரசபையால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில்.

ஆ. போக்குவரத்து தாக்க மதிப்பீடானது அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த நபரால் தயாரிக்கப்பட்டு அட்டவணை 12 இல் குறிப்பிடப்பட்டவாறு தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இ. போக்குவரத்து தாக்க மதிப்பீட்டிற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் இணைந்த வகையில் தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்பிக்கப்படல் வேண்டும்.

**நீர் விநியோகம்**

74.

(1) மனித நடவடிக்கைகள் மற்றும் ஈடுபாடுகள் திட்டமிடப்பட்ட அல்லது பிரேரிக்கப்பட்ட ஏதேனுமொரு கட்டடத்தில் அல்லது கட்டடத்தின் ஒரு பகுதியில், பொழுதுபோக்கு அல்லது வேறு ஏதேனும் பகுதியில் பாதுகாப்பான, போதுமானதான மற்றும் நம்பகமான நீர் விநியோகத்திற்கான பொருத்தமான இணைப்பு மற்றும் பொறிமுறைகள் வழங்கப்படல் வேண்டும்.

அ. குடிநீர் வழிந்தோடக்கூடிய ஏதேனுமொரு இடத்திற்கு ;

ஆ. சுகாதார நோக்கங்களுக்காக நீரை பெறும் பொருட்டு சுகாதார வசதிகளைக் கொண்ட ஏதேனுமொரு அறை/ இடத்திற்குள் அல்லது அருகாமையில் அமையப்பெற்ற ஏதேனுமொரு கை கழுவும் தொட்டி/ குழாய்களுக்குக்

இ. ஏதேனுமொரு கை கழுவும் தொட்டி, குழாய்கள் (bidet), நிலையான குளியல் அல்லது விசிறல் குழாய் அல்லது குளியலறையிலுள்ள வேறு ஏதேனும் குழாய்களுக்கு ; மற்றும்

ஈ. உணவு தயாரிக்கப்பட்ட அல்லது கையாளப்படும் பகுதியில் வழங்கப்பட்ட ஏதேனுமொரு சமயலறைக் கழுவு தொட்டிக்கும், மற்றும்/ அல்லது துப்புரவு நோக்கங்களுக்காக கை கழுவுதல் தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும்.

(2) நீரை வழங்குவதற்கான பொருத்தமான இணைப்பு காணப்படல் வேண்டும்.

அ. கொட்டுநீர் விசை சாதனம் பொருத்தப்பட்ட எந்தவொரு சுகாதார வசதிக்கும்

ஆ. (தேவைப்பட்டால் மட்டுமே) நீர்ப்பாசனம், தூய்மைப்படுத்தும் பணி, சுத்தம் செய்தல், கழுவுதல் போன்ற மனித நுகர்வு தவிர வேறு எந்த நோக்கத்திற்கும்.

இ. தேவையேற்படின், கட்டடங்கள் மற்றும் பிற செயல்பாட்டு இடங்களில், மனித நுகர்வு அல்லாத பயன்பாடுகளுக்காக ஒரு மாற்றீடு நீர் மூலம் பயன்படுத்தலாம். இருப்பினும், **ஒழுங்குவிதிமுறை 74 (1) மற்றும் 74 (2)** இல் குறிப்பிடப்பட்டுள்ள நீர் மூலங்களையும் இணைத்து இதுபோன்ற இரட்டை நீர் விநியோகங்கள்

பயன்படுத்தப்படுமானால், குறுக்கு இணைப்புகளைத் தவிர்ப்பதற்காக குழாய் அமைப்புகள் முற்றிலும் பிரிக்கப்பட்டு வர்ண-குறியிடப்பட வேண்டும் மற்றும் மனித நுகர்வுக்கு பாதுகாப்பற்ற நீரை எதிர்பாராத விதமாக பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு எச்சரிக்கை குறியீடுகளால் தெளிவாகக் குறித்து காட்டப்படல் வேண்டும்.

(3) பொது நீர் விநியோகத்துடன் இணைந்ததை தவிர, மனித நுகர்வு அல்லது மனித நுகர்வு அல்லாத நோக்கங்களுக்காக மாற்றீட்டு நீர் மூலங்கள் பிரேரிக்கப்படுமாயின்:

அ. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றீட்டு நீர் மூலமானது உற்பத்தி மற்றும் நீர் தர வேறுபாடுகளின் அடிப்படையில் நிலையானதாகவும் நம்பகமானதாகவும் அமைய வேண்டும் என்பதோடு, மேலும் எந்தவொரு நீர் பயன்பாட்டு தடைகள்/ வேறுபாடுகளிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும். மேலும் நீர் மூலமானது "பாதுகாப்பற்ற மூலமாக" காணப்படுமிடத்து, பொருத்தமான சுத்திகரிப்பு முறைமை முன்மொழியப்படல் வேண்டும்.

ஆ. சுத்திகரிப்பு முறைகளின் வடிவமைப்பு (ஏதேனும் காணப்படின்) தகுதிவாய்ந்த பொறியியலாளரால் மேற்கொள்ளப்படும் என்பதோடு வடிவமைப்பானது, எதிர்பார்க்கப்பட்ட நீர் தர தேவைப்பாடுகளை உறுதிசெய்வதோடு, பொருந்தக்கூடிய நீர் தர நியமங்கள் அல்லது வழிகாட்டல்களுடன் இயைந்திருத்தல் வேண்டும்.

இ. மாற்றீட்டு நீர் மூலங்களுக்கான சுத்திகரிப்பு முறைமையின் வடிவமைப்பானது, பின்வரும் சந்தர்ப்பங்களில், நீர் விநியோகம் மற்றும் நீர் தரம் என்பவற்றிக்கான தாக்கத்தினை குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் இணைத்தல் வேண்டும்.

i. எந்தவொரு கூறுகளின் செயலிழப்பு ;
ii. தேவையான பராமரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க தவறியமை ;
iii. பொருத்தமான இடத்தில் மின்சாரம் செயலிழப்பு ; மற்றும்
iv. இடர் மதிப்பீட்டில் வேறு ஏதேனும் நடவடிக்கைகள் இனங்காணப்பட்டமை.

ஈ. மாசடைதலை ஏற்படுத்தும் மூலங்களிலிருந்து, நீண்ட கால பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, மாற்றீட்டு நீர் மூலங்கள் தெரிவு செய்யப்படல் அல்லது உருவாக்கப்படல் வேண்டும். ஆழமற்ற கிணறுகள், மேற்பரப்பு நீர் உட்புகல் போன்றவற்றின் இருப்பிடம் கழிவுநீர் அகற்றும் இடங்கள், கழிவு தொட்டிகள் மற்றும் உறிஞ்சல் குழிகளிலிருந்து குறைந்தது 18 மீ தொலைவில் அமைந்திருக்க வேண்டும் என்பதோடு அவ்வாறான இடங்கள் குறித்த உள்ளூராட்சி அதிகாரசபைகள் அல்லது தொடர்புடைய நிறுவனங்களின் பரிந்துரையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

உ. அபிவிருத்தியாளர், நீர் விநியோக தேவைப்பாடுகளுக்காக இயற்கை நீரூற்றுகள் அல்லது நிலத்தடி நீர் மூலங்களிலிருந்து நீரை பெற தீர்மானிப்பாராயின், அத்தகைய அபிவிருத்தியாளர், நீரைப் பெறுவதற்கு நீர் வளச்சபையிடமிருந்து தேவையான அனுமதிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

ஊ. 20 நபர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக்கொண்ட வதிவிட அலகுகளில் மற்றும் வதிவிடமல்லா கட்டடங்களில், மனித நுகர்விற்காக மாற்றீட்டு மூலங்களிலிருந்து நீர் விநியோகிக்கப்படுமானால்: நீரின் பாதுகாப்பு தொடர்பாக அப்பகுதியின் பொது சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார மருத்துவ அதிகாரியால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய சான்றானது அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்தால் பரிசோதிக்கப்பட்ட நீர் தர அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் வருடத்தில் குறைந்தபட்சம் ஒரு முறையாவது பெறப்படல் வேண்டும்.

(4) அதிகாரசபை தேவையென கருதும் சந்தர்ப்பத்தில், தற்போதுள்ள நீர் விநியோக முறைமை மற்றும் மாற்றீட்டு நீர் மூலங்கள், பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் நீர் தேவைப்பாட்டை முழுமையாக பூர்த்திசெய்ய போதுமானதென்பதை உறுதிப்படுத்தும் முகமாக, தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து அனுமதியொன்றைப் பெற்றுக்கொள்ள, அபிவிருத்தியாளரை அல்லது அவரின் முகவரை வழிநடத்தலாம்.

அ. கட்டடமொன்றின் வதிவிட அலகுகளில் குடியிருக்கின்ற அனைத்து நபர்களுக்குமான சாத்தியமானதும் பாதுகாப்பானதுமான நீர் நுகர்வு மற்றும் மனித நுகர்வற்ற பயன்பாடுகளுக்கான நீர் போன்றவை அளவுரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டு, நீர் விநியோக சேவைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில்,நீர் விநியோக இணைப்பிற்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்காக தொடர்புடைய நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்படல் வேண்டும் அல்லது நீர் விநியோகத்திற்கான மாற்று நீர் மூலங்கள் பிரேரிக்கப்பட்டிருப்பின், அத்தகைய நீர் மூலங்கள் நம்பகத்தனையுடையது மற்றும் உறுதித்தன்மையுடையதும் என்பதை தீர்மானிக்க அத்தகைய நீர் மூலங்களின்

சாத்தியமான வளங்களை சரிபார்த்தல். வதிவிட பாவனை மற்றும் மனித நுகர்விற்கான பாதுகாப்பான நீர் விநியோகதிற்கான சராசரி தேவைப்பாடானது தொடர்புடைய நிறுவனங்களால் அல்லது உள்ளூர் அதிகார சபைகளால் குறிப்பிடப்பட்ட வீதங்களில் வதிவிட அலகுகளுக்கு நாளொன்றுக்கான தனிநபர் வீதம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

ஆ. வதிவிடமல்லா கட்டடமாக வகைப்படுத்தப்பட்ட கட்டடமொன்றில் குடியிருக்கும் நபர்களுக்கான பாதுகாப்பான நீர் நுகர்விற்கான சாத்தியமானது நீர் பயன்பாட்டிற்கென ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முறையைப் பின்பற்றிய ஒரு நிலையான கட்டமைப்பைப் பயன்படுத்தி மதிப்பிடப்படல் வேண்டும். நீர் விநியோக சேவைகள் காணப்படுமிடத்து, நீர் வழங்கல் இணைப்பிற்கான அனுமதியைப் பெற மதிப்பிடப்பட்ட நீர் நுகர்வு கேள்வியானது, தொடர்புடைய அதிகாரசபைக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும் : அல்லது மாற்று நீர் மூலங்கள் பயன்படுத்தப்படுமாயின், அல்லது நீர் விநியோகத்திற்கான மாற்று நீர் மூலங்கள் பிரேரிக்கப்பட்டிருப்பின், அத்தகைய நீர் மூலங்கள் நம்பகத்தன்மை மற்றும் உறுதித்தன்மையை தீர்மானிக்க அத்தகைய நீர் மூலங்களின் சாத்தியமான வெளியீடு சரிபார்க்கப்படல் வேண்டும்.

இ. மாற்று நீர் மூலங்கள் பயன்படுத்தப்படுமாயின், சுத்திகரிப்புடன் அல்லது அல்லாமல், நீர் பயன்பாடுகளால் வழங்கப்படும் நீர் சேவைகளுடன் இணைந்து, தற்போதுள்ள நீர் கொள்ளளவுடன் அதன் வெளியீடு மற்றும் கேள்வி என்பன விபரிக்கப்படல் வேண்டும்.

(5)

அ. குடியிருக்கு கட்டடங்களில், அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் மற்றும் குடியிருப்பு அலகுகளுக்கும் குறைந்தபட்சம் 36 மணிநேரங்களுக்கு போதுமான குடிநீரை பெறுவதற்கான போதிய களஞ்சிய வசதிகள் காணப்படல் வேண்டும். இத்தகைய களஞ்சியங்கள் நிலத்திற்கடியிலோ அல்லது நிலமட்டத்திற்கு மேலாகவோ பொருத்தமான நீர் குழாய்கள் மற்றும் துணை சேவைகளுடன் இணைந்த கட்டமைப்பாக அமையப்பெறலாம்.

ஆ. தீயணைப்பு தேவைப்பாட்டிற்கான களஞ்சியப்படுத்தலுக்கு மேலதிகமாக, வதிவிடமல்லா கட்டடங்களுக்கு குறித்த ஒரு காலப்பகுதியில் அதன் பயன்பாட்டின் தன்மையினைக் கருத்தில் கொண்டு பயன்பாட்டிற்கு தேவையான நீரை வழங்குவதற்கு போதிய களஞ்சியப்படுத்தல் வசதிகள் காணப்படல் வேண்டும் என்பதோடு குடியிருப்பாளர்களுக்கு 36 மணித்தியாலங்களுக்கு போதுமான குடிநீரை பெறுவதற்கான போதிய களஞ்சிய வசதிகள் காணப்படல் வேண்டும்.

இ. கட்டடத்திற்குள்ளேயோ அல்லது வெளியேயோ அத்தகைய நீர் களஞ்சியத்திற்கான களஞ்சிய கொள்திறன்கள் மற்றும் அவற்றிற்கான அமைவிடங்கள் என்பன அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் வரைபடத்தில் தெளிவாக காட்டப்படல் வேண்டும்.

(6) குழாயமைப்பு முறைமையானது குறுக்கு இணைப்புகள் மற்றும் பின்னோட்டத்தின் விளைவாக குடிநீர் நீர் விநியோக முறைமையை மாசுபடுதலிலிருந்து பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்படல் வேண்டும்.

(7) நீரின் சிறந்த பயன்பாட்டிற்காகவும் தேவையற்ற நீர் நுகர்வை தடுப்பதற்கும் பொருத்துதல்கள் மற்றும் நிலையான சாதனங்களை நிறுவுவதன் மூலம் நியாயமான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

(8) குழாய்மூல நீர் விநியோக முறைமை நிறுவப்படாத பகுதிகளில், குறைந்தபட்ச காணித்துண்டு அளவானது 250 சதுர மீற்றராக காணப்படல் வேண்டும்.

**சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல்**

75.

(1) ஒவ்வொரு குடியிருப்பு அலகிற்கும் குறைந்தது ஒரு நீர் மூல மலசலக்கூடம் காணப்படல் வேண்டும் என்பதோடு ஒவ்வொரு வேறு வகையான கட்டடங்களுக்கும் **அட்டவணை 13** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போதிய எண்ணிக்கையில் மற்றும் பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட மற்றும் போதுமான நம்பகமான நீர் விநியோகத்துடன் இணைந்த சுகாதார சேவைகள், பொருத்தமான நியமங்கள் மற்றும்/அல்லது வழிகாட்டுதலுக்கு இயைந்த வகையில் வழங்கப்படல் வேண்டும்.

(2) கட்டடமொன்றின் ஒவ்வொரு கழிப்பறை, குளியலறை அல்லது ஒருங்கிணைந்த குளியலறை மற்றும் கழிப்பறை என்பவற்றின் அளவுப்பிரமாணங்கள் **அட்டவணை 7** இல் குறிப்பிடப்பட்டதற்கு இயைந்திருத்தல் வேண்டும்.

*(3)* *வதிவிடமல்லா கட்டடங்களுக்கு, சுகாதார சேவைகளானது, தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் பகுதி* II *இன் பிரிவு 15 (1), 1965 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் (சுகாதார வசதிகள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 1965 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் (பொது சலவை வசதிகள்) ஒழுங்குவிதிகள், 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க விசேட தேவையுடையோர் உரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதன் தொடர் திருத்தங்கள் மற்றும் பொருத்தமான நிறுவனங்களால் அமுலாக்கப்பட்ட ஏனைய பிரயோகிக்கக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு பாலினத்தவர்கள் மற்றும் வயதினர் மற்றும் விசேடதேவையுடையவர்களுக்கு ஏற்ற வகையில் குடியிருப்பாளர்கள்/ பயன்பாட்டாளர்கள் மற்றும் தொழிலாளர்கள்/ பணியாளர்களின் தனிப்பட்ட சுகாதாரத்தை பாதுகாத்து மற்றும் ஊக்குவிப்பதற்கு பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டு நிறுவப்படல் வேண்டும்.*

*(4)* *உணவு தயாரிக்கப்படும் சமயலறையில் அல்லது ஏதேனுமொரு பகுதியில் பொருத்தமான இடத்தில் கைகழுவுவதற்கு ஏற்ற கைகழுவும் தொட்டி* (sink) *பொறுத்தப்படல் வேண்டும். சுகாதார சேவைகள் அல்லது கை கழுவும் வசதிகளைக் கொண்ட ஏதேனுமொரு அறை/ இடம் காணப்படுமாயின் அத்தகைய வசதிகள் சமையலறை அல்லது உணவு தயாரித்து சேகரிக்கப்படும் ஏதேனுமொரு அறையிலிருந்து பிரிக்கப்பட்டு காணப்படல் வேண்டும்.*

*(5)* *சுகாதார சேவைகள், கை கழுவும் வசதிகள் அல்லது கட்டடத்திற்கு உள்ளேயும் அல்லது வெளியயேயும் காணப்படும் ஏனைய வெளியேற்ற பகுதிகள் அல்லது உபகரணங்கள் என்பவற்றிலிருந்து உருவாகும் கழிவுநீரானது ஆதனத்தினுள் காணப்படும் ஏதேனுமொரு போதுமான வடிகாலமைப்பு முறைமைக்கு கொண்டு செல்லப்படுவதுடன், முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிடப்பட்ட பின்வரும் ஏதேனுமொன்றிற்குள் அகற்றப்படலாம்.*

*அ.* *ஒரு பொது சாக்கடை வழி அல்லது பொது சாக்கடை வழியுடன் இணைக்கப்பட்ட ஒரு தனியார் சாக்கடை வழி காணப்படுமாயின், கழிவுநீரானது ஆதனத்தின் எல்லைக்கு அருகாமையில் கட்டப்பட்ட ஒரு இடை சேகரிப்பு பகுதியூடாக* (chamber) *அத்தகைய சாக்கடை குழிகளுக்குள் அகற்றப்படல் வேண்டும்.*

*ஆ.* *ஒரு பொது சாக்கடை வழி அல்லது பொது சாக்கடை வழியுடன் இணைக்கப்பட்ட ஒரு தனியார் சாக்கடை வழி காணப்படாத சந்தர்ப்பத்தில், அல்லது தொடர்புடைய அதிகாரசபையால் வெளியேற்ற வடிகாலானது இத்தகைய கழிவுநீர் குழாய்களுக்குள் இணைக்கப்பட இயலாது என கருதும் சந்தர்ப்பத்தில்,* ***அட்டவணை 3*** *இல் குறிப்பிடப்பட்ட பொருத்தமான தகுதி வாய்ந்த நபரால் வடிவமைக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட முதன்மை நிலை, இரண்டாம் நிலை மற்றும் (தேவையெனில்) மூன்றாம் நிலை போன்ற பொருத்தமான வடிவத்துடன் இணைந்த கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமைக்குள் கழிவுநீர் அகற்றப்படல் வேண்டும். அத்தகைய சுத்திகரிப்பு முறைகள் ஏதேனுமொரு முன் வடிவமைக்கப்பட்ட மற்றும் முன் தயாரிக்கப்பட்ட அலகு செயல்முறைகள், தொகுக்கப்பட்ட நிலையங்கள் மற்றும் பலவற்றைக் கொண்டிருக்கலாம். சுத்திகரிப்பு நிலையமானது தொடர்புடைய தகுதிவாய்ந்த நபரின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவானது, 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு மற்றும் தரம்) சட்டத்தின் மற்றும் அதன் தொடர் திருத்தங்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரசபை அல்லது தொடர்புடைய நிறுவனத்தால் விதிக்கப்பட்ட பிற தொடர் ஒழுங்குமுறைகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.*

இ. *கழிவுநீர் சுத்திகரிப்பு முறையை வழங்குவது நடைமுறையில் சாத்தியமற்றதாக காணப்படும் சந்தர்ப்பத்தில், கழிவுநீரானது 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு மற்றும் தரம்) சட்டத்தின் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரசபை அல்லது தொடர்புடைய நிறுவனத்தால் விதிக்கப்பட்ட பிற தொடர் ஒழுங்குமுறைகளுக்கு இயைந்த வகையில் குறித்த தளப்பகுதிக்குள் சேகரிக்கப்பட்டு தளப்பகுதிக்கு அப்பால் அகற்றப்படல் வேண்டும்.*

*அல்லது*

*ஈ.* *தளப்பகுதிக்குள் கழிவு நீர் சேகரிப்பு மற்றும் தளப்பகுதிக்குள் அகற்றல் முறைமையானது பொருந்தக்கூடிய தேசிய மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இயைந்த வகையில்* ***அட்டவணை 3*** *இல் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த நபரால் வடிவமைக்கப்படல் வேண்டும்.*

*(6)* *கழிவுநீரானது அகற்றப்படுவதற்கு முன்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட வகையில் முன் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் முதலாம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு மற்றும் தரம்) சட்டத்தின் மற்றும் அதன் தொடர் திருத்தங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களால் விதிக்கப்பட்ட பிற தொடர்புடைய ஒழுங்குமுறைகளுக்கு இயைந்த வகையில் ஒரு பொது சாக்கடை வழிக்குள் அகற்றப்படல் வேண்டும்.*

(7) பொது சாக்கடை வழி முறைமை காணப்படாத சந்தர்ப்பத்தில் மற்றும் தனிப்பட்ட கழிவுத்தொட்டி அல்லது தொகுதி சுத்திகரிப்பு நிலையங்கள் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில், தளப்பகுதிக்குள் கழிவு நீர் சேகரிப்பு மற்றும் தளப்பகுதிக்குள் மற்றும்/ அல்லது தளப்பகுதிக்கு வெளியில் அகற்றல் என்பன தொகுதி வாரியாக வழங்கப்படல் வேண்டும் என்பதோடு அத்தகைய தொகுதியில் காணப்படும் குடியிருப்பு அலகுகளின் எண்ணிக்கையானது உயர்ந்தபட்சம் ஐந்து (5) ஆக மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.எவ்வாறாயினும் தொடர்புடைய தகுதிவாய்ந்த நபரின் பரிந்துரையின் அடிப்படையில் தொடர்புடைய அதிகாரசபை அல்லது நிறுவனங்கள் ஏதேனுமொரு மாற்று முறைமையினை கருத்தில் கொள்ள முடியும்.

(8) பதினைந்து (15) அலகுகளுக்கு மேற்பட்ட கூட்டுடைமை குடியிருப்பு அபிவிருத்திகளில், **ஒழுங்குவிதி 74 (5-ஆ)** இற்கு இயைந்த வகையில் பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமானது வழங்கப்படல் வேண்டும்.

(9) கழிவுநீர் சுத்திகரிப்பு முறை/ஆலை:

i. அருகாமையிலுள்ள எந்தவொரு தனிநபருக்கோ அல்லது சமூகத்திற்கோ சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடாது ;

ii. எந்தவொரு நீர் நிலையையோ அல்லது நிலத்தடி நீரையோ அல்லது நீர் விநியோகத்தையோ மாசுபடுத்த லாகாது ;

iii. அகற்றலுக்கும் பராமரிப்புக்கும் போதுமான அணுகு வழி வழங்கப்படல் வேண்டும் ; மற்றும்

iv. எந்தவொரு எதிர்பாராத சந்தர்ப்பங்களிலும் (உ-ம்: மின் வெட்டு) ஆரோக்கியத்தை பாதுகாக்கவல்ல போதுமான நியமங்களுக்கான அளவீடுகளை வழங்கல்.

(10) துணைக்கட்டுமானம் அல்லது புதிய கட்டட கட்டுமானத்திற்கான ஏதேனுமொரு அகழ்வு நடவடிக்கைகள் அல்லது தற்போதுள்ள கட்டடதிற்கான சேர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய பணிகள், அத்தகைய ஆதனத்திற்கும் அல்லது அயலாதனத்திற்கும் கழிவுகளைக் கடத்தும் பிரதான மூலம் அல்லது வடிகால்கள் அல்லது நீர்விநியோக மூலம் போன்றவற்றின் தொடர்ச்சியான பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் எந்தவித தடைகளும் ஏற்படாத வண்ணம் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

(11) அடைப்புகள் மற்றும் நீர் மூடிகள் (water seals), வெளியேற்ற கிளைக் குழாய்கள் மற்றும் இணைப்புகள், வெளியேற்ற குவியல் (discharge stacks) மற்றும் காற்றோட்ட குழாய்கள் மற்றும் குழாய் முறைமையின் ஏனைய கூறுகள் என்பவற்றை உள்ளடக்கிய சுகாதார குழாய் வலையமைப்புகள் அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த நபரால் வடிவமைக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, வடிகாலமைப்பு, சாக்கடை கழிவு குழிகள், புதை சாக்கடை குழி மற்றும் ஏதேனும் தொடர்புடைய உபகரணங்கள் என்பன கட்டடத்திலிருந்து தற்போதுள்ள சாக்கடை கழிவு குழி முறைமை அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையின் இணைப்பு பகுதி (point of connection) வரையில் வடிவமைப்பின் ஒரு பகுதியாக காணப்படல் வேண்டும். வடிகாலமைப்பு மற்றும் குழாய்வழிகளை குடியேற்றப் பகுதியிலிருந்து பாதுகாக்க, போதிய நடவடிக்கைகள் வடிவமைப்பில் முன்மொழியப்படல் வேண்டும் என்பதோடு தடைகளுக்கான பொருத்தமான அணுகல் பகுதி, பிராணிகள், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு, மற்றும் கட்டடத்தின் செயற்பாட்டு நடவடிக்கையின் போது தினசரி பராமரிப்பில் எதிர்நோக்கும் ஏதேனுமொரு எதிர்பாரா பிரச்சனைகள் என்பவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**மழைநீர் சேகரிப்பு மற்றும் வடிகாலமைப்பு**

76.

(1) அனைத்து கட்டடங்களுக்கும்:

அ. கட்டடத்தின் கூரையிலிருந்து மழைநீர் வழிந்தோடக்கூடிய போதிய வடிகாலமைப்பு வசதிகளை வழங்கப்படல் வேண்டும் ;

ஆ. கட்டடத்தை சுற்றி காணப்படும் கல் பதிக்கப்பட்ட தரைப்பகுதி மழைநீர் போதியளவு வழிந்தோடக்கூடிய வகையில் கட்டப்படல் வேண்டும் ;

இ. மேலே (அ) மற்றும் (ஆ) குறிப்பிடப்பட்ட மழைநீர் சேகரிப்பு முறைமையானது மழைநீரை உள்ளடக்கும் முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிடப்பட்ட பின்வருவனவற்றில் ஒன்றிற்குள் வெளியேற்றப்படல் வேண்டும்:

i. பிரேரிக்கப்பட்ட கட்டடத்தின் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய கட்டமைப்புகளின் அத்திவாரத்தை பாதிக்காத வகையில் மழைநீரை உறுஞ்சுவதற்கான போதிய மழைநீர் விநியோகத்தை அனுமதிக்கும் நிலத்தடி உறிஞ்சல்கள் உட்பட்ட வேறு ஏதேனும் போதிய உறிஞ்சல் அல்லது போதிய ஊடுபுகும் முறைமைகளுக்குள் மழைநீர் சேகரிப்பு செலுத்தப்படல் வேண்டும்.
அல்லது இது நடைமுறையில் சாத்தியமற்ற சந்தர்ப்பத்தில்,

ii. வீதியோர மழைநீர் வடிகாலமைப்பு (பொருத்தமான அதிகாரசபையின் அனுமதியுடன்) அல்லது நீர் வழிகள், கால்வாய்கள் அல்லது நீர் வழிகளுக்குள் செலுத்தப்பட்ட மழைநீர் வடிகாலமைப்பானது அடைப்புகள் அல்லது நிரம்பி வழிந்தோடல் போன்றவற்றை ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) மழைநீர் அகற்றல் தொடர்பாக பின்வருவன தடை செய்யப்படல் வேண்டும் :-

அ. தளத்தில் அமையப்பெற்ற கழிவுநீர் சேகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை, திறந்த வடிகால் அல்லது பொது சாக்கடை முறைமை என்பவற்றுடன் இணைக்கப்படல் ;

ஆ. அயலாதனத்திற்குள் வெளியேற்றல்.

(3) அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர், அபிவிருத்தி செயற்பாடு தொடர்பாக அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக கட்டட வரைபடங்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் கட்டட வரைப்படங்களுடன் இணைத்து, **அட்டவணை 14 இன் பகுதி** i, **பகுதி** ii **மற்றும் பகுதி** iii என்பவற்றில் குறிப்பிடப்பட்ட கட்டட மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு தயார் செய்யப்பட்ட குறித்த ஆதனத்திற்கான முன்மொழியப்பட்ட வடிகாலமைப்பு முகாமைத்துவ திட்டமொன்றினையும் சமர்பித்தல் வேண்டும்.

(4) தொடர்புடைய அதிகாரசபையால் தேவையென கருதப்படும் சந்தர்ப்பத்தில், அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் **அட்டவணை 14 இன் பகுதி** i, **பகுதி** ii **மற்றும் பகுதி** iii என்பவற்றில் குறிப்பிடப்பட்ட கட்டட மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த நபரால் தயார் செய்யப்பட்ட வடிகாலமைப்பு முகாமைத்துவ திட்டமொன்றினை சமர்பித்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு வடிகாலமைப்பு முகாமைத்துவ திட்டமும் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:

அ. கட்டட பணிகள் நடைபெறாத அபிவிருத்தி நடவடிக்கை அல்லது அபிவிருத்தி நடவடிக்கை காணி அபிவிருத்தியோடு மட்டுப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில்

i. தற்போதுள்ள வடிகாலமைப்பு முறைமையின் அமைவிட விபரங்கள் மற்றும் அளவுப்பிரமாணங்கள் (ஏதேனும் காணப்படுமாயின்) ;

ii. அனைத்து அளவுப்பிரமாணங்கள் மற்றும் ஓட்ட திசைகளை உள்ளடக்கிய மழைநீர் சேகரிப்பு முறைமையுடன் இணைந்த பிரேரிக்கப்பட்ட வடிகாலமைப்பு முறைமை ;

ஆ. கட்டட பணிகள் ஈடுபடுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கையில்

iii. தற்போதுள்ள நீர் வடிகாலமைப்புகள் மற்றும் திறந்த நீர் வழிகள் (ஏதேனும் காணப்படுமாயின்) என்பவற்றின் அமைவிடங்களை உள்ளடக்கிய சுற்றுப்பகுதியின் திட்ட மாதிரிப்படம் ;

iv. ஒவ்வொரு மாடியின் கூரைத் திட்டம் மற்றும் தளத் திட்டம் மற்றும் தட்டையான கூரை, மேல்மாடங்கள், திறந்த பகுதிகள் மற்றும் கட்டிடத்தின் அத்தகைய பகுதிகளிலிருந்து மழைநீரை வடிகட்டி கொண்டு செல்லும் அனைத்து குழாய்களின் அளவுகள், மழைநீர் சேகரிப்பு தாங்கியின் அளவுகள் மற்றும் அமைவிடம், ஊடுருவல் பகுதிகள் மற்றும் வெளியேற்ற வடிகால்களுடன் மழைநீர் வெளியேற்றத்தின் ஓட்ட திசையைக் குறிக்கும் அம்புக்குறிகள் ;

v. சேகரிப்பு தாங்கிகள், கீழ்குழாய்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய உபகரணங்களை உள்ளடக்கிய கட்டடத்தின் குறுக்கு மற்றும் நெடுக்கு தோற்றங்கள்.

(6) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அயல் ஆதன உரிமையாளரால் பொதுவான மழைநீர் சேகரிப்பு வசதிகள் பிரேரிக்கப்படுமாயின், அத்தகைய கூட்டு வசதி தொடர்பாக அனைத்து உரிமையாளர்களாலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு எழுத்து மூல ஒப்புதலை சமர்பித்திருப்பதனை தொடர்புடைய அதிகாரசபை ஏற்றுக்கொண்டு தொடர்புடைய அதிகாரசபையால் தீர்மானிக்கப்பட்ட இடத்தில் இக்கூட்டு வசதி அமையப்பெறல் வேண்டும்.

(7) ***அட்டவணை 14*** இல் வரையறுக்கப்பட்ட எந்தவொரு ஆதனத்திற்குமான சம மழைநீர் சேகரிப்பு ஏற்பாடுகளை மதிப்பிடும் போது:

அ. பின்வரும் அம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டும்:

i. தீயணைப்பு தேவைப்பாடுகளுக்கான நீரை சேமிக்கும் இடவசதி மற்றும் அத்தகைய தீயணைப்பு தேவைப்பாடுகளை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ;
ii. 0.5 கன மீற்றருக்கு போதுமான கல் பதிக்கப்படாத 100 சதுர மீற்றர் அளவான நிலப்பகுதி ;
iii. மழைநீருக்காக விசேடமான ஊடுருவல் அகழிகளின் அமைவிடங்கள் ; மற்றும்
iv. ஏதேனும் வசதிகள் அயலாதனத்தில் காணப்படுமாயின், அவ்வசதிகளை பயன்படுத்துவதற்கு குறித்த உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட எழுத்து மூலமான ஒப்புதல்.

ஆ. பின்வரும் அம்சங்கள் கருத்தில் கொள்ள முடியாது:

i. பொது பிரதான விநியோகத்திற்கான சேகரிப்பு இடங்கள்
ii. கழிவகற்றல் தொட்டி, உறிஞ்சல் தொட்டி அல்லது அகழிகள் என்பவை காணப்படுகின்றமை.

(8) இவ்வொழுங்குவிதிகளின் அடிப்படையில் மழை நீர் சேகரிப்பிற்காக பின்வரும் வடிவமைப்பு மற்றும் கட்டுமான ஆலோசனைகள் பொருத்தப்பாடுடையதாக இருத்தல் வேண்டும்:

அ. மழைநீர் சேகரிப்பு முறைமையானது, தொடர்புடைய அதிகாரசபையால் அவ்வப்போது குறிப்பிடப்படும் போதிய தகைமைகளைக் கொண்ட நபரால் வடிவமைக்கப்படல் வேண்டும், மற்றும்:

i. திறமையான முறையில் கட்டப்படல் வேண்டும் ;
ii. முறைமையானது முதல் பெய்யும் மழைநீரை வெளியேற்ற போதுமான வசதி காணப்படல் ;
iii. பொருத்தமான அளவிலான கட்டமைப்பில் நீர் களஞ்சியப்படுத்தப்படல் ; மற்றும்
iv. களஞ்சியப்படுத்தப்பட்ட நீரானது உறிஞ்சல் குழி, தோண்டப்பட்ட அல்லது ஆழ்துளைக் கிணறு, குளம் அல்லது பிற ஒத்த நடவடிக்கைகளின் மூலம் தரையில் ஊடுருவி, வீடு, தோட்டம் மற்றும் நிலத்தோற்ற வடிவமைப்பு நோக்கங்களுக்காக உகந்த வகையில் பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்தல்.

ஆ. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பானது பின்வரும் நிபந்தனைகளுடன் அது எதிர்நோக்கவுள்ள அனைத்து விபத்துகளிலிருந்தும் பாதுகாக்கப்படல் வேண்டும்:

i. தகுதிவாய்ந்த நபரின் மேற்பார்வையின் கீழ் பொருத்தமான கட்டமைப்பில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் ;
ii. தூசி, பூச்சிகள் மற்றும் மாசுகளை அகற்றுவதற்கான வழிகளைக் கொண்டிருத்தல் ;
iii. அத்தகைய வடிவமைப்பு குறித்த அதிகாரசபையால் குறித்துரைக்கப்பட எந்தவொரு கட்டட ஒழுங்குவிதிகள் அல்லது அழகியல் நோக்கங்களுடன் முரண்படலாகாது ;
iv. நீர் சேகரிப்பின் அதிகபட்ச பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக தரைமட்டத்திற்கு கீழேயோ அல்லது மேலேயோ பொருத்தமான இடத்தில் அமையப்பெறல் வேண்டும்.

இ. வீட்டுத்திட்டம் அல்லது ஏனைய வேறு தேவைகளுக்காக நீர் பயன்படுத்தப்படாதவிடத்து, குறித்த ஊடுருவல் கட்டமைப்பானது உட்செலுத்தப்படும் நீரின் அளவை தக்கவைப்பதற்கும் மற்றும் முறையான ஊடுருவலை உறுதி செய்வதற்கும் ஏற்ற வகையில் குறித்துரைக்கப்பட்ட அளவுப்பிரமாணங்களில் அமையப்பெறல் வேண்டும் ;

ஈ. பொது சேகரிப்பு கட்டமைப்புகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய சேகரிக்கப்பட்ட மழைநீரானது பொது பிரதான முறைமைக்குள் நுழைவதை தடுக்கும் வகையில், பொருத்தமான பின் ஓட்ட தடுப்பு சாதனங்களுடன் இணைந்த வகையில் கட்டப்படல் வேண்டும் ;

உ. மழைநீர் மற்றும் பொது பிரதான முறைமைகள் மற்றும்/ அல்லது வேறு ஏதேனும் குடிநீர் வலையமைப்புகளுக்கும் இடையிலான நேரடி குறுக்கு பாய்ச்சல் இணைப்பு காணப்படாமல் இருத்தல் வேண்டும் ;

ஊ. மழைநீர் சேகரிப்பிற்காக பயன்படுத்தப்படும் அனைத்து குழாய்கள் மற்றும் சாதனங்களும் வேறுபட்ட நிறம் மற்றும் குறியீடுகளால் தெளிவாக வேறுபடுத்தப்படல் வேண்டும்.

## திண்ம கழிவு முகாமைத்துவம்

77. (1) அனைத்து வகையான கட்டடங்களுக்கும், அதன் ஆதனத்திற்குள்ளேயே திண்மக்கழிவுகளை சேகரித்து அவை அகற்றப்படும்வரை களஞ்சியப்படுத்திவைப்பதற்கான போதிய இட வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும் மற்றும் அத்தகைய சேகரிப்பு மற்றும் /அல்லது களஞ்சியப்படுத்தப்படும் இடங்கள், சுகாதார அல்லது சமூக வசதிகளுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தாத வகையில் வடிவமைக்கப்பட்டு அமையப்பெறல் வேண்டும்.

(2) 400 ச.மீ மற்றும் 300 ச.மீ தளப்பரப்பளவை விஞ்சும், முறையே வதிவிடம் மற்றும் வதிவிடம் அல்லாத கட்டடங்களுக்கு திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் அகற்றலுக்கான சிபாரிசு அனுமதியானது தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது தொடர்புடைய அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளல் முடியும். கட்டட கட்டுமானத்திற்கு முன்னர், திண்மக்கழிவு முகாமைத்துவ முன்மொழிவு ஒன்றிக்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள உள்ளூராட்சி அதிகாரசபை வழிநடத்துமாயின், அபிவிருத்தியாளர் அத்தகைய அனுமதியினை பரிந்துரைக்கப்பட்ட படிமுறை மற்றும் வழிநடத்துதலுக்கு இயைந்த வகையில் உள்ளூராட்சி அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதி வாய்ந்த நபரால் தயாரிக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ முன்மொழிவொன்றினை சமர்ப்பித்தப்பின்பு பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக, தேவையென கருதும் சந்தர்ப்பத்தில், தொடர்புடைய அதிகாரசபையானது அபிவிருத்தியின் பண்பினைக் கருத்தில் கொண்டு அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரை திண்மக்கழிவு அகற்றலுக்கான அனுமதியினை தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வழிநடத்தலாம்.

(3) திண்மக்கழிவுகளை குறைத்தல், மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான தந்திரோபாய உத்திகளை அபிவிருத்தியாளர் பின்பற்ற வேண்டும் என்பதோடு ஆதனத்திற்குள் கழிவுகளை தரம் பிரிக்க ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். இதன் அடிப்படை நோக்கமானது கழிவுகளை குறைத்தல் மற்றும் மீள் சுழற்சி செய்வதற்கான நிலையான நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குவதோடு திண்மக் கழிவுகளை பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் முறையாக அகற்றும் அபிவிருத்தியாளரின் நோக்கத்தையும் மாசுப்படுத்தலை குறைப்பதனையும் சுற்றுச்சுழல் பாதுகாப்பினை ஊக்கப்படுத்துவதனையும் உள்ளடக்குகிறது.

78. (1) வதிவிட அபிவிருத்திகளில், திண்மக்கழிவுகள் பின்வரும் வழிகாட்டல்களைக் கொண்டு முகாமைத்துவப்படுத்தப்படல் வேண்டும்

அ. திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் சேமிப்பு அறையானது உள்ளூராட்சி அதிகாரசபையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தேவையான எண்ணிக்கையிலான தொட்டிகள் அல்லது தேவைப்பாடுகளுக்கு இணங்க அளவு (அல்லது கொள்ளளவு) மற்றும் வடிவமைப்பைக் (உதாரணம் சக்கரத் தொட்டிகள், குப்பை வாகனத்திற்குள் இலகுவாக கழிவுகளை உட்செலுத்தக்கூடிய பொறிமுறையுடனான தொட்டிகள்) கொண்ட வேறு ஏதேனும் பொருத்தமான கொள்கலன்களை பொருத்துவதற்கான போதுமான பரப்பை கொண்டிருக்க வேண்டும் ;

ஆ வதிவிட அபிவிருத்திகளுக்கு, ஒரு வாரத்திற்கும் குறைவான சேகரிப்பு சுழற்சிமுறையைக் கொண்ட குடியிருப்பு ஒன்றிக்கு 0.25 கன மீற்றர் ஒருங்கிணைக்கப்பட்ட கொள்ளளவையுடைய கொள்கலன்களை அல்லது உள்ளூராட்சி அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிற கொள்ளளவையுடைய கொள்கலன்களை பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரிப்பதற்காக பொருத்தமான இடம் வழங்கப்படல் வேண்டும். (அதாவது அழிந்துபோகக்கூடிய (உணவு) கழிவுகள், மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மற்றும் மீள்சுழற்சி செய்ய முடியாத கழிவுகள் தனித்தனியாக சேமிக்கப்படுகின்றன). சேகரிப்பானது ஒரு வாரத்திற்கும் குறைவான சுழற்சிமுறையில் இடம்பெறுமாயின் இவ்விடமானது அதிகரிக்கப்படும் ;

இ. அபிவிருத்தியானது குறை எழுச்சி வதிவிட அபிவிருத்தியாக காணப்படும் சந்தர்ப்பத்தில் (தரைதளம் + 4 தளங்கள்) ;

i. அத்தகைய அபிவிருத்தியின் ஒரு குடியிருப்பு அலகானது பிரித்தல், சேகரித்தல், சேமித்தல் மற்றும் திண்மகழிவுகளை சேகரிப்பாளரிடம் ஒப்படைத்தல், உள்ளூராட்சி அதிகாரசபையின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்தல் போன்ற வழிமுறைகளைக் கொண்டிருத்தல் ;

ii. ஒவ்வொரு குடியிருப்பு அலகுகளுக்கும் தனித்தனி சேமிப்பு இடங்கள் வழங்கப்படுமாயின் 1.2 மீ - 1.2 மீ பரப்பளவைக் கொண்ட பகுதியானது கழிவு கொள்கலன்களை சேமிப்பதற்கு போதுமானதாக அமைய வேண்டும் என்பதோடு அணுகுவதற்கான பகுதியும் வழங்கப்படல் வேண்டும்.

ஈ. அடுக்குமாடி குடியிருப்பு அபிவிருத்திகளில், குடியிருப்புகள் ஒவ்வொன்றும் சொந்த கழிவுக் கொள்கலனைக் கொண்டிருக்கலாம் அல்லது கழிவுக் கொள்கலனைப் பகிர்ந்து கொள்ளலாம். பொது சேமிப்பு/ களஞ்சிய பகுதி வழங்கப்படுமாயின் இட தேவைப்பாடுகள் உள்ளூராட்சி அதிகாரசபையின் அல்லது பொருத்தமான நிறுவனங்களின் ஆலோசனையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ;

உ. அபிவிருத்தியானது உயர் எழுச்சி வதிவிட அபிவிருத்தியாக காணப்படும் சந்தர்ப்பத்தில் குப்பை குழாய் தொட்டியினூடாக வரும் மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியாத கழிவுகளுக்கு ஒரு கழிவு கொள்கலனை குடியிருப்புகள் பகிர்ந்து கொள்ளலாம் அல்லது பொருத்தமான இடத்தில் வைக்கப்பட்ட கழிவு கொள்கலனில் இடலாம் மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய அல்லது உக்கக்கூடிய கழிவுகள் தனியான களஞ்சியப்படுத்தப்படலாம். களஞ்சிய பகுதிகள் அல்லது அறைகள் உள்ளூராட்சி அதிகாரசபை அல்லது தொடர்புடைய நிறுவனங்களின் தேவைப்பாடுகளுக்கு இயைந்த வகையில் வழங்கப்படல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், கழிவுகளை களஞ்சியத்திற்கு மாற்றம் செய்வதற்கான திருப்திகரமான முகாமைத்துவ ஒழுங்குபடுத்தல் உறுதி செய்யப்படல் வேண்டும் ;

ஊ. அனைத்து வகையான கட்டடங்களுக்கும், கழிவு சேகரிப்பு மற்றும் சேமிப்புப் பகுதிகள்/ அறைகள் கட்டடத்தின் குடியிருப்பாளர்களுக்கும் பயனாளிகளுக்கு பாதுகாப்பானதாகவும் மற்றும் இலகுவாக அணுகக்கூடியவாறாகவும், மேலும் கழிவு சேகரிப்பு வாகனங்கள் திண்மக்கழிவுகளை அகற்றக்கூடிய வகையில் நேரடி அணுகுதலை கொண்டிருக்கக்கூடியவாறு பொருத்தமான இடத்தில் அமையப்பெற்றிருக்க வேண்டும் கழிவுக் கொள்கலன்களுக்கான (குப்பை குழாய் தொட்டி) களஞ்சிய பகுதிகள் குடியிருப்பாளர்கள் கழிவுப்பொருட்களை கொண்டு செல்லக்கூடியவாறு 100 மீற்றரை விஞ்சாத இடைத்தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் (எந்தவொரு நிலைகுத்து தூரத்தை தவிர்த்து) ;

எ. உயிரெழுச்சி வதிவிட அபிவிருத்திகளில் காணப்படும் கழிவு சேகரிப்பு நிலையமானது கழிவு சேகரிப்பு அதிகாரசபை அல்லது பிற கழிவு சேகரிப்பாளர்களால் பயன்படுத்தப்படும் கழிவு சேகரிப்பு வாகனங்களின் அளவுக்கேற்ப இலகுவாக அணுகக்கூடியவாறு அமைதல் வேண்டும், உதாரணம் : மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள். கழிவு சேகரிப்பு வாகனத்திற்கு ஒரு பொருத்தமான தரிப்பிடம் அமையப்பெற வேண்டும் கழிவு சேகரிப்பு மற்றும் சேமிப்பு பகுதி கட்டடத்திற்குள் அமையப்பெற்றிருப்பின், குறைந்தபட்ச உட்கூரை உயரமானது (தரைக்கும் வளைவடிச் செதுக்குமானத்திற்கும் இடையிலான தெளிவான தூரம்) தொடர்புடைய அதிகாரசபையின் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும் ;

ஏ. வெளிப்புற சேமிப்புப் பகுதியானது யன்னல்கள் மற்றும் காற்றோட்ட இடங்களிலிருந்து தொலைவிலும் மற்றும் நிழற்பகுதிகள் அல்லது கூரைக்கு அடியில் அமையப்பெற வேண்டும் என்பதோடு கட்டடத்திற்கான பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் அணுகு வழியில் எவ்வித இடையூறும் ஏற்படுத்தாவண்ணம் அமைதல் வேண்டும் ;

ஐ. 250 லீற்றர் வரையிலான கழிவுக் கொள்கலன்களுக்கு, கொள்கலன் சேகரிப்பிடத்திற்கும் மற்றும் சேகரிப்பு நிலையத்திற்கும் இடையில் படிகள் வழங்கப்படல் வேண்டும், அவை 3 ற்கு விஞ்சாமல் இருக்க வேண்டும். சரிநிலையானது 1:12 ஐ விஞ்சக்கூடாது. விதிவிலக்காக நீளம் அதிகமாக காணப்படாத சந்தர்ப்பத்திலும் மற்றும் சரிவுநிலை தொடரின் ஒரு பகுதியாக காணப்படாத சந்தர்ப்பத்திலும் இது அதிகரிக்கப்படலாம். பாரிய கொள்கலன்கள் பயன்படுத்தப்பட வேண்டிய களஞ்சிய பகுதிகளுக்கு, படிகள் தவிர்க்கப்பட வேண்டும். சாத்தியமில்லாத சந்தர்ப்பத்தில், களஞ்சிய பகுதி இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் ;

ஒ. கூட்டுக் கொள்கலன்களுக்கான மூடிய அடைப்புகள் அல்லது களஞ்சிய அறைகள் குறைந்தபட்சம் 2 மீ உயரமுடையதாக இருத்தல் வேண்டும் என்பதோடு தனிப்பட்ட கொள்கலன்களுக்கான அடைப்பானது நிரப்புதலுக்காக இலகுவான முறையில் மூடியை திறக்க கூடியவாறு போதுமான உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

ஓ. அடைப்புகள் அல்லது களஞ்சிய அறைகள் போதுமான காற்றோட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அவை கல் பதிக்கப்பட்ட ஊடுருவ முடியாத தளத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டு களஞ்சிய பகுதிகள் மாசுபட்ட கழிவுகளைப் பெறுவதற்கு ஏற்றவாறான முறைமை ஒன்றிற்குள் தளப்பகுதியை கழுவுவதற்கும் கழுவுநீர் வழிந்தோடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இக்களமானது நீண்டகால பாவனையின்மையின் போதும் மூடப்பட்ட பொறியைக் கொண்டிருக்க கூடியவாறு அமைதல் வேண்டும் ;

ஔ. களஞ்சிய அறைகள் வழங்கப்படுமிடத்து, அழுகக்கூடிய (உணவு) கழிவுகள், மீள் சுழற்சி செய்ய முடியாத கழிவுகள் மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை களஞ்சியப்படுத்த தனிப்பட்ட அறைகள் வழங்கப்படல் வேண்டும் ;

ஃ. உயிரெழுச்சி வதிவிட அபிவிருத்திகளில் கழிவு குழாய்த் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் (குடியிருப்பு கட்டடங்களில் கழிவு குழாய்த் தொட்டிகளை நிறுவ உள்ளூராட்சி அதிகாரசபை அனுமதித்தால் மட்டுமே), அவை குறைந்தது 450 மிமீ விட்டம் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதோடு குடியிருப்புகளைக் கொண்ட ஒவ்வொரு தளங்களிலும் உறிஞ்சப்படாத மேற்பரப்பு மற்றும் நெருக்கமான அணுகல் கதவுகளைக் கொண்டிருக்க வேண்டும். மற்றும் அவை மேல் பகுதியாலும் மற்றும் கீழ் பகுதியாலும் காற்றூட்டப்படல் வேண்டும்.

(2) வதிவிடம் அல்லாத அபிவிருத்திகளில், பின்வரும் வழிகாட்டல்களுக்கு இயைந்தவகையில் திண்மக்கழிவு முகாமைத்துவப் படுத்தப்படல் வேண்டும்.

அ. கழிவுக் களஞ்சிய அடைப்புகள் அல்லது அறைகளுக்கான வடிவமைப்புகள், கழிவுகளின் வகை மற்றும் அளவு மற்றும் சேகரிப்பு சுழற்சிச் காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட கழிவுகளின் கொள்ளளவு மற்றும் தன்மை மற்றும் தேவையான களஞ்சிய கொள்ளளவு என்பவற்றினூடாக தீர்மானிக்கப் படும் ;

ஆ. கழிவு முகாமைத்துவ தந்திரோபாய உத்தியானது மீள் சுழற்சி செய்யக்கூடிய மற்றும்/ அல்லது மீள் பயன்பாட்டிற்கு உட்படுத்தக்கூடிய கழிவுகளை பிரிப்பதற்கான எந்தவொரு தேவைப்பாடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதோடு பொருத்தமான இடங்களில் போதிய அளவிலான களஞ்சியப்படுத்தல் இடங்கள் வழங்கப்படல் வேண்டும் ;

இ. கழிவு சேகரிப்பு பகுதிகள் மற்றும் களஞ்சியப் பகுதிகள், கழிவுப்பொருள் சுத்திகரிப்புப் பகுதிகள் மற்றும் வாகனங்கள் மற்றும் இயக்குனர்களுக்காண அணுகு வழி என்பன வரைப்படத்தில் தெளிவாக குறித்து காட்டப்படல் வேண்டும் ;

ஈ. கழிவு களஞ்சிய பகுதியானது உறிஞ்சக்கூடிய தளத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதோடு மாசுபட்ட கழிவுகளைப் பெறுவதற்கு ஏற்றவாறான முறைமை ஒன்றிற்குள் தளப்பகுதியை கழுவுவதற்கும் கழுவுநீர் வழிந்தோடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இக் களமானது நீண்டகால பாவனையின்மையின் போதும் மூடப்பட்ட பொறியைக் கொண்டிருக்க கூடியவாறு அமைதல் வேண்டும் ;

உ. கழிவுகளை பாதுகாப்பான, மூடப்பட்ட கொள்கலன்களில் சேமிக்காவிடத்து, கழிவுகளை களஞ்சியப்படுத்தும் எந்தவொரு திறந்த களஞ்சியம் அல்லது வளாகமானது பூச்சிகள், பறவைகள் அல்லது வேறு ஏதேனும் விலங்குகளின் அணுகலைத் தடுக்கக்கூடியவாறு பாதுகாக்கப்படல் வேண்டும் ;

ஊ. வதிவிடம் அல்லாத அபிவிருத்தியில், முறைமை ஒன்றை வழங்குவதில், உயர் அடர்த்தி அபிவிருத்திகள் போன்ற விசேட சிக்கல்கள் செல்வாக்கு செலுத்துமிடத்து, கழிவு களஞ்சியப்படுத்தல் மற்றும் சேகரிப்பு பகுதிகளின் வடிவமைப்பானது தொடர்புடைய உள்ளூராட்சி அதிகாரசபை அல்லது நிறுவனங்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை பெறுவது அவசியமாகும்.

(3) மாநகர திண்மக்கழிவுகளைத் தவிர்த்து, கழிவுகளை சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், செயற்படுத்தல், சுத்திகரித்தல், அகற்றுதல் (ஏதேனும் காணப்பட்டால்) போன்ற செயற்பாடுகளுக்கு முறையான அணுகுதலுடன் கூடிய தனியான மற்றும் பொருத்தமான வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பான இடங்கள் கட்டடத்தின் வடிவமைப்பில் ஒதுக்கப்படல் வேண்டும். அத்தகைய கழிவுகள் கட்டுமானம் மற்றும் கட்டட இடிபாட்டு கழிவுகள், தொழில்துறை கழிவுகள் மற்றும் கசடுகள், தேசிய சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள அட்டவனைப்படுத்தப்பட்ட கழிவுகள், அபாயகரமான கழிவுகள் (எதிர்வினை, நச்சு அல்லது அரிக்கும், அல்லது வேறு), மின்னணு கழிவுகள் போன்றவற்றை உள்ளடக்கும்.

**உள்ளக தொலைபேசி தொடர்பாடல்**

79. கட்டடத்தின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு தொடர்புடைய நிறுவனத்தின் பரிந்துரைகள் மற்றும் வழிநடத்துதகளுக்கு ஏற்ப, முழு ஆதனத்தையும் உள்ளடக்கி போதுமான அளவில் அக்கட்டடத்திற்கான உள்ளக தொலைபேசி தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.

80. 15 மீற்றருக்கு மேற்பட்ட உயரமுடைய ஒவ்வொரு கட்டடங்களுக்கும் மின் பிறப்பாக்கிக்கான இடமொன்று ஒதுக்கப்படல் வேண்டும் அல்லது தொடர்புடைய அதிகாரசபையால் கட்டடத்தின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிடப்பட்டவாறு ஏற்பாடு செய்ய வழிநடத்தலாம்.

## பகுதி V

### கட்டடப் பணிகளை ஆரம்பித்தல்

81. (1) தொடர்புடைய அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் இன்றி அபிவிருத்தியையும் ஆரம்பித்தல், தொடர்தல், முழுமையடையச் செய்தல் இயலாது.

(2) ஒவ்வொரு அபிவிருத்தியும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இயைந்திருத்தல் வேண்டும்.

(3) அபிவிருத்தியானது 900 சதுர மீற்றரை விட அதிகரித்து அல்லது கட்டடமானது தரைதளத்துடன் 4 அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளை கொண்டு காணப்படும் சந்தர்ப்பத்தில், தொடர்புடைய அதிகாரசபையால் அனுமதிக்கப்பட்ட வரைப்படத்தின் இலக்கம் மற்றும் திகதியும் மற்றும் உரிமையாளர், ஒப்பந்தக்காரர் மற்றும் கட்டடக் கலைஞரின் விபரங்களும் மற்றும் தொடர்பு தகவல்களும் உள்ளடங்கலான 2.5 மீற்றர் நீளமும் மற்றும் 1.5 மீற்றர் அகலமும் கொண்ட அறிவித்தல் பலகையொன்று காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(4) தொடர்புடைய அதிகாரசபையானது கட்டடப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் அல்லது தொடர்வதற்கும் வசதியளிக்கும் முகமாக ஒரு தற்காலிக கட்டட அமைப்பை **விதிமுறை 106** இன் படி குறித்த ஒரு காலப்பகுதிக்கு அனுமதிக்கலாம்.

(5) ஏதேனுமொரு பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் கட்டடப் பணிகள் ஆழ் துளையிடல் அல்லது நில அகழ்வு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுமாயின் காப்புறுதி அறிக்கை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(6) அபிவிருத்திக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் முன் ஆழ் துளையிடலுக்கான அனுமதியுடன் கட்டுமான நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்பதோடு அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தினை அடித்தளப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

82. (1) அபிவிருத்திக்கான அனுமதிப்பத்திம் வழங்கப்பட்ட 900 சதுர மீற்றருக்கு மேற்பட்ட தளபரப்பளவைக் கொண்ட அல்லது தரைதளத்துடன் 4 மாடிகளை கொண்ட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் வரையறுக்கப்பட்ட வடிவமைப்பிற்கு இயைந்திருப்பதை உறுதி செய்யும் பொருட்டு குறித்த அதிகாரசபையால் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்திம் வழங்கப்பட்ட கட்டுமான காலப்பகுதியில் ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒருமுறை அபிவிருத்தி தளத்திற்கு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவருக்கு பிந்தைய அனுமதிப்பத்திர தொடர் மற்றும் கண்காணிப்பு அறிக்கை வழங்குதல் வேண்டும்.

(2) அதிகாரசபையால் **ஒழுங்குவிதி 82 (1)** கீழ் வழங்கப்பட்ட பிந்தைய அனுமதிப்பத்திர தொடர் மற்றும் கண்காணிப்பு அறிக்கையின் திகதியிலிருந்து அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவர் 14 நாட்களுக்குள் எவ்வித பதிலும் அளிக்காவிடத்து அதிகாரசபை அவ் அறிக்கையை மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்புதல் வேண்டும்.

(3) இடைநிலை மற்றும் பிந்தைய அனுமதிப்பத்திர தொடர் மற்றும் கண்காணிப்பு இறுதி அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான எழுத்துமூல கோரிக்கையினை அதிகாரசபைக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) அத்தகைய அறிக்கைக்காக செலுத்த வேண்டிய கட்டணமானது இவ்வொழுங்குவிதியின் அட்டவணை 2 இல் குறிப்பிட்டவாறு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## பகுதி VI

### அமைவுச் சான்றிதழ்

83. (1) அபிவிருத்தியானது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மற்றும் அபிவிருத்தி அனுமதி பத்திரத்திற்கு இணங்குவதை உறுதிப்படுத்தி தொடர்புடைய அதிகார சபையிலிருந்து அமைவுச் சான்றிதழ் வழங்கப்படும் வரை, கட்டுமானம் நிறைவுற்ற எந்தவொரு அபிவிருத்தியினையும் குடியிருப்பதற்கு அல்லது அனுமதிப்பதற்கு அல்லது மூன்றாம் நபர் குடியிருப்பதற்கு உடன்படுவதற்கு அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவருக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(2) அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பங்களும் பொருத்தமான ஆவணங்களுடன் **அட்டவணை 1 இன் படிவம் "ஊ" இல்** குறிப்பிட்டதற்கு இணங்க மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(3) அத்தகைய விண்ணப்பங்களுக்கான கட்டணமானது இவ்வொழுங்கு விதியின் அட்டவணை 2 இல் குறிப்பிட்டவாறு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) தேவையான சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழி அணுகுமுறை மூலம் பொருத்தமான ஆவணங்களுடன் தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

84. (1) அமைவு சான்றிதழுக்காக விண்ணப்பிக்கும் முன்னர், அபிவிருத்தி தொடர்பாக அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையினை அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) விண்ணப்பமானது, சாத்தியமான சந்தர்ப்பத்தில் **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதி பெற்ற நபரினால் வழங்கப்படும் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, காணி உபபிரிவிடுகை அல்லது காணி ஒருங்கிணைப்பு என்பன அனுமதிக்கப்பட்ட நில அளவைப்படத்திற்கு அமைவாகவும் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) வீதிகள் மற்றும் மதகுகளின் கட்டுமானம் அல்லது அபிவிருத்திக்கு தொடர்பான வேறு ஏதேனும் பொறியியல் பணிகள் போன்றவற்றை உள்ளடக்கும் அபிவிருத்தியில், அபிவிருத்தி பணிகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்திசெய்திருப்பதனை உறுதிப்படுத்தி **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதி பெற்ற நபரினால் வழங்கப்படும் சான்றிதழுடன் விண்ணப்பங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

85. (1) கட்டடம் அல்லது அதன் பாகம் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக நிறைவடைந்திருப்பின், கட்டடத்தில் குடியிருப்பதற்கு, அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் அல்லது குடியிருப்பாளர் அதிகாரசபையிடம் அமைவுச் சான்றிதழைக் கோர வேண்டும்.

(2) அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவர் **ஒழுங்குவிதி 83** இன் கீழ் ஒரு நிறைவுசெய்யப்பட்ட கட்டிடத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு அமைவுச் சான்றிதழ் விண்ணப்பிக்கும் போது:

அ. அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.
ஆ. உரிய கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்படவேண்டும்.
இ. பொருத்தமாக இருப்பின்,

i. ஒழுங்குவிதியின் **அட்டவணை 3** இல் குறிப்பிடப்படுள்ள பொருத்தமான தகுதி வாய்ந்த நபரால் அபிவிருத்தியானது அவருடைய மேற்பார்வையின் கீழும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப் பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் ஓர் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும் ;

ii. **அட்டவணை 3** இல் குறிப்பிடப்படுள்ளதன் படி பட்டய கட்டட அல்லது கட்டமைப்பு பொறியியலாளர், அபிவிருத்தியானது அவரது மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது எனவும் மற்றும் கட்டமைப்பு விபரங்கள் யாவும் அனுமதிக்கப்பட்ட வரைபடம் மற்றும் அபிவிருத்திஅனுமதிப்பத்திரத்திற்கு அமைவாக உள்ளது என்பதை உறுதிப்படுத்திய சான்றிதழ் சமர்பிக்கப்படல் வேண்டும் ;

iii. **அட்டவணை 3** இல் குறிப்பிடப்படுள்ளவாறு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து, இயந்திர, மின்சார, குழாய் பொருத்துகை, நகரும் படிகட்டுகள்/ மின் உயர்த்திகள், ஒளியூட்டல் பாதுகாப்பு, காற்றோட்டம், வளி பதனாக்கல், வெப்பமாக்கல், கழிவு நீர் முறைமைகள், வடிகாலமைப்பு, மழை நீர் சேகரிப்பு முறைமைகள், தீயனர்த்த பாதுகாப்பு, தொடர்பாடல் மற்றும் வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் தீயனர்த்த எச்சரிக்கைகள் அல்லது ஏதேனுமொரு கட்டட சேவைகள் அல்லது ஏனைய தொடர்புடைய துறைகளுக்குரிய பணிகள், அவர்களுடைய மேற்பார்வையின் கீழும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் அதிகார சபையால் கோரப்படும் வரையறைகளுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட்டு உள்ளமையை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும் ;

iv. தொடர்புடைய அதிகாரசபை அல்லது தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற தீயனர்த்த சேவைகள், மின்சாரம், நீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவம் நிறுவனங்களிடமிருந்து தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

v. அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

vi. சான்றிதழ் மட்டம் அல்லது பசுமைக் கட்டட சான்றிதழுக்குரிய ஏனைய மட்டங்களுடன் அபிவிருத்தியானது இணங்கியிருத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

vii. அபிவிருத்தியானது, ஒழுங்கு விதி 55 (3-ஆ) இல் குறிப்பிடப்படுள்ளவாறு தரைத்தோற்ற வரைபடத்துடன் இயைந்திருப்பதனை உறுதிப்படுத்தி தகுதி வாய்ந்த நபரால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும் ;

viii. ஒழுங்கு விதி 82 இன் படி அதிகாரசபையிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பிந்தைய அனுமதி பத்திர தொடர் இறுதி அறிக்கை மற்றும் கண்காணிப்பு அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அமைவுச் சான்றிதழை வழங்குவதற்கு முன், அதிகாரசபையானது **அட்டவணை 5** இல் குறிப்பிடப்பட்ட பசுமைக் கட்டட மதிப்பிடல் சான்றிதழ் மட்டத்துடன் குறித்த அபிவிருத்தியானது இணங்கும் வகையில் அபிவிருத்திக்கு தேவையான திருத்தப்பணிகளை மேற்கொள்ள உரிமையாளர், அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவரை வழிபடுத்தலாம்.

(4) உரிமையாளர் அல்லது அபிவிருத்தியாளர் சான்றிதழ் மட்டம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பசுமை கட்டட மதிப்பிடலுக்கான மட்டத்தை உறுதிப்படுத்த தவறும் பட்சத்தில், அதிகாரசபையானது **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்டதற்கமைய குறித்த அபிவிருத்திக்கான மேலதிக கட்டணத்தை விதிக்க இயலும்.

86. (1) கட்டடம் ஒன்றிக்கான அமைவுச் சான்றிதழை வழங்கும் முன்னதாக, அதிகாரசபையின் தலைவர்/ முதல்வர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவருடைய பிரதிநிதியும் குறித்த கட்டடத்திற்கான அபிவிருத்தி பணிகள் நடைபெறும் காலப்பகுதியில், அபிவிருத்தி பணிகள் யாவும் ஒழுங்குவிதிகளுக்கு இயைந்திருப்பதை உறுதிசெய்யும் பொருட்டு, பொருத்தமான சந்தர்ப்பங்களில் எந்தவொரு கட்டடத்திற்குள்ளும் நுழைய முடியும்.

(2) தொடர்புடைய அதிகாரசபையின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, ஏதேனுமொரு அபிவிருத்தி ஆதனத்தினுள் அல்லது கட்டடத்திற்குள் நுழையும் முன் அல்லது களவிஜயம் மேற்கொள்ளும் போது தனது அடையாளத்தை வெளிப்படுத்தல்.

87. (1) கட்டடத்தினுடைய அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக அல்லது அனுமதிக்கப்பட்ட வரைபடம் அல்லது அபிவிருத்தி அனுமதிபத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாமலோ அல்லது அத்தகைய கட்டட வேலைகளை நிறைவு செய்யாமலோ அமைந்துள்ளதென திட்டமிற் குழுவால் தீர்மானிக்கப்பட்டு, அத்தகைய செயற்பாடுகள் கட்டடத்தின் பண்பையோ அல்லது குறித்த கட்டடத்தில் குடியேறவுள்ள தனி நபரின் நலனையோ பாதிக்காவிடத்து தொடர்புடைய அதிகாரசபை குறித்த கட்டடத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கான அமைவுசான்றிதழை வழங்க முடியும்.

(2) குறித்த ஒரு அபிவிருத்தியாளர், வழங்கபட்ட அபிவிருத்தி அனுமதிபத்திரத்தில் அல்லது அமைவுசான்றிதழில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் அத்துமீறியிருப்பதை தொடர்புடைய அதிகாரசபை இனங்காணுமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த அபிவிருத்திற்காக வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிபத்திரத்தை அல்லது அமைவுசான்றிதழை மீளப்பெறுவதற்கு தொடர்புடைய அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு.

88. (1) அமைவுச் சான்றிதழினை, தனி அலகு குடியிருப்பு கட்டடம் தவிர்ந்த கட்டடத்தில் அல்லது பாகத்தில், குடியிருப்பவர்கள் பற்றிய விழிப்புணர்வுக்காக பொருத்தமான இடத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(2) 15 மீற்றர் உயரத்திற்கு அல்லது 5 அலகுகளுக்கு மேற்பட்ட குடியிருப்பு கட்டடங்களின் ஒவ்வொரு மாடியிலும் மற்றும் 400 சதுர மீற்றர்க்கும் மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்ட அனைத்து குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களில் தீயணைப்பு வெளியேற்ற பாதை அல்லது பாதைகளை விபரிக்கும் வகையிலான தள வரைபடத்துடன் கூடிய தீயணைப்புச் சான்றிதழ் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

*89. 1. கட்டடத்திற்கான அமைவுச் சான்றிதழ் பெற்றபின், அத்தகைய கட்டடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் அல்லது அபிவிருத்தி அனுமதிபத்திரத்திற்கு இணங்குவதை உறுதிபடுத்த வேண்டிய கடமையிலிருந்து விலக்களிக்கப்படமாட்டார்.*

*2. கட்டடம் முழுமையாக அல்லது பகுதியாக பயன்படுத்த அல்லது குடியிருக்க வழங்கப்பட்ட தீயனர்த்த சான்றிதழ், தீயனர்த்த தப்பித்தல் வழிகள் தடைபடாமல் இருப்பதற்குத் தேவையான அனைத்து படிமுறைகளை உள்ளடக்கியிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.*

*90. எந்தவொரு உரிமையாளர், குடியிருப்பாளர் அல்லது அபிவிருத்தியாளர் கட்டடத்தினுடைய அல்லது அதன் பகுதியினை நியாயமான காரணமின்றி,* ***ஒழுங்கு விதி 82 முதல் 88*** *வரையிலானவற்றினை மீறுவது அல்லது பின்பற்றத் தவறுவது குற்றமாகும்.*

**பொதுக் கட்டடச் சான்றிதழ்**

*91. (1) ஒரு கட்டடமானது :*

*அ. பொது மக்களுக்கு அணுகலை வழங்குகின்ற ; அல்லது*

*ஆ. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 500 பேருக்கு அதிகமான நபர்களுக்கு இடமளித்தல் "பொது கட்டடம்" என அழைக்கப்படும். அத்தகைய கட்டடத்திற்கு அமைவுச் சான்றிதழ் பெற்றிருக்காத நிலையில் எந்தவொரு நபரும் அத்தகைய கட்டடத்தை அல்லது அதன் ஒரு பகுதியில் குடியிருக்க, பயன்படுத்த அல்லது எந்தவொரு நபரையும் குடியிருக்க அனுமதிக்கவோ இயலாது.*

*(2)* ***அட்டவணை 1 இன் படிவம் 'இ'*** *இல் குறிப்பிடப்பட்டதற்கு அமைய பொது கட்டட அபிவிருத்தி அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும்* ***அட்டவணை 1 இன் பின்னிணைப்பு I தொடக்கம் VI*** *வரை குறிப்பிடப்பட்ட எழுத்து மூல பிரகடனத்துடன், அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சம்பந்தப்பட்ட தகுதி வாய்ந்த நபர்களால் அங்கீகரிக்கப்பட்டு தொடர்புடைய அதிகாரசபைக்கு வழங்கப்படல் வேண்டும்.*

*(3) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய கட்டணத்துடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*(4) தேவையான சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழி அணுகுமுறை மூலம் பொருத்தமான ஆவணங்களுடன் தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*(5) ஒரு பொது கட்டடத்திற்கான கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கான விண்ணப்பம் பின்வருவனவற்றுடன் இணைந்ததாக காணப்படல் வேண்டும்*

*அ. எந்த நேரத்திலும் அதிகபட்சமாக எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையிலான குடியிருப்பாளர்களின் குடியிருப்புச் சுமைக்கு இடமளிக்கும் வகையில் கட்டடத்தின் கட்டமைப்புசார் உறுதித்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில்,* ***அட்டவணை 3*** *இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய தகைமை பெற்ற நபரால் வழங்கப்பட்ட சான்றிதழ்*

*ஆ. உத்தேசிக்கப்பட்ட பயன்பாடு மற்றும் கட்டடம் அல்லது அதன் பகுதியின் குடியிருப்பாளர்கள் பற்றிய அறிக்கை.*

*(6) பொது கட்டிடத்திற்கான அமைவுச் சான்றிதழ் பெறும் நோக்கத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பமும்* ***அட்டவணை 1 இன் படிவம் "ஊ"*** *உடன் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*(7) அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவரால் அமைவுச் சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது,* ***அட்டவணை 3*** *இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைப்பெற்ற நபர்களால் கட்டிடம் அல்லது அதன் பகுதியை பரீட்சித்து, அதன் ஒவ்வொரு முறைமையும் மற்றும் உபகரணமும் சீரான நிலையில், வழங்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைந்திருப்பதனையும் கட்டடங்களுக்கான தீயணைப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு இணங்கிருப்பதனை உறுதிப்படுத்திய சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

(8) அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவரால் அமைவுச் சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது **ஒழுங்குவிதி 94** இல் குறிப்பிடப்பட்டதற்கமைய, குறித்த கட்டடம் அல்லது அதன் பகுதியின் பாதுகாப்பு அலுவலராக நியமிக்கப்பட்டவரின் பெயர், தகைமைகள் மற்றும் ஏனைய பொருத்தமான விபரங்கள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(9) பொது கட்டடத்திற்காக வழங்கப்பட்ட அமைவுச் சான்றிதழ் ஐந்து (05) ஆண்டுகளுக்கு மேலதிகமாக செல்லுபடியாகாது மற்றும் உரிமையாளர், குடியிருப்பாளர் அல்லது அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவரின் கோரிக்கையின் பேரில் இரண்டு (02) வருடங்களுக்கு மேற்படாது புதுப்பிக்கப்படலாம். அத்தகைய கோரிக்கையானது அமைவுச் சான்றிதழ் காலாவதியாகும் இரண்டு மாத காலங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

(10) பொது கட்டடத்தின் அமைவுச் சான்றிதழ் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், **ஒழுங்குவிதி 91 (8)** இன் கீழ், வரைபடத்தில் மாற்றம் இல்லாவிடத்து அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. இருப்பினும், அத்தகைய கட்டடத்துடன் தொடர்புடைய அமைவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(11) பொது கட்டடத்திற்கான அமைவுச் சான்றிதழ் புதுப்பித்தல் தொடர்பாக, தொடர்புடைய நிறுவனம் வழங்கிய புதுப்பிக்கப்பட்ட தீயணைப்பு சான்றிதழ், கட்டடத்தின் கட்டமைப்பு ஸ்திரத்தன்மையை உறுதியளிக்கும் வகையில் அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொருத்தமான தகைமைப்பெற்ற நபர் / நபர்கள் வழங்கிய சான்றிதழ் மற்றும் தொடர்புடைய அதிகாரசபையால் கோரப்பட்ட வேறு ஏதேனும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(12) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கபட்ட ஒரு பொது கட்டடத்தினுடைய அமைவுச் சான்றிதழை பின்வரும் சந்தர்ப்பத்தில் மீளப்பெற அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு

அ. அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் எந்தவொரு கால அல்லது நிபந்தனையையும் மீறுதல் ;
ஆ. வழங்கப்பட்ட இவ்வொழுங்குவிதிமுறைகளுக்கு இணங்கத் தவறுதல் ;
இ. குறித்த விண்ணப்பங்களில் பயன்பாடு, திட்டங்கள் அல்லது ஆவணங்களின் விபரங்களை தவறாக சித்தரித்தல்.

92. தற்போதுள்ள கட்டடத்தை, பொது கட்டடமாக மாற்றும் சந்தர்ப்பத்தில் **அட்டவணை 3** இல் குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த நபரால் குறித்த கட்டடத்தின் கட்டமைப்பு சார் நிலைமைகளின் ஆய்வு அறிக்கை சமர்பிக்கப்படல் வேண்டும்.

93. ஒவ்வொரு பொது கட்டடங்களும் 1996 ம் ஆண்டின் 28ம் இலக்க விசேட தேவையுடையோர் உரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுடன் இயைந்திருத்தல் வேண்டும்.

94. பொது மக்களுக்கு அணுகலை வழங்கும் அல்லது 500 பேருக்கு மேற்பட்ட கொள்ளளவைக்கொண்ட குறித்த ஒரு கட்டடத்தின் அல்லது அதன் பகுதியின் உரிமையாளர், குடியிருப்பாளர் அல்லது அவரின் முகவர் பின்வரும் நோக்கங்களுக்காக, பொறுப்பு வாய்ந்த நபரொருவரை பாதுகாப்பு உத்தியோகத்தராக நியமித்தல் வேண்டும்.

(1) கட்டடத்தினுள் அல்லது அதன் பகுதியினுள் சிறந்த பராமரிப்பு விதிகளையும் தீயனர்த்த காப்பு முன்னேற்பாடுகளையும் அமுல்படுத்துதல் ;

(2) கட்டடத்தினுள் அல்லது அதன் பகுதியினுள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அனைத்து தீயனர்த்த வெளியேற்றுகை, மின் உயர்த்திகள் மற்றும் தீயனர்த்த பாதுகாப்பிற்கான முறைமைகள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புத் தொடர்பிலான மேற்பார்வையை முன்னெடுத்தல் ;

(3) கட்டடத்தில் அல்லது அதன் பகுதியினுள் பணியில் ஈடுபட்டுள்ள அல்லது அதனை பயன்படுத்தும் சகல நபர்களும் தீயனர்த்த சந்தர்ப்பத்தில், அனைத்து தீயனர்த்த வெளியேற்றுகை பற்றியும் பழக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கிரமமான தீயணைப்புப் பயிற்சிகளை ஒழுங்கு செய்தல் ;

(4) கட்டடத்தின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு முறைமைகளை மேற்பார்வையிடுதல்.

95. **ஒழுங்குவிதி 91 மற்றும் 93** இல் குறிப்பிடப்பட்ட நியமங்களை பூர்த்திசெய்ய தவறும் வகையில் கட்டடமானது குறித்த 500 நபர்களுக்கு மேற்பட்ட கொள்ளளவுச்சுமையைக் கொண்டிருக்குமாயின் குறித்த கட்டடத்தின் அல்லது அதன் ஒரு பகுதியின் உரிமையாளர் அல்லது அபிவிருத்தியாளர் 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சபை சட்டத்தின் பிரிவு 28 இன் கீழ் குற்றம் இழைத்தவராக கருதப்படுவார்.

பகுதி VII

**பயன்பாட்டு மாற்றம்**

96. (1) அமைவுச்சான்றிதல் வழங்கப்பட்ட நோக்கத்தினைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் கட்டடத்தில் குடியிருத்தல் ஆகாது.

(2) தேவையென கருதும் சந்தர்ப்பத்தில் குறித்த அதிகாரசபையானது :

அ வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டமொன்று காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த ஆதனத்தின் பயன்பாடு தொடர்பாக ஆய்வு ஒன்றை மேற்கொள்ள முடியும் ;

ஆ. அனுமதிப்பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளை மீறும் குடியிருப்பாளர் அல்லது உரிமையாளருக்கு அது தொடர்பாக அறிவித்தல் ; மற்றும்

இ. குடியிருப்பாளர் அல்லது உரிமையாளருக்கு அவர்கள் விருப்பத்தின் கீழ், பயன்பாட்டு மாற்றத்திற்காக விண்ணப்பிப்பது தொடர்பாக அறிவித்தல்.

(3) அமைவுச் சான்றிதழில் குறிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு மாறாக குறித்த கட்டடம் அல்லது அதன் பகுதியினை பயன்படுத்தப்பட தீர்மானிப்பராயின், கட்டடத்தின் உரிமையாளர் குறித்த அதிகாரசபைக்கு இப்பயன்பாட்டு மாற்றம் தொடர்பாக அறியப்படுத்தி அதற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(4) எந்தவொரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கட்டடத்தின் பயன்பாட்டை மாற்ற தீர்மானிப்பாராயின், **அட்டவணை 1 இன் படிவம் "எ" இற்கு** அமைய விண்ணப்பம் ஒன்றை அனுமதிக்கப்பட்ட நில அளவை வரைப்படத்தின் பிரதி, கட்டட வரைபடம், அமைவுச் சான்றிதழ், மற்றும் வரிமதிப்பீட்டு பற்றுச்சீட்டு என்பவற்றுடன் இணைத்து குறித்த அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்டவாறு கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

(5) பிரேரிக்கப்பட்ட பயன்பாடானது வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் வலய ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும் என்பதோடு தற்போதுள்ள நிலப்பயன்பாட்டு முறைமைக்கும் இயைந்திருத்தல் வேண்டும். மற்றும் தற்போதுள்ள சுற்றுச்சூழல், வாகன தரிப்பிடங்கள், திறந்த வெளிகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்கு எவ்வித பாதக விளைவுகளையும் ஏற்படுத்தாமலும், அணுகு வீதியின் அகலம் மற்றும் கிடைக்கக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளுடனும், அயலவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் அமையப்பெறுமாயின், குறித்த பாவனை மாற்றத்திற்கான அனுமதியினை ஒரு (1) வருட காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் குறித்த அதிகாரசபையால் வழங்க முடியும்.

(6) குறித்த பயன்பாட்டு மாற்றத்தை செயற்படுத்த வழங்கப்பட்ட அனுமதியில் குறிப்பிடப்பட்ட முன்நிபந்தனைகளை நடைமுறையாண்டில் திருப்திகரமாக பூர்த்திசெய்திருப்பதை குறித்த அதிகாரசபை கண்டறியுமானால், விண்ணப்பதாரரின் வேண்டுகோளின் பேரில் அப்பயன்பாட்டு மாற்றத்திற்கான புதுப்பித்தலை ஒரு (1) வருடத்திற்கு அதிகரிக்காத காலப்பகுதிக்கு வழங்க முடியும்.

(7) பயன்பாட்டு மாற்றமானது **ஒழுங்குவிதி 96(5)** இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்துமென அதிகாரசபை தீர்மானிக்குமிடத்து எவ்வித கட்டணங்களும் இன்றி குறித்த அதிகாரசபையால் வழங்கப்பட்ட அனுமதி பத்திரத்தை மீளப்பெற முடியும்.

(8) வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் காணப்படும் சந்தர்ப்பத்தில், எந்தவொரு தரப்பினரும் ஒரு கட்டடத்தின் தற்போதைய பயன்பாட்டை அல்லது அதன் பகுதியை நிரந்தரமாக மாற்ற விரும்பினால், வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் குறித்த பிரேரிக்கப்பட்ட பாவனை மாற்றத்திற்கான அனுமதியை குறித்த அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

## பகுதி VIII

**ஏனைய நிபந்தனைகள்**

97. (1) பின்வரும் சந்தர்ப்பங்களில் எந்தவொரு பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு, அபிவிருத்தி அனுமதி பத்திரம் அல்லது அமைவுச் சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

அ. விண்ணப்பங்களில் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் விபரங்கள் முழுமையடையாதிருத்தல் அல்லது நம்பகத்தன்மையற்று இருத்தல்.

ஆ. விண்ணப்பமானது அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவரால் அல்லது தகுதிவாய்ந்த நபரால் முழுமையாக உறுதிப்படுத்தப்படாதிருத்தல்.

(2) தொடர்புடைய அதிகாரசபையால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரரை அல்லது அபிவிருத்தியாளரை தொடர்புடைய அதிகாரசபையால் வழங்கப்பட்ட குறிப்புகள் உள்ளடங்கலான தமது பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் தன்மையை பிரதிபலிக்கும் வகையிலான பதாதையொன்றை பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி வளாகத்தினுள் 30 நாட்கள் மக்கள் கருத்துக்காக காட்சிப்படுத்த வழிநடத்தலாம்.

(3) அ. எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்குமான அனுமதி வழங்கப்படாவிடத்து, தொடர்புடைய அதிகாரசபையினால் அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவரிற்கு அவ் அபிவிருத்தி நடவடிக்கை நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை அறிவிப்பதுடன், குறித்த அபிவிருத்தித் திட்ட வரைபடங்களின் பிரதியில் ஒன்றை அதிகாரசபையில் வைத்துக்கொண்டு ஏனையவற்றை ஒப்படைத்தல் வேண்டும்.

ஆ. விண்ணப்பமானது நிராகரிக்கப்பட்ட போதிலும், குறித்த அதிகார சபைக்கு செலுத்தப்பட்ட எந்தவொரு கட்டணத்தின் முழு அல்லது பகுதி தொகையையோ திருப்பி செலுத்துவதற்கு குறித்த அதிகார சபை பொறுப்பேற்காது.

98. பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு, அபிவிருத்தி அனுமதி பத்திரம் அல்லது அமைவுச் சான்றிதழ் விண்ணப்பம் தொடர்பாக ஒழுங்குவிதி 97(3) இல் குறிப்பிடப்பட்ட மறுப்பு சம்பந்தமாக அபிவிருத்தியாளர் அல்லது அவரது முகவர் பாதிக்கப்பட்டிருப்பாராயின், அவ்வாறான தீர்மானம் அறியப்பெற்ற திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்துமூல மேல்முறையீடு ஒன்றினை பொறுப்பான அமைச்சருக்கு மேற்கொள்ள முடியும்.

99. (1) எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பமானது பின்வரும் சந்தர்ப்பங்களில், நிபந்தனைகளுடன் அல்லது நிபந்தனைகளின்றி அனுமதிக்கப்படலாம்.

அ. தொடர்புடைய அதிகாரசபைக்கு தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டு, விண்ணப்பப் படிவத்தில் உள்ள விபரங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்

ஆ. பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியானது, அரச நிறுவனங்கள் அல்லது தனியார் தரப்பினரின் ஆட்சேபனைகளிலிருந்து விடுபட்டிருத்தல் மற்றும்

இ. பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி அல்லது அதன் பாகம், ஒரு நீதிமன்ற வழக்கு விசாரணை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது வேறு ஏதேனும் சட்டரீதியான அமைப்பினால் செயற்படுத்தப்படும் விசாரணைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தாதவாறு இருத்தல்

(2) எந்தவொரு கட்டடம் அல்லது கட்டட பணிகளும் நிபந்தனைகளுடன் அல்லது நிபந்தனைகள் இல்லாமல் அங்கீகரிக்கப்பட்டிருப்பின், அத்தகைய கட்டடத்தின் கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பு, கட்டட வரைபடத்தின் ஒரு பிரதி ஆதனத்தின் உரிமையாளர், அபிவிருத்தியாளர் அல்லது பொருத்தமான தகுதிவாய்ந்த நபரினால் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

100. இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்காமல் உண்மையற்ற அல்லது தவறான தகவல்களை வழங்கல், குறித்த அபிவிருத்தி பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ இணங்காமை அல்லது தொடர்புடைய அதிகாரசபையால் கோரப்படும் வரைபடம் மற்றும் ஏனைய விபரங்களை வழங்காமை போன்ற காரணங்களுக்காக தொடர்புடைய அதிகாரசபை வழங்கப்பட்ட அனுமதியை அல்லது அனுமதி பத்திரத்தை இரத்து செய்யலாம்.

101. (1) ஏதேனுமொரு ஒழுங்குவிதி தேவைப்பாடு அல்லது அதிகாரசபையால் ஏதேனுமொரு கட்டடம் அல்லது இடமானது கட்டடக்கலை, சுற்றுச்சூழல், அழகியல் அல்லது தொல்பொருளியல் மதிப்புடையது என இனங்காணப்படுமிடத்து, குறித்த கட்டடத்தின் அல்லது இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் தொடர்புடைய அதிகாரசபை அல்லது நிறுவனங்களிடமிருந்து முன் அனுமதி பெற்றாலன்றி குறித்த கட்டடத்தில் அல்லது இடத்தில் எவ்வித மாற்றங்களும் அல்லது சேர்ப்புக்களும் செய்ய இயலாது.

(2) கட்டடம் அல்லது ஆதனத்திற்கான பராமரிப்பு, பாதுகாப்பு அல்லது பயன்பாட்டு மாற்றம் போன்றன திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியிருக்கும் சந்தர்ப்பங்களில், பராமரிப்பு, பாதுகாப்பு அல்லது பயன்பாட்டு மாற்றத்திற்கான அனுமதியினை வழங்க முடியும்.

102. (1) எந்தவொரு கூட்டுடைமை ஆதன அபிவிருத்தியும், 1973 ம் ஆண்டு 11ம் இலக்க, அடுக்குமாடி குடியிருப்பு உரிமைச் சட்டம் அதன் திருத்தங்களின் கீழ் பின்வரும் நிபந்தனைகளுடன், கட்டமாகவோ அல்லது பகுதியளவாகவோ அபிவிருத்தி செய்ய தொடர்புடைய அதிகாரசபையால் அனுமதி வழங்கப்படலாம்.

அ. பிரேரிக்கப்பட்ட முழுமையான அபிவிருத்திக்கும், குறித்த அபிவிருத்தியின் முதல் கட்டத்திலேயே அனுமதி பெறப்படல் வேண்டும்.

ஆ. அனைத்து ஒழுங்குவிதி தேவைப்பாடுகளும் முழுமையான அபிவிருத்திக்கு கணிக்கப்படல் வேண்டும்.

இ. அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படின் முழு அபிவிருத்திக்குமான திருத்தப்பட்ட வரைபடம் மீளசமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளை பூர்த்திசெய்ய தவறுமிடத்து, இக்கூட்டுடைமை ஆதனங்களில் எந்தவொரு காணி உப பிரிவிடுகையும் அல்லது அலகு பிரிவிடுகையும் அனுமதிக்கப்பட மாட்டாது.

## அபிவிருத்தி வழிகாட்டல் திட்டம்

103. (1) வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டத்திலுள்ள அபிவிருத்தி வழிகாட்டல் திட்ட பகுதிகளுக்குள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் இவ்வபிவிருத்தி வழிகாட்டல் திட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

(2) அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தை தயாரிக்கும் வரை, தொடர்புடைய அதிகாரசபையானது, உரிமையாளர், அபிவிருத்தியாளர் அல்லது உரிய தகுதிவாய்ந்த நபரை பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தில் அந்த பகுதியில் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தியின் அடிப்படையில், அவர்களது அபிவிருத்தி முன்மொழிவில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளுமாறு வழிப்படுத்தலாம்.

## விளம்பரம்

104.

(1) எந்தவொரு தனிநபரும் அல்லது நிறுவனமும் தொடர்புடைய அதிகாரசபையின் முன்னனுமதியின்றி வர்த்தக விளம்பரங்கள், பட்டியல் பலகைகள், பதாதைகள், கண்காட்சி கடைகள், தொலைபேசிச் சாவடிகள் போன்றவற்றை நிறுவவோ, காட்சிப்படுத்தவோ அல்லது பராமரிக்கவோ இயலாது.

(2) குறித்த அதிகார சபைக்கு அனுப்பப்படும் எந்தவொரு விண்ணப்பமும், ஒழுங்கு விதியின் **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்ட கட்டணங்கள் இணைந்த வகையில் சமர்ப்பிக்கப்பட ல் வேண்டும்.

(3) தேவையான சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழி அணுகுமுறை மூலம் பொருத்தமான ஆவணங்களுடன் தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(4) **ஒழுங்குவிதி 104(1)** இல் குறிப்பிடப்பட்ட எந்தவொரு பொருத்துகையும் அப்பிரதேசத்தின் அபிவிருத்தி வழிகாட்டல் திட்ட அல்லது வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்ட விதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும் என்பதோடு இவ்வபிவிருத்தி வழிகாட்டல் திட்டம் அல்லது வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டம் காணப்படாவிடத்து, அல்லது அவ்விதிகள் குறிப்பிடப்படாவிடின் அத்தகைய பொருத்துகைகள் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

(5) **ஒழுங்குவிதி 104(1)** இல் குறிப்பிடப்பட்ட எந்தவொரு பொருத்துகை தொடர்பான மாதிரி வரைப்படம், தேவையேற்படின் தகுதி வாய்ந்த கட்டமைப்பு பொறியியலாளர் ஒருவரின் சான்றிதழுடன், குறித்த பொருத்துகையை காட்சிப்படுத்துமுன், தொடர்புடைய அதிகாரசபைக்கு அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(6) அனைத்து வர்த்தக விளம்பரங்கள், பட்டியல் பலகைகள், அல்லது பதாதைகள், குறித்த பகுதியின் ஏதேனும் முக்கிய கட்டடங்கள், தரைத்தோற்றமைப்பு, அடையாளங்கள் அல்லது பொது இடங்களை (உதாரணம்: பாடசாலை, கோவில், தேவாலயம், இடுகாடு, நீதிமன்றம் மற்றும் பல) மறைக்கும் வகையில் அமையப்பெறலாகாது என்பதுடன் அப்பிரதேசம் மற்றும் அதன் சுற்று சூழலினது தரைத்தோற்றமைப்பு, சுற்றுச்சூழல் தரம், அடையாளம் மற்றும் கட்டடக்கலைப் பண்புகளுக்கு இணங்கிக் காணப்படல் வேண்டும்.

(7) பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி வலயங்கலின் தன்மைகள் மற்றும் பண்புகளுக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது தீங்கு விளைவிக்கும் வாய்ப்புக்கொண்ட செய்தி அல்லது நிர்வாணப் படங்களை அல்லது ஆபாச படங்களை உள்ளடக்கிய விளம்பரங்களையும் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(8) வாகன நகர்விற்கு இடையூறு செய்யும் வகையிலும், வீதிகளின் பயன்பாட்டாளர்களை தவறாக வழிநடத்தக்கூடிய வகையிலும் எந்தவொரு விளம்பரம், பட்டியல் பலகை அல்லது பதாதை போன்றவை நிறுவப்படவோ, பராமரிக்கவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது என்பதுடன் விளம்பரத்திற்காக பயன்படுத்தப்படும் நிறம், வடிவம், எழுத்துரு வகைகள் மற்றும் குறியீடுகள் ஆகியவை வீதிக் குறியீடுகளை ஒத்ததாக இருத்தல் கூடாது.

(9) ஒவ்வொரு விளம்பரம், பட்டியல் பலகை, அல்லது பதாதை போன்றவை அணுகு வீதியின் எல்லை வரம்புக்குள் அப்பால் நிறுவப்படல் வேண்டும் என்பதோடு, அத்தகைய வீதிகளின் பாதசாரிகள் மற்றும் வாகன நகர்வுகளில் எவ்வித இடையூறும் ஏற்படுத்தலாகாது.

(10) விளம்பர பலகை, கட்டிடமொன்றின் எந்தவொரு கதவுகள், யன்னல்கள், அவசரகால கதவுகள், படிக்கட்டு அல்லது ஒளி மற்றும் காற்றோட்டம் பெறக்கூடிய மூலங்களுக்கு தடையை ஏற்படுத்தலாகாது.

(11) எந்தவொரு விளம்பரம், பதாதை அல்லது பட்டியல் பலகை போன்றவை, வர்த்தக கட்டடத்தின் அல்லது ஒரு பொதுக் கட்டடத்தின் 25% இற்கு மேற்பட்ட கட்டட முகப்பினை மறைக்கும் வகையில் நிறுவப்படலாகாது.

(12) விளம்பரம், பட்டியல் பலகை அல்லது பதாதை போன்றவை, மரங்கள், தொலைபேசி அல்லது மின்கம்பங்கள், பாறைகள், பாலங்கள், தடுப்புச்சுவர்கள், சுவர்கள், வாகன அல்லது போக்குவரத்துக்கு சமிக்ஞை பலகைகளை ஆதாரமாகக்கொண்டு நிறுவப்பட அல்லது காட்சிப்படுத்த இயலாது.

(13) ஒவ்வொரு விளம்பரம், பட்டியல் பலகை, அல்லது பதாதைகள் கவர்ச்சிகரமாகவும் பாதுகாப்பான முறையிலும் பராமரிக்கப்படல் வேண்டும்.

(14) சிறப்பு வர்த்தக நிகழ்வு, கலாச்சார அல்லது மதப் பண்டிகைகள் அல்லது ஏதேனுமொரு பிற சிறப்பு நிகழ்வுக்காக காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரங்கள் அல்லது அறிவிப்புகள் ஆகியவை வரையறுக்கப்பட்ட கால அவகாசத்திற்கு அனுமதிக்கப்படும் என்பதோடு தற்காலிகமாக நிறுவப்பட்ட அனைத்து பதாதைகளும் அத்தகைய நிகழ்வு, பண்டிகை அல்லது விழா நிறைவடைந்த பின்னர், வாரத்தின் முதல் நாளில் அகற்றப்பட்டு அந்த இடத்தை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வர வேண்டும்.

(15) ஒரு விசேட நிகழ்வு ஒன்றிக்காக தற்காலிக அடிப்படியில் ஏதேனும் விளம்பம், பட்டியல் பலகை அல்லது பதாதைகள் போன்றவை நிறுவப்பட்டால் அத்தகைய நிகழ்வு, நிறைவடைந்த பின் தொடர்புடைய அதிகாரசபை 14 நாட்களுக்குள் அத்தகைய விளம்பம், பட்டியல் பலகை அல்லது பதாதைகளை அகற்ற வழிநடத்தலாம். அவ்வாறு விளம்பர பலகை, பட்டியல் பலகைகள் அல்லது பதாதைகள் 14 நாட்களுக்குள் அகற்ற தவறும் பட்சத்தில், தொடர்புடைய அதிகாரசபையினால் அத்தகைய விளம்பம், பட்டியல் பலகை அல்லது பதாதைகள் அகற்றப்படலாம் என்பதோடு அவை அகற்றப்பட்டதற்கான செலவினத்தை குறித்த உரிமையாளர் தொடர்புடைய அதிகாரசபைக்கு திருப்பி செலுத்தல் வேண்டும்.

### தொடர்பாடல் கோபுரங்கள்

105.

(1) தொடர்பாடல் கோபுரங்களுக்கு அங்கீகாரம் கோரும் நோக்கத்திற்கான விண்ணப்பம், தொடர்புடைய நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் இறுதி பரிந்துரையுடன் சேர்த்து தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும், **அட்டவணை 2** இல் குறிப்பிடப்பட்ட தொடர்புடைய கட்டணங்களுக்கமைய அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(3) தேவையான சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழி அணுகுமுறை மூலம் பொருத்தமான ஆவணங்களுடன் தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(4) தொடர்பாடல் கோபுரங்களுக்கான குறிப்பு, ஒழுங்குவிதி **அட்டவணை 15** இல் குறிப்பிடப்பட்டதற்கிணங்க இருத்தல் வேண்டும்.

(5) அனைத்து தொலைத்தொடர்பு கோபுரங்களும்: -

அ. தொடர்புடைய அதிகாரசபையால் குறித்த பகுதிக்கென அமுல்படுத்தப்பட்ட குறித்த இடத்தின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

ஆ. இயற்கை அழகிற்கு இடையூறாக அமையாத வகையில், குறிப்பாக உயரமான கட்டமைப்புகளுக்கென பழக்கப்படாத பகுதிகளில் அமைத்தல் ஆகாது.

### தற்காலிக கட்டடங்கள்

106.

(1) தற்காலிக கட்டட விடயத்தில், அத்தகைய கட்டடங்களை நிறுவுவதற்கான அனுமதியை பெறுவதற்கு எழுத்துமூல வேண்டுகோளுடன் கட்டடத்திற்கான வரைபடம் அல்லது மாதிரிப்படம் ஒன்றுடன் இணைந்ததாக தொடர்புடைய அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) தற்காலிக கட்டடங்களை நிறுவுவதற்கான அனுமதியானது தொடர்புடைய அதிகாரசபையால் நிபந்தனைகளுடனோ அல்லது நிபந்தனைகள் இன்றியோ வழங்கப்படுவதோடு, இவ்வனுமதியில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கோ அல்லது ஒரு (1) வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கோ செல்லுபடியாகும்.

(3) தற்காலிக கட்டிடமானது

அ. பொழுது பொழுதுபோக்கு நோக்கத்திற்கான கூடாரமாக அமைதல் ; அல்லது,

ஆ. இறுதிச்சடங்கு, மத அல்லது வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் கூடாரமாக அமைதல் ;

இ. கட்டுமான பணியாளர்களின் கூடாரம் அல்லது களஞ்சியம் அல்லது புதிதாக கட்டடப்படும் கட்டடத்துடன் தொடர்புடைய கூடாரம் ; அல்லது

ஈ எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் தற்காலிக அடிப்படையில் பயன்படுத்தப்படும் கொள்கலன் ;

உ. பாதுகாப்பான பதாகைகள், மேடை அல்லது வீதியின் ஓரத்திலான நடைபாதைக்கான கூடாரம் அல்லது ஏதேனும் கட்டட கட்டுமான பணிகளுடன் தொடர்புடைய பாதுகாப்பு கூடம் ; அல்லது

ஊ. வீதியில் அமையப்பெற்ற ஒரு நடைமேடை ; அல்லது

எ. ஒரு தெருவின் மீதுள்ள ஒரு சாரக்கட்டு ;அல்லது

ஏ. வர்த்தகச் சந்தை, கேளிக்கை நடவடிக்கை அல்லது கண்காட்சி நோக்கங்களுக்காக ஒரு கட்டடத்தினுள் அல்லது பிற ஆதனத்தில் அமைக்கப்படும் கடை அல்லது கூடாரம்

107. (1) குறித்த காணிக்குள் அல்லது அதன் எல்லைக்கு அருகாமையில் அமையப்பெறும் ஏதேனும் நிலக்கீழ் அல்லது நிலமட்ட நீர் விநியோக இணைப்புகள், கழிவுநீர் இணைப்புகள், வடிகாலமைப்பு இணைப்புகள், தொலைத்தொடர்பு இணைப்புகள் அல்லது மின்சார இணைப்புகள் போன்றவற்றிற்கான சிபாரிசு பொருத்தமான நிறுவனங்களிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

(2) எந்தவொரு கட்டடத்திற்கும் அல்லது கட்டமைப்பிற்கும், காற்றின் ஆதிக்கத்தால் அசையக்கூடிய ஒரு மேல்நிலைக்கோட்டின் கடத்தியின் நிலைக்கும் இடையிலான குறைந்தபட்ச தூரமானது ஒழுங்குவிதியின் **அட்டவணை 16** இல் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க அமையப்பெறல் வேண்டும்.

108. சட்டத்தின் IV (இ) ஆம் பகுதியிலும் அதன் திருத்தங்களிலும் 'குறித்துரைக்கப்பட்ட செயற்திட்டங்களின்' கீழ் அமையும் கட்டுமான அபிவிருத்தி நோக்கத்திற்கான அனுமதியினை பெறுவதற்கான விண்ணப்பம், குறித்த ஒழுங்கு விதிமுறையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

109. நோக்கங்களுக்காக ஏதேனும் புதிய அபிவிருத்தி தேவைப்படின், அவ்வபிவிருத்தி பிரதேசத்திலிருந்து 500 மீட்டர் ஆரை பகுதிக்குள் வசிக்கும் பொது மக்களிடம் இருந்து அந்த பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஊடாக அனுமதி பெறுவதுடன், பிரதேச செயலாளரிடமிருந்தும் மற்றும் தொடர்புடைய அரச நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்ட சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

110. (1) கட்டட வகை "ஆ" விற்குள் உள்ளடக்கப்படாத, தனி அலகு தனியார் குடியிருப்புக் கட்டடங்கள் தவிர்த்து ஏனைய அனைத்து கட்டுமானப் பணிகளும், அவை நிறைவடையும் வரை, உரிய தகைமை பெற்ற நபரினால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மேற்பார்வையிடப்படல் வேண்டும்.

(2) **ஒழுங்குவிதிமுறை 110 (1)** இன்படி, மேற்பார்வைக்குட்படுத்தப்பட்ட பின், கட்டட பணியின் முன்னேற்ற அறிக்கை கட்டட பணி முடிவடையும் வரை தகுதியான நபர்களால் தொடர்புடைய அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

111. (1) எந்தவொரு தகுதிவாய்ந்த நபரும் தமது சேவைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டால், அபிவிருத்தியாளர் அந்த சேவை இடைநிறுத்தம் தொடர்பாக எழுத்து மூலம் 14 நாட்களுக்குள் அதிகாரசபைக்கு அறியத்தருவது அவசியமாகும் என்பதோடு, அத்தகைய இடைநிறுத்த நாளிலிருந்து, தகைமை வாய்ந்த வேறொரு நபர் குறித்த அபிவிருத்தியாளரால் நியமிக்கப்பட்டு, தொடர்புடைய அதிகாரசபைக்கு எழுத்து மூலம் அறியத்தரும் வரை எந்தவொரு கட்டட பணியும் ஆரம்பிக்கப்படவோ அல்லது முன்னெடுக்கவோ இயலாது.

(2) தொடர்புடைய தகைமை வாய்ந்த நபரால் வழங்கப்பட்ட சேவைகளின் இடைநிறுத்த அறிவித்தலானது, கட்டட பணிகளின் சுருக்க அறிக்கை மற்றும் இதுவரை நிறைவடைந்த கட்டட வேலைகளின் சான்றிதழுடன் இணைக்கப்படல் வேண்டும்.

112. ஏற்கனவே அமையப்பெற்ற அல்லது பிரேரிக்கப்பட்ட அதிவேக சாலையின் இரு மருங்கிலும் அமையப்பெற்ற அபிவிருத்தியானது **அட்டவணை 17** இற்கமைவாக இணங்கியிருத்தல் வேண்டும்.

113. கட்டடத்திற்கு சூரிய சக்தி பயன்படுத்தப்படுமாயின், தட்டையான கூரையில் அமைக்கப்படும் சூரிய தகடுகளின் உயர்ந்தபட்ச உயரமானது 1.2 மீ ஆகும்.

114. (1) அபிவிருத்தித்திட்டமானது, வர்த்தமான அறிவிப்பு மூலம் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து பத்து வருட காலத்திற்கு செல்லுபடியாவதுடன், காலத்திற்கு காலம் திருத்தியமைக்கப்படவோ அல்லது புதுப்பிக்கப்படவோ முடியும்.

(2) திட்டத்தின் செல்லுபடி காலம் முடிவடைவதற்கு முன்னர், தேவையான மாற்றங்கள் அல்லது திருத்தங்களை மேற்கொள்ள முடியாதிருப்பின், அதிகாரசபையினால் மேலதிகமாக ஒரு வருட காலம் வழங்கப்படலாம்.

115. இந்த ஒழுங்கு விதிமுறையில், சிங்கள மற்றும் ஆங்கில பதிப்புகளுக்கிடையில் ஏதேனும் விளக்கம் தொடர்பான முரண்பாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழியே மேலோங்கியிருக்கும்.

## பகுதி IX

### வரைவிலக்கணங்கள்

இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் தவிர தேவையான போது,

**“அணுகுவழி”** என்பது கட்டடத்திற்கு அல்லது காணித்துண்டிற்கு அணுகல் வழியாக பயன்படுத்தப்படும், பொதுமக்களுக்கு பாவிப்பு உரித்தைக் கொண்ட அல்லது அற்ற எந்தவொரு வீதியும்/தெருவுமாகும்.

**“நிர்வாகச் செலவுகள்”** என்பது களஆய்வுக் கட்டணம் மற்றும் ஆவணக் கட்டணம் என்பதாகும்

**“குளிரூட்டல்”** என்பது கட்டடத்தின் அல்லது அதன் பகுதியின் குளிரூட்டப்பட்ட இடத்தின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக வெப்பநிலை, ஈரப்பதம், தூய்மை, விநியோகம் மற்றும் இயக்கம் என்பவற்றை ஒரேசமயத்தில் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் காற்று சுத்திகரிப்பு செயல்பாடாகும்.

**“காற்றோட்டக் கிணறு”** என்பது இயற்கை ஒளி மற்றும் காற்றோட்டத்தை பெறும் நோக்கல் கட்டடத்திற்குள் ஏற்படுத்தப்படும் வான்நோக்கிய எந்தவொரு திறந்தவெளியையும் குறிக்கின்றது. கட்டடத்திற்கு வெளியே காணித்துண்டிற்குள் அமையப்பெற்ற கட்டடத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தோற்றங்களால் அல்லது காணித்துண்டின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எல்லைகளால் சூழப்பட்ட ஒரு பகுதியாகும்.

**“மாற்று நீர் ஆதாரம்”** என்பது பொது நீர் வழங்கல் முறையைத் தவிர மனித அல்லது மனிதரல்லாத நுகர்வுக்கு பயன்படுத்தப்படக்கூடிய கிணறுகள், நீரூற்றுகள், குழாய்கிணறு அல்லது நீர் வழிகள் சேகரிக்கப்பட்ட மழைநீர், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தொழில்துறை கழிவுநீர் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய அனைத்து நீர் ஆதாரங்களையும் குறிக்கிறது.

**“துணை வசதிகள்”** என்பது குறித்த ஒரு கட்டடத்தின் பிரதான பயன்பாட்டை நேரடியாக எளிதாக்கும் வகையில் அமையப்பெற்ற, வாகன தரிப்பிடங்கள், நீச்சல் தடாகம் மின்பிறப்பாக்கி அறை போன்ற கூடுதல் பயன்பாடுகளை குறிக்கும்.

**“அடுக்குமாடி குடியிருப்பு”** என்பது 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அடுக்குமாடி உரிமையாளர் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ஒரு அலகு.

**“அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்”** என்பது சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப பொருத்தமான அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்டடத்தின், ஏதேனுமொரு கட்டட வேலைகளின் அல்லது ஏதேனுமொரு நில உபபிரிவிடுகையின், ஒருங்கிணைப்பின் அல்லது அபிவிருத்தியின் வரைபடம் ஆகும்.

**“அதிகார சபை”** என்பது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தால் நிறுவப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

**“மேல் மாடம்”** என்பது கட்டடத்தின் வெளிப்புறச்சுவரிலிருந்து வெளிநோக்கி நீட்டப்பட்டதும் தாங்குமுனைப்பு அல்லது முனை நெம்புகளின் உதவியோடு காணப்படும் ஒரு மேடை, சாளரம், தொங்கும் பலகணி அல்லது தொடர்புடைய கட்டுமானங்களை குறிக்கும்.

**“அடித்தளம்”** என்பது இயற்கை தரை மட்டத்திற்கு கீழே முற்றிலும் அல்லது பகுதியாக அமையப்பெறும் ஒரு மாடி ஆகும்.

**“மறைச்சுவர்/ குருட்டுசுவர்”** என்பது துளைகளின்றி அல்லது வெளிப்படையான கட்டட பொருட்களை பயன்படுத்தாமல் கட்டப்பட்ட ஒரு திண்மச் சுவராகும்.’

**“எல்லைசுவர்”** என்பது குறித்த ஒரு காணித்துண்டை அயலாதனத்திலிருந்து பிரிக்கும் நோக்கத்திற்காக காணித்துண்டின் எல்லையில் அல்லது எல்லையுடன் கட்டப்படும் எந்தவொரு சுவரையும் குறிக்கும்.

**“கட்டட எல்லைக்கோடு”** என்பது தொடர்புடைய அதிகாரசபையால் பிரகடனப்படுத்தப்பட்ட, கட்டடத்தின் விரிவாக்கத்தை அனுமதிக்கக்கூடிய ஒரு கோட்டைக் குறிக்கும்.

"**கட்டடங்களுக்கான தீயனர்த்த முன்னேற்பாட்டு குறியீடு**" என்பது தொடர்புடைய நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படும் தீயனர்த்த முன்னேற்பாட்டு குறியீடுகளைக் குறிக்கும் அல்லது தொடர்புடைய உள்ளூராட்சி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்படும் தீயனர்த்த ஒழுங்குவிதிகளைக் குறிக்கும்.

"**அபிவிருத்தியாளர்**" என்பது ஆதனத்தின் உரிமையாளர் அல்லது அத்தகைய ஆதனத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கீகாரம் பெற்ற நபரைக் குறிக்கும்.

"**அபிவிருத்தி நடவடிக்கை**" என்பது ஏதேனுமொரு காணித்துண்டினை உபபிரிவிடுகையிடல் அல்லது துண்டாக்கல், கட்டுமான பணிகளை முன்னெடுத்தல் மற்றும் கட்டமைப்புகள் நிறமானித்தல் அல்லது மீள் நிர்மாணம் செய்தல், மற்றும் அத்தகைய காணிப்பகுதியின் கீழும் அல்லது மேலும் பொறியியல் மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுத்தல், மற்றும் குறித்த கட்டமைப்பு அமையப்பெற்ற காணியின் பயன்பாட்டினை மாற்றுதல், வேளாண்மை, தோட்டக்கலை நோக்கங்களுக்காக எந்தவொரு காணியினையும் பயன்படுத்துவதைத் தவிர்த்து குடியிருப்புகளின் மகிழ்ச்சியில் தொடர்புடைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும், புதிய கட்டட வரைபடம் தேவைப்படும் எந்தவொரு கட்டட செயற்பாட்டையும் உள்ளடக்காத நடவடிக்கைகளைக் குறிக்கும்.

"**அபிவிருத்தி வழிகாட்டல் திட்டம்**" என்பது சட்ட விதிகளின்படி வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் வரையறுக்கப்பட்ட குறித்த பகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட விளக்கமான அல்லது தொகுதி வாரியாக வரையறுக்கப்பட்ட விசேட வழிகாட்டுதல்களைக் கொண்ட தளவமைப்புத் திட்டத்தைக் குறிக்கும்.

"**அபிவிருத்தி அனுமதி பத்திரம்**" என்பது காணித்துண்டொன்றில் அபிவிருத்திச் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக அபிவிருத்தியாளர் அல்லது அவரின் முகவருக்கு தொடர்புடைய அதிகாரசபையால் வழங்கப்பட்ட சட்ட மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இயைந்த வகையிலான தொடர்புடைய நியமங்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய மூன்று வருடத்திற்கு மேற்படாத செல்லுபடிக் காலத்தைக் கொண்ட ஒரு அனுமதிப் பத்திரத்தைக் குறிக்கும்.

"**அபிவிருத்தித் திட்டம்**" என்பது பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி பகுதி அல்லது அதன் ஒரு பகுதியின் ஆதனங்கள் மற்றும் கட்டடங்களின் பௌதீக அபிவிருத்தியையும் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடலையும் சட்டத்திற்கமைய ஒழுங்குபடுத்தி ஊக்குவிப்பதற்காக அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட திட்டத்தைக் குறிக்கும்.

"**அபிவிருத்தி நிலஅளவைப்படம்**" என்பது அதிகாரசபை அல்லது தொடர்புடைய நிறுவனங்களால் விதிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தைக் குறிக்கும்.

"**தற்போதுள்ள காணித்துண்டு**" என்பது குறித்த காணித்துண்டு அமையப்பெற்ற பகுதியானது நகர அபிவிருத்தி பகுதியாக பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்பே உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்பட்ட எந்தவொரு காணித்துண்டையும் குறிக்கும்.

"**வெளிப்புறச் சுவர்**" என்பது கட்டடமொன்றின் வெளிப்புற சுவர் அல்லது ஏனைய கட்டடத்துடன் இணைக்கப்பட்ட போதிலும் ஒரு பகுதி சுவராகக் கருதப்படாத செங்குத்தான மறைப்பு என்பதைக் குறிக்கும்.

"**தொழிற்சாலை**" என்பது பின்வரும் விடயங்களுக்காக வடிவமைக்கப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட கட்டடம் அல்லது அதன் ஒரு பகுதியாகும் -

i. ஏதேனுமொரு பொருட்கள் அல்லது பண்டங்களை அல்லது பகுதியை தயாரித்தல் ; அல்லது
ii. ஏதேனுமொரு பொருட்கள் அல்லது பண்டங்களை அல்லது பகுதியை மாற்றுதல், திருத்துதல், அலங்கரித்தல், முடிவுறுத்தல், சுத்தம் செய்தல், கழுவுதல் அல்லது உடைத்தல் அல்லது அழித்தல் ; அல்லது
iii. எந்தவொரு பொருட்கள் அல்லது பண்டங்கள் விற்பனைக்காக முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பொருத்துதல் செய்வது.

"**தட்டையான கூரை**" என்பது சாய்ந்த கூரைக்கு பதிலாக உபயோகிக்கும் கிடைமட்ட கூரையை குறிக்கும்.

"**வெள்ள மட்டம்**" என்பது நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இலங்கை நில அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் குறித்த ஒரு பகுதிக்கென குறித்துரைக்கப்பட்ட வெள்ள மட்டத்தினைக் குறிக்கும்.

"**தளம்**" என்பது ஒரு மாடியின் மேற்பரப்பை உருவாக்கும் ஒரு கிடைமட்ட தளத்தை உள்ளடக்குவதோடு அத்தகைய தளத்தை உருவாக்க பயன்படுத்தப்படும் ஏதேனுமொரு இணைப்புப் பலகை, மரம், கல், கல் மண் இணைந்த சீமெந்துக் கலவை, இரும்பு அல்லது தொடர்புடைய ஏனைய பொருட்கள் போன்றவற்றையும் உள்ளடக்கும்.

***"நடை பாதை"*** *என்பது அணுகுதலுக்காக ஒதுக்கப்பட்ட விசைப்பொறி பாவனையற்ற ஒரு இடமாகும்*

***"அத்திவாரம்"*** *என்பது கட்டடத்தின் அடித்தளத்திற்கு கீழே காணப்படுவதும், கட்டடத்தின் எடையுடன் நேரடிதொடர்பு கொண்டதும், இவ்வெடையை நிலப்பரப்பிற்கு மாற்றக்கூடியதுமான கட்டுமானத்தின் ஒரு பகுதியை குறிக்கும்.*

***"அரச குறை வருமான வீடமைப்பு செயற்திட்டம்"*** *என்பது குறை வருமான சமூகத்தினருக்கு குடியிருப்புகளை வழங்கும் நோக்கத்திற்காக அதிகாரசபையால் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய அரச நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் வதிவிட அபிவிருத்தி செயற்திட்டங்களைக் குறிக்கும்.*

***"பாதுகாப்புச் சுவர்"*** *என்பது ஒரு மேல்மாடம் அல்லது விறாந்தையின் எல்லையில் கட்டப்பட்ட ஒரு குறுகிய சுவரைக் குறிக்கும்.*

***"தரைத்தளம்"*** *என்பது இயற்கை நில மட்டத்திற்கு மேல் கட்டடத்தின் முகப்பு பகுதியில் வெளிப்புறத்திலிருந்து நுழைவாயில் ஒன்றைக் கொண்ட கட்டடத்தினைக் குறிக்கும்.*

***"தூரம்"*** *என்பது, ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய இரு புள்ளிகளுக்கு இடையேயான, தெளிவான செங்குத்துயரத்தைக் குறிக்கும்.*

***"தொழில்துறை கட்டடம்"*** *- என்பது பொருட்கள் மற்றும் உற்பத்திகளை புனைதல், ஒருங்கிணைத்தல் அல்லது செயற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைப்பு ஆலைகள், ஆய்வகங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள், எரிவாயு ஆலைகள், ஆலைகள், பாற்பண்ணைகள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற எந்தவொரு கட்டடத்தையும் அல்லது அதன் பகுதியையும் குறிக்கும்.*

***"சட்டம்"*** *என்பது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டமாகும் மற்றும் அதன் திருத்தங்களாகும்*

***"உள்ளூராட்சி அதிகாரசபை"*** *என்பது ஏதேனுமொரு மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை அல்லது அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்டதும் 1987 ஆம் ஆண்டு மாகாண சபை சட்டம் மூலம் நிர்வகிக்கப்படுகிறதுமான. வேறு ஏதேனும் சட்டரீதியான அமைப்புக்களை குறிக்கும்.*

***"காணித்துண்டு"*** *என்பது தனி நபருக்கு சொந்தமான அல்லது கூட்டு உரிமையாளர்களுக்கு சொந்தமான மற்றும் தொடர்புடைய அதிகாரசபையால் அனுமதிக்கப்பட்ட, எல்லைஅடையாளங்களால் வரையறுக்கப்பட்ட அல்லது எல்லைச் சுவர் அல்லது வேலிகளுக்குள் அமையப்பெற்ற எந்தவொரு முழுமையான நிலப்பகுதியையும் குறிக்கும்.*

***"கீழ் தரை தளம்"*** *என்பது தரை தளத்திற்கு கீழே அமையப்பெற்றதும், தரையின் ஒரு பக்கமேனும் வெளிபுறத்திற்கு திறக்கப்பட்ட ஒரு தளம் அல்லது மாடி என்று பொருள்.*

***"பொறிநுட்பமுறை காற்றோட்டம்"*** *என்பது ஏதேனும் ஒரு பொருள் அல்லது இயந்திர சாதனங்கள் மூலம் குறித்த ஒரு கட்டடத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு காற்றோட்டத்தை வழங்கும் அல்லது அகற்றும் செயலாகும்.*

***"குறைந்தபட்ச வீதி அகலம்"*** *எனபது தொடர்புடைய அதிகாரசபையால் அல்லது தொடர்புடைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட கட்டட எல்லைக்கோடுகள்/ வீதி எல்லைக்கோடுகள் பிரயோகிக்கப்படாத, தற்போதைய பௌதீக வீதி அகலத்தைக் குறிக்கும்.*

***"பொறிநுட்பமுறை ஒளியூட்டல்"*** *என்பது குறித்த ஒரு கட்டடத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு செயற்கை மூலங்கள் அல்லது இயந்திரங்களை பயன்படுத்தி ஒளியூட்டல் வழங்கும் செயலாகும்.*

***"இடைத்தள மாடி"*** *என்பது இரண்டு தளங்களுக்கிடையில் அமையப்பெற்றதும், கீழ்த்தளத்தின் பரப்பளவில் 50% ஐக் கொண்டதும் கீழ் மற்றும் மேல் தளங்களுக்கிடையில் எந்தவொரு புள்ளியிலும் குறைந்தபட்ச தெளிவான உயரம் 2.5 மீற்றருக்கு குறைவடையாத உயரத்தைக் கொண்ட ஒரு இடைமாடியினைக் குறிக்கும் என்பதோடு அத்தகைய தளத்திலிருந்து அதன் மேற்தளத்திற்கு (காணப்படுமாயின்) தொடர்பு அற்றதாகக் காணப்படும்.*

**"இயற்கை காற்றோட்டம்"** என்பது வெப்பநிலை அல்லது நீராவி அழுத்தம் வேறுபாடுகளிலிருந்து (அல்லது இரண்டும்) எழும் காற்று, வெளியேற்றும் வெப்பமண்டல விளைவுகள் காரணமாக ஒரு கட்டிடத்திற்கு வெளியில் உள்ள காற்றை கட்டிடத்தின் உள்ளேயும் கட்டிடத்தின் உள்ளே காணப்படும் காற்றை கட்டிடத்தின் வெளியேயும் சாளரத்தின் வழியாகவும் அல்லது ஏனைய திறந்த இடைவெளிகள் வழியாகவும் ஏற்படுத்தும் செயலாகும்

**"நிகர தளப்பரப்பு/ தேறிய தளப்பரப்பு"** என்பது சுழற்சிகள் மற்றும் பயன்பாடுகளுக்கான இடங்களைத் தவிர்த்த மொத்த தள பரப்பளவாகும்.

**"திறந்தவெளி"** என்பது குறித்த ஒரு தளத்தின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்கும், வான் நோக்கி திறக்கப்பட்ட ஒரு பகுதி ஆகும்.

**"உரிமையாளர்"** என்பது உள்ளூராட்சி அதிகாரசபையின் மதிப்பீட்டு பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் தகுந்த ஆவணங்கள் மூலம் குறித்த ஒரு சொத்துக்கான தமது தலைப்பு / உரிமையை நிரூபிக்க வல்ல எந்தவொரு தனிநபரும் ஆவார்.

**"பகுதி சுவர்"** என்பது ஒரு கட்டடத்தின் ஒரு பகுதியை உருவாக்கும் ஒரு சுவர் மற்றும் அதன் உயரம் அல்லது நீளத்தின் எந்தப் பகுதியையும் வெவ்வேறு உரிமையாளர்களுக்கு சொந்தமான அருகிலுள்ள கட்டடங்கள், நிலங்கள் அல்லது கட்டடத்தின் ஒரு பகுதியைப் பிரிக்கப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது கட்டமைக்கப்படுகின்ற ஒரு சுவரைக் குறிக்கும்.

**"அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு"** என்பது தளங்களின் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் குறித்த ஒரு கட்டுமான அபிவிருத்திக்காக அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தளப்பரப்பு ஆகும்.

**"மாற்றுத் திறனாளிகள்"** என்பது எந்தவொரு நபரும், பிறப்பாலோ அல்லது பிறவற்றாலோ அவரது உடல் அல்லது மன திறன்களில் ஏற்பட்ட ஏதேனும் குறைபாட்டின் விளைவாக, தனது வாழ்க்கையின் தேவைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையைக் குறிக்கும்.

**"திட்டமிடல் குழு"** என்பது சட்டத்தின் பிரிவு 8 (ஆ) கீழ் நியமிக்கப்பட்ட குழுவாகும்.

**"நில மூடுகை"** என்பது குறித்த ஒரு கட்டடத்தின் மொத்த அடிப்பீட பகுதிக்கும், கட்டடம் அமையப்பெற்ற காணித்துண்டின் நிலப்பரப்பிற்கும் இடையிலான விகிதாசார தொடர்புநிலையாகும். இவ் நில மூடுகை கணிப்பிடப்படும்போது ஒரு கட்டடத்தினதோ அல்லது அதன் ஒரு பகுதியிலோ அமையப்பெற்றிருக்கும் கூரை மற்றும் மேல்மாடம் என்பன 1.2 மீற்றரை விட கூடுதலான அகலத்தில் காணப்படுமாயின் அக் கூடுதலான பகுதி "நில மூடுகை" கணிப்பின் போது உள்ளடக்கப்படல் வேண்டும்.

**"பிரேரிக்கப்பட்ட வீதி அகலம்"** என்பது தற்போதுள்ள வீதி ஒன்றானது, வர்த்தமானப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் பிரேரிக்கப்பட்டதற்கு அமைய அகலப்படுத்துதலுக்கு உட்படுத்தப்பட்ட பின்பு கொண்டிருக்கும் எதிர்கால அகலத்தைக் குறிக்கும்.

**"பொது கட்டடம்"** என்பது பொது வழிபாடு நடைபெறும் இடங்கள், கற்பித்தல் செயற்பாடுகள், பொழுதுபோக்கு, கூட்டங்கள், வர்த்தக மையங்கள், மருத்துவ நிறுவனங்கள் அல்லது தனியார் மருத்துவமனைகள் அல்லது அரச/ தனியார் அலுவலகங்கள் போன்ற விடயங்களுக்கு பயன்படுத்த அல்லது கட்டமைக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட ஒரு கட்டடம் அல்லது பகுதியைக் குறிக்கும்.

**"பொது வீதி"** என்பது குறித்த ஒரு சட்டத்தின் கீழ் அல்லது சட்ட செயற்பாட்டின் கீழ் தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபைகள் செயல்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதும் வடிகால் அல்லது நடைபாதைகளை உள்ளடக்கியதும், பொது மக்களுக்கான பாவிப்புரித்தைக் கொண்ட எந்தவொரு வீதியையும் குறிக்கும்.

**"தொடர்புடைய அதிகாரசபை"** என்பது நகர அபிவிருத்தி அதிகார சபையால் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 23 (5) இன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்தும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் என்பதைக் குறிக்கும்.

**"தொடர்புடைய நிறுவனம்"** என்பது குறிப்பிட்ட துறைக்காக, சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அரசாங்கம் அல்லது நிறுவனத்தை குறிக்கும்.

***"தகுதிவாய்ந்த நபர்"*** *என்பது குறிப்பிட்ட துறையில் தனது தொழில்முறை தகுதியைப் பெற்ற எந்தவொரு நபரும் -*

i. ***"பட்டயக் கட்டடக் கலைஞர்/ கட்டடக் கலைஞர்/ கட்டடக்கலை உரிமம் பெற்றவர்"*** *- என்பது 1976 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை கட்டடக் கலைஞர்கள் நிறுவனச் சட்டம் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க திருத்தச் சட்ட விதிகளின்படி கட்டடக் கலைஞர்கள் பதிவு நிறுவகத்தில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு நபரும்*

ii. ***"நிலத்தோற்ற கட்டடக் கலைஞர்"*** *- என்பது இலங்கை நிலத்தோற்ற கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் கூட்டங்கத்துவம் பெற்ற எந்தவொரு நபரையும் குறிக்கும்*

iii. ***"சம்பந்தப்பட்ட துறைக்கான தகுதிவாய்ந்த பொறியியலாளர்"*** *- 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் சபையில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு நபரும்*

iv. ***"பதிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர்"*** *என்பது 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சபைச் சட்டத்தின் படி இலங்கை நில அளவையாளர் நாயகத்தினால் இயற்றப்பட்ட நில அளவைச் சபையின் கீழ் நடைமுறைப்படுத்திடுவதற்கென பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு தனி நபரும் ஆவார்.*

v. ***"நகர திட்டமிடலாளர்"*** *என்பது 1986 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை நகர திட்டமிடலாளர் நிறுவன (ஒருங்கிணைந்த) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை நகர திட்டமிடலாளர் நிறுவகத்தின் ஒரு கூட்டு அங்கத்தவர் ஆவார்.*

vi. ***"மதிப்பீட்டாளர்"*** *என்பது 1975 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கைச் மதிப்பீட்டாளர் நிறுவக சட்டப்பிரிவின் மற்றும் 2019 ம் ஆண்டின் 9 ம் இலக்க திருத்தங்களின் கீழும் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் கூட்டு அங்கத்தவர் ஆவார்*

vii. *கட்டுமானத் துறையில் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த நபரும் (அட்டவணை 3 இன் படி)*

***"மத ஸ்தலங்கள்/ வணக்க தலங்கள்"*** *என்பது பொது வழிபாடு அல்லது மத சடங்குகள் தொடர்ச்சியாகவோ அல்லது எப்போதாவதோ நிகழ்த்தப்படும் தேவாலயம், மசூதி, கோவில் அல்லது ஏனைய மத வழிபாட்டு ஸ்தலங்கள் போன்ற பயன்பாடுகளுக்காக கட்டப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட, வரையறுக்கப்பட்ட அல்லது மூடப்பட்ட ஒரு இடமாகும்.*

***"குடியிருப்பு கட்டடம்"*** *என்பது மனித வாழ்விடத்திற்காக வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும் பிரிக்கப்பட்ட, பகுதியளவில் பிரிக்கப்பட்ட அல்லது மாடிவீடு அல்லது அடுக்குமாடி குடியிருப்பு போன்றவற்றை உள்ளடக்குவதும், கட்டடம் அல்லது அதன் பகுதியில் வாழ்பவர்களின் வாழ்க்கையை அனுபவிக்கும் நோக்கம் கொண்ட எந்தவொரு மூடப்பட்ட கட்டமைப்புகளையும் குறிக்கும்.*

***"குடியிருப்பு அலகு"*** *என்பது சமையலறை, படுக்கையறை, குளியலறை அல்லது கழிப்பறை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு குடியிருப்பு அலகு ஆகும்.*

***"நிலைச் சுவர்"*** *என்பது குறித்த காணித்துண்டின் சாய்வை உறுதிப்படுத்த அல்லது செங்குத்தான சரிவில் மண் அடுக்கின் சிதைவைத் தடுக்க கட்டப்பட்ட ஒரு பாதுகாப்புச் சுவரைக் குறிக்கும்.*

***"அறை"*** *என்பது சுவர்கள் அல்லது பகிர்வுகளால் சூழப்பட்டுள்ள கட்டடத்தின் ஒரு பகுதியை குறிக்கும்.*

***"கழிவுநீர்"*** *என்பது நீர் கசடு மற்றும் வர்த்தக கழிவுகளை உள்ளடக்கிய எந்தவொரு கழிவுநீர் அல்லது திரவ கழிவுகளையும் குறிக்கிறது.*

***"வீதி எல்லைக் கோடு"*** *என்பது, ஏற்கனவே அமையப்பெற்ற குறித்த ஒரு வீதியின் எதிர்கால அகலத்தை குறிக்கும் வகையில் குறித்த வீதியின் ஒரு அல்லது இரு பக்கங்களிலும் வரையறுக்கப்பட்ட கோடு அல்லது குறித்த மாநகர சபையால் அனுமதிக்கப்பட்ட குறித்த வீதிக்கான எதிர்கால அகலத்தைக் குறிக்கும்.*

"**தற்காலிக கட்டிடம்**" என்பது குறித்த அதிகாரசபையால் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு அனுமதிக்கப்பட்ட ஒரு கட்டடத்தைக் குறிக்கும். மற்றும் குறித்த கால முடிவில் கட்டடம் அழிக்கப்படலாம்.

"**மாடி வீடு**" என்பது தனி குடியிருப்பு அலகாக வடிவமைக்கப்பட்ட மற்றும் அத்தகைய குடியிருப்பு கட்டடங்களின் மூன்றுக்கு குறையாத ஒரு வரிசை அல்லது மொட்டை மாடியின் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

"**நகர அபிவிருத்தி பகுதி**" என்பது சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதே பொருளைக் கொண்டுள்ளது.

"**விராந்தை வழி**" என்பது குறித்த ஒரு வீதியின் ஓரத்தில் காணப்படும் மூடப்பட்ட ஒரு நடைபாதை என்பதைக் குறிக்கும்.

"**பண்டகச்சாலை**" என்பது மூலப்பொருட்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்கு முன்னர் சேமிக்கப்படக்கூடிய பெரிய கட்டடம் என்பதைக் குறிக்கும்.

"**கழிவு நீர்**" என்பது சுகாதார வசதிகள், குளியலறை அல்லது உணவு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கொள்கலன்களை கழுவதற்கான உபகரணங்களிலிருந்து வெளியேற்றப்படும் அழுக்கு நீர், சமைத்தல் அல்லது கழுவுதல் போன்ற செயல்பாடுகளிலிருந்து வெளிவரும் அழுக்கு நீரை உள்ளடக்குவதாகும். இது கூரைகளிலிருந்து நீர்த்தாரை மூலம் குழாய்களில் சேகரிக்கப்படும் மழைநீர் மற்றும் மழைக் காலத்தில் உருவாகும் மேற்பரப்பு நீர் ஓட்டம் போன்றவற்றை உள்ளடக்காது.

"**வலயக் காரணி**" என்பது அபிவிருத்தி செய்யக்கூடிய நிலங்கள் மற்றும் உள்கட்டமைப்பின் பயன்பாட்டை மேம்படுத்த அபிவிருத்திக்கு வழிகாட்டும் ஒரு கருவியாகும் என்பதோடு அபிவிருத்தித் திட்டத்தில் திட்டமிடப்பட்டதற்கிணங்க பௌதீக சூழல் மற்றும் அபிவிருத்தி அடர்த்தியின் பரம்பல் என்பவற்றை ஒழுங்குபடுத்தவும் இது பயன்படுகின்றது. வலய காரணியானது ஒரு வலயத்தின் எதிர்பார்க்கப்பட்ட மொத்த தரைப் பகுதிக்கும் அதன் மொத்த கட்டக்கூடிய நிலப்பரப்பிற்கும் இடையிலான விகிதமாக கணக்கிடப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட வலயத்தின் எதிர்கால கட்டப்பட்ட அடர்த்தியின் அறிகுறியாகும்.

**அட்டவணை 01 - படிவம் "அ"**

[ஒழுங்குவிதி 1, 3, 4, 19, 28, 30, 44, 5, 81, 89, 93]

பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசிற்கான விண்ணப்பம்

மேற்கோள் இலக்கம் :.............................................................

உரிமையாளரின் சுய விபரங்கள்

பெயர் :..........................................................................................

மின்னஞ்சல் :..................................................................................

தே. அ. அ. இல./ கடவுச்சீட்டு இலக்கம் :.................................

தொடர்பு இலக்கம் :.......................................................................

மேலதிக தொலைபேசி இலக்கம் :.................................................

முகவரி :..........................................................................................

விண்ணப்பத்தின் விபரங்கள்

உள்ளூராட்சி அதிகாரசபை :.................................................

QR Code

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

01. பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் சுருக்கம்

1.1 பிரேரிக்கப்பட்ட தள அபிவிருத்தி

- முதலீட்டுச் சபைக்குரிய திட்டங்கள்
- வதிவிடம்
- வர்த்தகம்
- கலப்பு அபிவிருத்தி
- விளையாட்டு கட்டட தொகுதிகள்
- நீர் முகப்பு அபிவிருத்திகள்
- மிதக்கும் கட்டமைப்புகள் / நீர் சார் விடுதிகள்
- இணைப்புகள் (பாலங்கள்)
- சர்வதேச பாடசாலைகள்
- தேசிய திட்டங்கள்
- பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடான திட்டங்கள்
- காணி உபபிரிவிடுகை
- தொழிற்சாலைகள்
- அகழ்வு மாற்று சுரங்க நடவடிக்கைகள்
- ஏனைய திட்டங்கள்
- கோபுரங்கள் கட்டுமானங்கள் (நீர்/ தொடர்பாடல்/ உணர்கொம்பு)

வேறு ஏதேனும் இருப்பின், தயவுசெய்து குறிப்பிடுக.

1.2 மதிப்பீட்டு இலக்கம்

1.3 வீதியின் பெயர்

1.4 கிராம சேவகர் பிரிவின் பெயர் (கி.சே. பி)

1.5 உள்ளூராட்சி அதிகார சபையின் பெயர்

1.6 அபிவிருத்திக்காக பிரேரிக்கப்பட்ட தளத்தின் முகவரி

1.7 காணி உரிமத்தின் வகை

- உறுதிக் காணி
- குத்தகை
- ஏனையவை

வேறு ஏதேனும் இருப்பின், தயவு செய்து குறிப்பிடுக

உறுதி/ உரிமைச் சான்றிதழை இணைக்க

1.8 தற்போதைய காணிப்பயன்பாடு

- வெற்றுக்காணி
- வர்த்தகம்
- கைத்தொழில் மற்றும் பட்டறைகள்
- வதிவிட
- அரசாங்க அலுவலகம்
- பண்டகசாலைகள்
- மாடிக்குடியிருப்பு
- ஏனைய அலுவலகம்
- ஏனையவை
- வதிவிடம் - தனிப்பட்ட வீடு
- உணவகங்கள், விடுதிகள்
- பண்டகசாலைகள்

1.9 இல் குறிப்பிடப்பட்டுள்ள பயன்பாட்டைக் குறிப்பிடவும்.

02. விண்ணப்பதாரரின்/ விண்ணப்பதாரர்களின் விபரங்கள்

மதிப்பிற்குரிய

- வண
- திரு.
- திருமதி
- செல்வி

2.1 விண்ணபதாரரின் முழுப்பெயர்

2.2 தே. அ. அ. இல. :

தே. அ. அ. பிரதியை இணைக்கவும்.

2.3 தொலைபேசி இலக்கம்

கையடக்க தொலைபேசி இலக்கம்

2.4 தொலைநகல் இலக்கம்

2.5 மின்னஞ்சல் முகவரி

2.6 தபால் முகவரி

ஏனைய விண்ணப்பதாரர்களின் விபரங்கள்

| விண்ணப்பதாரரின் பெயர் | தே. அ. அ. இலக்கம் | முகவரி | தொடர்பு இலக்கம் | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |
| 03 | | | | |

2.7 விண்ணப்பதாரர் வணிக கம்பனி அல்லது ஒன்றியமாக இருப்பின், பெ. சே. வ. (VAT) பதிவு இலக்கம்

விண்ணப்பதாரர் ஒரு வணிக கம்பனி அல்லது பிற நிறுவனமாக இருந்தால் வணிக பதிவுச் சான்றிதழை இணைக்கவும்.

2.8 விண்ணப்பதாரியின் (கள்) பிரகடனத்தை இணைக்கவும்.

2.9 அபிவிருத்திக்காக பிரேரிக்கப்பட்ட காணியானது விண்ணப்பதாருக்கு உரித்தானதா?

◦ ஆம் ◦ இல்லை

விண்ணப்பதாரருக்கு காணி உரித்தாகாவிடத்து, காணி உரிமையாளரின் விபரங்கள்

மதிப்பிற்குரிய

◦ வண ◦ திரு. ◦ திருமதி ◦ செல்வி

2.9.1 முழுப்பெயர்

2.9.2 தே. அ. அ. இலக்கம்

தேசிய அடையாள அட்டையின் பிரதியை இணைக்கவும்.

2.9.3 தொலைபேசி இலக்கம்

2.9.4 தொலைநகல் இலக்கம்

2.9.5 மின்னஞ்சல் முகவரி

2.9.6 தபால் முகவரி

2.10 உரிமையாளரின் பிரகடனத்தை இணைக்கவும்.

*3.0 அணுகுவழி/ களின் விபரங்கள்*

*3.1* தளத்தின் அமைவிட வரைபடத்தை இணைக்கவும். (பிரதான நகரம், சந்தி, பிரதான வீதியிலிருந்து காணிக்கான அணுகு வழி, அயலாதனங்கள் மற்றும் விசேட அடையாளங்கள் போன்றவற்றை குறித்துக்காட்டும் வகையிலான குறித்த அமைவிடத்தின் மாதிரி வரைபடமொன்றை தயவுசெய்து சமர்ப்பிக்கவும்.)

*3.2* பிரதான வீதி / அணுகல் வீதியின் உரிமம்

- ○ பொது
- ○ தனியார்

*3.3* வீதியின்/ அணுகல் வீதியின் பௌதீக அகலம் (மீ)

*4.0 அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவுள்ள காணி பற்றிய விபரங்கள்*

*4.1* நில அளவைப்பட இலக்கம்

*4.2* நில அளவையிடப்பட்ட திகதி

*4.3* காணித்துண்டுகளின் மொத்த எண்ணிக்கை

*4.4* ஏக்கர், றூட் மற்றும் பேர்சஸ் போன்ற அளவீடுகளில் காணியின் மொத்த விஸ்தீரணம் (உ. தா -2ஏ 3றூ 3பே)

*4.5* அபிவிருத்தி செய்யப்படவுள்ள தளத்திற்கான காணித்துண்டு இலக்கம்

*4.6* நில அளவை வரைபடத்தினை இணைக்கவும் (1:10,000 என்ற அளவீட்டிற்கு குறையாமல்)

*4.7* தளத்திற்கான வீதி முகப்பின் அகலம் மீற்றரில்

*4.8 தளத்தில் தற்போது ஏதேனும் கட்டடங்கள் காணப்படுகின்றதா?*

- ஆம்
- இல்லை

ஆம் எனில், தற்போதுள்ள கட்டடங்களின் விபரங்கள் :

*4.8.1 கட்டடங்களின் எண்ணிக்கை*

| |
|---|
| |

*4.8.2 மாடிகளின் எண்ணிக்கை*

| |
|---|
| |

*4.8.3 உயர்ந்தபட்ச உயரம்*

| |
|---|
| |

*4.8.4 தேறிய தளப்பரப்பு (ச.மீ)*

| |
|---|
| |

*4.9 தற்போதுள்ள கட்டடத்தின் அனுமதிக்கப்பட்ட கட்டட வரைபடம் மற்றும் அமைவுச் சான்றிதழை இணைக்கவும் (பொருத்தமாயின்.)*

5.0 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி பற்றிய விபரங்கள்

5.1 பிரேரிக்கப்பட்ட தளமானது நிரப்பப்பட்டு உயர்த்தப்படவுள்ளதா?

- ஆம்
- இல்லை

5.2 ஆம் எனில், முன்மொழியப்பட்ட வீதிகள் மற்றும் வடிகால்கள் தொடர்பாக அத்தகைய பிரேரணையின் விபரங்களை வழங்கவும்.

5.3 தள அபிவிருத்தி தொடர்பான வரைபடங்கள்/ பிரேரணைகளை இணைக்கவும் (பொருத்தமாயின்).

5.4 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி பற்றிய விபரங்கள். (நிலைய வரைபடங்கள் மற்றும் தோற்றப்படங்களுடன் சுருக்கமான விளக்கமொன்றை வழங்கவும்.)

5.5 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி தொடர்பான வரைபடங்கள்/ திட்டங்களை இணைக்கவும் (பொருந்துமாயின்).

5.6 கட்டடத்தின் தேறிய தளப்பரப்பு (ச.மீ)

5.7 பிரேரிக்கப்பட்ட கட்டடத்தின் மாடிகளின் எண்ணிக்கை

5.8 ஒவ்வொரு மாடிகளினதும் பயன்பாடுகளுக்கான தளப்பரப்பு அட்டவணையை இணைக்கவும்.

5.9 பிரேரிக்கப்பட்ட தளப்பரப்பு விகிதம் (FAR) (=அனைத்து கட்டடங்களின் தேறிய தளப்பரப்பு/அமையநில விஸ்தீரணம்)

5.10 பிரேரிக்கப்பட்ட காணித்துண்டு மேவுகை [(= தரைமட்ட தளப்பரப்பு/ அமையநில விஸ்தீரணம்) *100]

5.11 தகுதிவாய்ந்த நபரால் உறுதிப்படுத்தப்பட்ட செயற்றிட்டத்திற்கான தற்காலிக செலவு மதிப்பீட்டறிக்கையை இணைக்கவும் (பொருத்தமாயின்).

**6.0 உள்கட்டமைப்பு வசதிக்கான கிடைப்பனவு**

6.1 தளத்திற்கான நீர் கிடைப்பனவு தொடர்பாக விவரிக்கவும்.

6.2 திண்மக் கழிவு அகற்றல் ஏற்பாடுகள் பற்றி விவரிக்கவும்.

6.3 சாக்கடை/ கழிவுநீர் அகற்றல் வசதிகளின் கிடைப்பனவு பற்றி விவரிக்கவும்.

6.4 பிரேரிக்கப்பட்ட தளத்திற்கு தேசிய மின்சார தொகுதியிலிருந்து சேவை வழங்க முடியுமா?

- ஆம்
- இல்லை

6.5 வழங்கப்பட்ட மகிழுந்து நிறுத்துமிட ஒதுக்கீடுகளின் எண்ணிக்கை

6.6 ஏனைய நிறுத்துமிட ஏற்பாடுகள் (குறிப்பிடுக)

7.0 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்திக்கான காணி உபபிரிவிடுகை/ ஒருங்கிணைப்பு/ அபிவிருத்தி பற்றிய விபரங்கள்

7.1 உபபிரிவிடுகைக்கு உட்படுத்தப்படவுள்ள பிரேரிக்கப்பட்ட காணியின் மொத்த விஸ்தீரணம் (பேர்ச்சஸ்)

7.2 பிரேரிக்கப்பட்ட பயன்பாடு

- வதிவிடம் (அடுக்குமாடி குடியிருப்புகள்)
- வதிவிடம் (தனிவீடுகள்)
- வர்த்தகம் - தயவுசெய்து குறிப்பிடுக
- அலுவலகங்கள்
- உணவகங்கள்/விடுதிகள்
- கைத்தொழில்கள் மற்றும் பட்டறைகள்
- பண்டகசாலைகள்
- ஏனையவை

7.2 இல் குறிப்பிடப்பட்ட பயன்பாட்டைத் தயவுசெய்து வரையறுக்க.

7.3 பிரேரிக்கப்பட்ட பயன்பாடுகளை உள்ளடக்கிய காணித்துண்டுகளின் அட்டவணையை இணைக்க.

7.4 உபபிரிவிடுகை செய்யப்படவுள்ள காணித்துண்டுகளின் மொத்த எண்ணிக்கை

8.0 மேலதிக விபரங்கள்

8.1 ஆவண சரிபார்ப்பு பட்டியலை இணைக்கவும்.

9.0 விண்ணப்பத்திற்கான கட்டணப் பகுதி

9.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி

9.1 செலுத்தப்பட்ட தொகை (இலங்கை ரூபா)

9.2 கட்டணம் செலுத்திய மூலம்

கட்டண பற்றுச்சீட்டை இணைக்கவும்.

9.3 கிளை

**அட்டவணை 1- படிவம் அ - பின்னிணைப்பு I**

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு**
**விண்ணப்பதாரரின் பிரகடனப்படிவம்**

**மேற்கோள் இலக்கம்**

பூ. தி. சி./............./............./............./............./

**பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி பற்றிய விபரங்கள்**

| | |
|---|---|
| பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் வகை | |
| பகுதியின் முகவரி | |
| மதிப்பீட்டு இலக்கம் | |

(விண்ணப்பதாரர் வணிக நிறுவனம் அல்லது ஒன்றியமாக இருப்பின், விண்ணப்பபடிவமானது பொது முத்திரையின் கீழ் பணிப்பாளர் அல்லது அதிகாரம் பெற்றவரால் கையொப்பம் இடப்படல் வேண்டும்.)

நான்/நாங்கள் இத்தால் உறுதியளிப்பது,

- என்னால்/ எங்களால் இங்கு வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை.
- விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரைபடங்களும் மற்றும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட திகதியே விண்ணப்பத்திற்கான செல்லுபடியாகும் திகதி என்பதை நான்/ நாங்கள் புரிந்துகொள்கிறேன்/றோம்.
- முழுமையற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது பதிவு செய்யப்படவோ மாட்டாது என்பதை நான்/ நாங்கள் புரிந்துகொள்கிறேன்/றோம்.
- விண்ணப்பத்தின் தீர்மானத்தை தடுக்கும் வகையிலான ஏதேனும் பிரதான குறைபாடுகள் காணப்படுமிடத்து அவை 8 நாட்களுக்குள் எனக்கு/எமக்கு அறியத்தரப்படும் என்பதை நான்/நாங்கள் அறிவேன்/வோம்.
- என்னால்/ எங்களால் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால்/ உள்ளூராட்சி அதிகாரசபையால் தவறானதென கண்டறியப்படுமிடத்து அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது இரத்துச் செய்யப்படும் என்பதை நான்/ நாங்கள் அறிவேன்/ வோம்.

என்னால்/ எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடங்கள் பின்வரும் தொடர்புடைய தகைமைபெற்ற நபரால் தயாரிக்கப்பட்டது என்பதை நான்/ நாங்கள் இத்தால் உறுதி செய்கின்றேன்/ றோம்.

| | |
|---|---|
| நகர திட்டமிடலாளரின் பெயர் | |
| கட்டடக்கலைஞரின் பெயர் | |
| நில அளவையாளரின் பெயர் | |

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரியின்/ களின் பெயர் | 1. | 2. |
| தேசிய அடையாள அட்டை இல. | 1. | 2. |
| விண்ணப்பதாரியின்/ களின் கையொப்பம் | 1. | 2. |
| திகதி | 1. | 2. |

| | | | | |
|---|---|---|---|---|
| அபிவிருத்திக்காக பிரேரிக்கப்பட்ட காணியானது விண்ணப்பதாரருக்கு உரித்தானதா? | ஆம் | | இல்லை | |

**அட்டவணை 1**

**படிவம் அ - பின்னிணைப்பு II**

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு**
**விண்ணப்பதாரரின் பிரகடனப் படிவம்**

மேற்கோள் இலக்கம்

பூ. தி. சி./............./............./............./............./

**பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் விண்ணப்பதாரர் அல்லது அவரின் முகவர் பற்றிய விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| விண்ணப்பதாரியின் பெயர் | | | |
| தேசிய அடையாள அட்டை இல. | | தொலைபேசி இல. : | |
| பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் வகை | | | |
| பகுதியின் முகவரி | | | |
| மதிப்பீட்டு இலக்கம். | | | |

(விண்ணப்பதாரர் காணி உரிமையாளர் அல்லாவிடத்து, காணி உரிமையாளரால் இப்பிரகடனம் ஒப்பமிடப்படல் வேண்டும்.)
நான்/நாங்கள் இத்தால் உறுதியளிப்பது,

☐ அபிவிருத்தியாளர் கட்டடத்தை நிர்மாணிக்க விரும்பும் காணியின் முற்றுமுழுமையான உரிமையாளர்/ குத்தகையாளர் நான்/நாங்கள்.

☐ நீதவான்/ மா.நீ. நீதிபதி/ பிரசித்த நொத்தாரிசு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உரிமை/ குத்தைக்கான பொருத்தமான ஆவணங்களின் பிரதிகளை இதன்சார்பாக நான்/நாங்கள் உள்ளடக்குகின்றேன்/ றோம்.

☐ எனது காணியில் மேற்குறிப்பிட்ட அபிவிருத்தியினை மேற்கொள்ள நான்/நாங்கள் எனது/ எமது சட்ட அதிகாரத்தை அளித்துள்ளேன்/ ளோம்.

☐ என்னால்/ எங்களால் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால்/ உள்ளூராட்சி அதிகாரசபையால் தவறானதென கண்டறியப்படுமிடத்து அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது இரத்துச் செய்யப்படும் என்பதை நான்/ நாங்கள் அறிவேன்/ வோம்.

என்னால்/ எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடங்கள் பின்வரும் தொடர்புடைய தகைமைபெற்ற நபரால் தயாரிக்கப்பட்டது என்பதை நான்/ நாங்கள் இத்தால் உறுதி செய்கின்றேன்/ றோம்.

| | |
|---|---|
| நகர திட்டமிடலாளரின் பெயர் | |
| கட்டடக்கலைஞரின் அல்லது வேறு தகைமை பெற்ற நபரின் பெயர் | |
| நில அளவையாளரின் பெயர் | |

| | | |
|---|---|---|
| உரிமையாளரின்/ களின் பெயர் | 1. | 2. |
| தேசிய அடையாள அட்டை இல. | 1. | 2. |
| உரிமையாளரின்/ களின் ஒப்பம் | 1. | 2. |
| திகதி | 1. | 2. |

**அட்டவணை 01**

**படிவம் "ஆ"**

**காணி உப பிரிவிடுகை/ ஒருங்கிணைப்பு/ அபிவிருத்திக்கான விண்ணப்பம்**

மேற்கோள் இலக்கம் :........................................................

**உரிமையாளரின் சுய விபரங்கள்**

பெயர் :........................................................................................

மின்னஞ்சல் :...............................................................................

தே. அ. அ. இல./ கடவுச்சீட்டு இலக்கம் :................................

தொடர்பு இலக்கம் :......................................................................

மேலதிக தொலைபேசி இலக்கம் :...............................................

முகவரி :........................................................................................

**விண்ணப்பத்தின் விபரங்கள்**

உள்ளூராட்சி அதிகார சபை :..............................................

| QR Code |
|---|

*அலுவலக பாவனைக்கு மாத்திரம்*

---

01. பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி பற்றிய சுருக்கம்

1.1 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் வகை

o சுற்றளவுத் திட்டம் o பிரித்தெடுத்தல் o உப பிரிவிடுகை o ஒருங்கிணைத்தல்

வேறு ஏதேனுமெனில், தயவுசெய்து வரையறுக்க.

| |
|---|
| |

1.2 பிரேரிக்கப்பட்ட பயன்பாடு

o வதிவிடம் (அடுக்குமாடி குடியிருப்புகள்)
o வதிவிடம் (தனிவீடுகள்)
o வர்த்தகம்
o அலுவலகங்கள்
o உணவகங்கள்/ விடுதிகள்
o கைத்தொழில்கள் & பட்டறைகள்
o பண்டகசாலைகள்
o ஏனையவை

1.2 இல் குறிப்பிடப்பட்ட பயன்பாட்டை வரையறுக்க.

| |
|---|
| |

1.3 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி தளத்திற்கான முந்தைய அனுமதிக்கப்பட்ட வரைபட இலக்கம் (பொருத்தமாயின்).

| |
|---|
| |

முந்தைய அனுமதிக்கப்பட்ட வரைபடத்தினை இணைக்கவும்.

1.4 மதிப்பீட்டு இலக்கம்

| |
|---|
| |

1.5 வீதியின் பெயர்

| |
|---|
| |

1.6 கிராம சேவகர் பிரிவின் பெயர் (கி.சே.பி)

1.7 உள்ளூராட்சி அதிகாரசபையின் பெயர்

1.8 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி தளத்தின் முகவரி

1.9 காணியின் உரிமம்

o உறுதிக் காணி o குத்தகை o ஏனையவை

வேறு ஏதேனும் எனில், தயவுசெய்து குறிப்பிடுக.

1.10 உறுதி/ உரிமைச் சான்றிதழை இணைக்க

1.11 பிரேரிக்கப்பட்ட பகுதிக்கான கிடைக்கக்கூடிய மதிப்பீட்டு சிபாரிசு இருப்பின்?

o ஆம் o இல்லை

1.11.1 ஆம் எனில், மதிப்பீட்டு சிபாரிசுக்கென வழங்கப்பட்ட பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி

1.11.2 மதிப்பீட்டு சிபாரிசு பற்றுச் சீட்டினை இணைக்க.

02. விண்ணப்பதாரி/தாரர்கள் பற்றிய விபரம்
மதிப்பிற்குரிய

o வண o திரு o திருமதி o செல்வி

2.1 விண்ணப்பதாரியின் முழுப்பெயர்

2.2 தே.அ.அ. இலக்கம்

தே.அ.அ யின் நிழற்படப் பிரதியொன்றை இணைக்க.

2.3 தொலைபேசி இலக்கம்

கையடக்க தொலைபேசி இலக்கம்

2.4 தொலைநகல் இலக்கம்

2.5 மின்னஞ்சல் முகவரி

2.6 தபால் முகவரி

ஏனைய விண்ணப்பதாரர்களின் விபரங்கள்

| விண்ணப்பதாரியின் பெயர் | தே.அ.அ.இலக்கம் | முகவரி | தொடர்பிலக்கம் | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |
| 03 | | | | |

2.7 விண்ணப்பதாரர் வணிக கம்பனி அல்லது ஒன்றியமாக இருப்பின், பெ. சே. வ. (VAT) பதிவு. இலக்கம்

விண்ணப்பதாரர் வணிக கம்பனி அல்லது ஏனைய நிறுவனமாக இருப்பின், வணிக பதிவுச் சான்றிதழை இணைக்கவும்.

2.8 விண்ணப்பதாரர்(கள்) பிரகடனத்தை இணைக்கவும்.

2.9 பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி தளமானது விண்ணப்பதாரருக்கு உரித்தானதா?

o ஆம் o இல்லை

விண்ணப்பதாரர் காணி உரிமையாளர் இல்லாவிடத்து, காணி உரிமையாளரின் விபரங்கள் மதிப்பிற்குரிய

o வண. o திரு. o திருமதி o செல்வி

2.9.1 முழுப்பெயர்

2.9.2 தே.அ.அ. இலக்கம்

தே.அ. அ இன் நிழற்படப் பிரதியொன்றை இணைக்க.

2.9.3 தொலைபேசி இலக்கம்

2.9.4 தொலைநகல் இலக்கம்

2.9.5 மின்னஞ்சல் முகவரி

2.9.6 தபால் முகவரி

உரிமையாளரின் தே.அ. அ பிரதியொன்றை இணைக்கவும் (பொருத்தமாயின்)

2.10 உரிமையாளரின் பிரகடனத்தை இணைக்கவும்.

3.0 அணுகுவழி/ கள் பற்றிய விபரங்கள்

3.1 தளத்தின் அமைவிட வரைபடத்தை இணைக்கவும். (பிரதான நகரம், சந்தி, பிரதான வீதியிலிருந்து காணிக்கான அணுகு வழி, அயலாதனங்கள் மற்றும் விசேட அடையாளங்கள் போன்றவற்றை குறித்துக்காட்டும் வகையிலான குறித்த அமைவிடத்தின் மாதிரிப் படமொன்றை/வரைபடமொன்றை தயவுசெய்து சமர்ப்பிக்கவும்.)

3.2 பிரதான வீதி/ அணுகுவழியின் உரிமம்

o பொது    o தனியார்

3.3 வீதியின்/அணுகு வழியின் பௌதீக அகலம் (மீ )

3.4 தனியார் அணுகுவழி எனின், தனியார் அணுகுவழியினால் ஏற்கனவே சேவை வழங்கப்படும் காணி துண்டுகளின் எண்ணிக்கை

04. உப பிரிவிடுகைக்கு/ ஒன்றிணைப்பிற்குட்படுத்தப்படவுள்ள காணி பற்றிய விபரங்கள்

4.1 காணியின் தற்போதைய பயன்பாடு

o வெற்றுக் காணி
o வதிவிடம் (அடுக்குமாடி குடியிருப்புகள்)
o வதிவிடம் (தனிவீடுகள்)
o வர்த்தகம்
o அலுவலகங்கள்
o உணவகங்கள்/ விடுதிகள்
o கைத்தொழில்கள் மற்றும் பட்டறைகள்
o பண்டகசாலைகள்
o ஏனையவை

4.1 இல் குறிப்பிடப்பட்ட பயன்பாட்டை வரையறுக்க.

4.2 பிரேரிக்கப்பட்ட தளத்தில் ஏதேனும் கட்டடங்கள் அமையப்பெற்றுள்ளனவா?

o ஆம் o இல்லை

4.3 அனைத்து தற்போதுள்ள கட்டடங்கள், அழிக்கப்படவுள்ள கட்டடங்கள் ,எல்லைச்சுவர்கள்,வேலிகள் மற்றும் ஏனைய விபரங்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதா?

o ஆம் o இல்லை

4.4 நிலஅளவைப்பட இலக்கம்

4.6 நில அளவையிடப்பட்ட திகதி

4.7 காணித்துண்டுகளின் மொத்த எண்ணிக்கை

4.8 ஏக்கர், றூட் மற்றும் பேர்சஸ் போன்ற அளவீடுகளில் காணியின் மொத்த விஸ்தீரணம் (உ. தா -2ஏ 3றூ 3பே)

4.9 நில அளவைப்படத்தினை இணைக்கவும் (1: 10,000 என்ற அளவீட்டிற்கு குறையாமல்)

5.0 மழைநீர் வடிகாலமைப்பு பற்றிய விபரங்கள்

5.1 பிரேரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி தளத்திற்குள் அல்லது அருகாமையில் ஏதேனும் வடிகாலமைப்பு (ஏதேனும் உள்ளூராட்சி அதிகாரசபைக்கு/ தனியாருக்குச் சொந்தமானது) காணப்படுகின்றதா?

o ஆம் o இல்லை

5.2 ஆம் எனில், அது நிலஅளவைப்படத்தில் காட்டப்பட்டுள்ளதா?

o ஆம் o இல்லை

5.3 மழைநீரை வெளியேற்றுவது தொடர்பான ஏற்பாடுகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

o ஆம் o இல்லை

6.0 உட்கட்டமைப்பு வசதிகள் கிடைப்பனவு

6.1 தளத்திற்கான நீர் கிடைப்பனவு பற்றி விபரிக்கவும்.

6.2 திண்ம கழிவகற்றல் பற்றி விபரிக்கவும்.

6.3 கழிவுநீர் அகற்றல் ஏற்பாடுகள் பற்றி விபரிக்கவும்.

6.4 அபிவிருத்தி தளமானது தேசிய மின்சார தொகுதியூடாக சேவை பெற முடியுமா?

o ஆம் o இல்லை

7.0 தொடர்புடைய நிறுவனத்திடம்/களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட சிபாரிசு/கள், சான்றிதழ்/களின் கிடைப்பனவு

7.1 தொடர்புடைய ஏனைய சிபாரிசு/கள், சான்றிதழ்/ கள் பற்றிய விபரங்கள்

| சிபாரிசு சான்றிதழின் பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

தொடர்புடைய ஏனைய சிபாரிசு/கள், சான்றிதழ்/ களின் பிரதியை இணைக்கவும்.

8.0 தகைமைபெற்ற நபரின் பிரகடனம் - உரிமம் பெற்ற நில அளவையாளர்

8.1 பெயர்

8.2 மின்னஞ்சல் முகவரி

8.3 பிரகடனத்தை இணைக்கவும்

9.0 தகைமைபெற்ற நபரின் பிரகடனம் - நகர திட்டமிடலாளர்

9.1 பெயர்

9.2 மின்னஞ்சல் முகவரி

9.3 பிரகடனத்தை இணைக்கவும்.

10.0 தகைமைபெற்ற நபரின் பிரகடனம் - சிவில் பொறியியலாளர்

10.1 பெயர்

10.2 மின்னஞ்சல் முகவரி

10.3 பிரகடனத்தை இணைக்கவும்

11.0 மேலதிக விபரங்கள்

11.1 ஆவண சரிபார்ப்பு பட்டியலை இணைக்கவும்

12.0 விண்ணப்பத்திற்கான கட்டணப் பகுதி

12.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி

12.2 செலுத்தப்பட்ட தொகை

12.3 கட்டணம் செலுத்திய மூலம்

கட்டண பற்றுச்சீட்டை இணைக்கவும்.

12.4 கிளை

**அட்டவணை 1**

**படிவம் “ஆ” - பின்னிணைப்பு I**

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திக்கான விண்ணப்பம்**
**விண்ணப்பதாரரின் பிரகடனப் படிவம்**

**மேற்கோள் இலக்கம்**

............/............/............/.........../............/.............

**பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி பற்றிய விபரங்கள்**

| | |
|---|---|
| பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் வகை (சுற்றளவு திட்டம், பிரித்தெடுத்தல், உப பிரிவிடுகை, ஒருங்கிணைத்தல்) | |
| பகுதியின் முகவரி | |
| மதிப்பீட்டு இலக்கம் | |

(விண்ணப்பதாரர் வணிக நிறுவனம் அல்லது ஒன்றியமாக இருப்பின், விண்ணப்பபடிவமானது பொது முத்திரையின் கீழ் பணிப்பாளர் அல்லது அதிகாரம் பெற்றவரால் கையொப்பம் இடப்படல் வேண்டும்.)

நான்/ நாங்கள் இத்தால் உறுதியளிப்பது,

☐ என்னால்/ எங்களால் இங்கு வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை.

☐ விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரைபடங்களும் மற்றும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட திகதியே விண்ணப்பத்திற்கான செல்லுபடியாகும் திகதி என்பதை நான்/ நாங்கள் புரிந்துகொள்கிறேன்/ றோம்.

☐ முழுமையற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது பதிவு செய்யப்படவோ மாட்டாது என்பதை நான்/ நாங்கள் புரிந்துகொள்கிறேன்/ றோம்.

☐ விண்ணப்பத்தின் தீர்மானத்தை தடுக்கும் வகையிலான ஏதேனும் பிரதான குறைபாடுகள் காணப்படுமிடத்து அவை 8 நாட்களுக்குள் எனக்கு/ எமக்கு அறியத்தரப்படும் என்பதை நான்/நாங்கள் அறிவேன்/ வோம்.

☐ என்னால்/ எங்களால் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால்/ உள்ளூராட்சி அதிகாரசபையால் தவறானதென கண்டறியப்படுமிடத்து அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது இரத்து செய்யப்படும் என்பதை நான் / நாங்கள் அறிவேன்/ வோம்.

என்னால்/ எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடங்கள் பின்வரும் தொடர்புடைய தகைமைபெற்ற நபரால் தயாரிக்கப்பட்டது என்பதை நான்/ நாங்கள் இத்தால் உறுதி செய்கின்றேன்/ றோம்.

| | |
|---|---|
| நகர திட்டமிடலாளரின் பெயர் | |
| உரிமம்பெற்ற நில அளவையாளரின் பெயர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| விண்ணப்பதாரியின்/ களின் பெயர் | 1. | 2. | | |
| தேசிய அடையாள அட்டை இல. | 1. | 2. | | |
| விண்ணப்பதாரியின்/ களின் கையொப்பம் | 1. | 2. | | |
| திகதி | 1. | 2. | | |
| அபிவிருத்திக்காக பிரேரிக்கப்பட்ட காணியானது விண்ணப்பதாரருக்கு உரித்தானதா? | ஆம் | ☐ | இல்லை | ☐ |

**அட்டவணை 1**

**படிவம் "ஆ" - பின்னிணைப்பு II**

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திக்கான விண்ணப்பம்**
**உரிமம்பெற்ற நில அளவையாளரின் பிரகடனப்படிவம்**

**மேற்கோள் இலக்கம்**

**து. இல.**/............./............./............./............./

(விண்ணப்பதாரர் காணி உரிமையாளர் இல்லாதவிடத்து, காணி உரிமையாளரால் இப்பிரகடனம் ஒப்பமிடப்படல் வேண்டும்.)

**பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் விண்ணப்பதாரர் பற்றிய விபரங்கள்**

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரியின் பெயர் | | |
| | | |
| தேசிய அடையாள அட்டை இல. | | தொலைபேசி இல. : |
| பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் வகை (சுற்றளவு திட்டம், பிரித்தெடுத்தல், உப பிரிவிடுகை, ஒருங்கிணைத்தல்) | | |
| பகுதியின் முகவரி | | |
| மதிப்பீட்டு இலக்கம் | | |

நான்/ நாங்கள் இத்தால் உறுதியளிப்பது,

☐ அபிவிருத்தியாளர் கட்டடத்தை நிர்மாணிக்க விரும்பும் காணியின் முற்றுமுழுமையான உரிமையாளர்/ குத்தகையாளர் நான்/ நாங்கள் ஆவேன்/ வோம்.

☐ நீதவான்/ மா.நீ. நீதிபதி/ பிரசித்த நொத்தாரிசு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உரிமை/ குத்தைக்கான பொருத்தமான ஆவணங்களின் பிரதிகளை இதன்சார்பாக நான்/நாங்கள் உள்ளடக்குகின்றேன்/ றோம்.

☐ எனது காணியில் மேற்குறிப்பிட்ட அபிவிருத்தியினை மேற்கொள்ள நான்/நாங்கள் எனது/ எமது சட்ட அதிகாரத்தை அளித்துள்ளேன்/ ளோம்.

☐ என்னால்/ எங்களால் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால்/ உள்ளூராட்சி அதிகாரசபையால் தவறானதென கண்டறியப்படுமிடத்து அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது இரத்து செய்யப்படும் என்பதை நான்/ நாங்கள் அறிவேன்/வோம்.

என்னால்/ எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடங்கள் பின்வரும் தொடர்புடைய தகைமைபெற்ற நபரால் தயாரிக்கப்பட்டது என்பதை நான்/நாங்கள் இத்தால் உறுதி செய்கின்றேன்/ றோம்.

| | |
|---|---|
| நகர திட்டமிடலாளரின் பெயர் | |
| உரிமம்பெற்ற நில அளவையாளரின் பெயர் | |

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரியின்/ களின் பெயர் | 1. | 2. |
| தேசிய அடையாள அட்டை இல. | 1. | 2. |
| விண்ணப்பதாரியின்/ களின் கையொப்பம் | 1. | 2. |
| திகதி | 1. | 2. |

**அட்டவணை 1**

**படிவம் “ஆ” - பின்னிணைப்பு III**

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**காணி உப பிரிவிடுகை, ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திக்கான விண்ணப்பம்**
**உரிமம்பெற்ற நில அளவையாளரின் பிரகடனப்படிவம்**

**மேற்கோள் இலக்கம்**

| |
|---|
| து. இல./............./............./............./............./ |

**பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் விண்ணப்பதாரர் பற்றிய விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| விண்ணப்பதாரியின் பெயர் | | | |
| | | | |
| தேசிய அடையாள அட்டை இல. | | தொலைபேசி இல. : | |
| பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் வகை (சுற்றளவு திட்டம், பிரித்தெடுத்தல், உப பிரிவிடுகை, ஒருங்கிணைத்தல்) | | | |
| பகுதியின் முகவரி | | | |
| மதிப்பீட்டு இலக்கம் | | | |

நான்/ நாங்கள் இத்தால் உறுதியளிப்பது,

☐ ...................................... இலக்கமுடைய ................................................ திகதியிடப்பட்ட நில அளவைப்படமானது என்னால் தயாரிக்கப்பட்டது என்பதோடு இவ்வரைபடமானது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் உப பிரிவிடுகை ஒழுங்குவிதிகளுக்கு இயைந்திருக்கின்றது.

☐ என்னால் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால்/ உள்ளூராட்சி அதிகாரசபையால் தவறானதென கண்டறியப்படுமிடத்து அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது இரத்து செய்யப்படும் என்பதை நான்/ நாங்கள் அறிவேன்/ வோம்.

| | | | |
|---|---|---|---|
| உரிமம்பெற்ற நில அளவையாளரின் ஒப்பம் | | திகதி | |
| பெயர் | | | |
| மின்னஞ்சல் முகவரி | | தொலைபேசி இல. | |
| தொழில்சார் நிறுவனத்தின் பதிவு இலக்கம் (பொருத்தமாயின்) | | | |
| தபால் முகவரி | | தேசிய அடையாள அட்டை இலக்கம் | |
| முத்திரை | | | |

**அட்டவணை 1**

**படிவம் "ஆ" - பின்னிணைப்பு IV**

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**காணி உப பிரிவிடுகை ஒருங்கிணைப்பு அல்லது அபிவிருத்திக்கான விண்ணப்பம்**
**நகர திட்டமிடலாளரின் பிரகடனப்படிவம்**

**மேற்கோள் இலக்கம்**

து. இ./............./............./............./............./

**பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி பற்றிய விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| விண்ணப்பதாரியின் பெயர் | | | |
| | | | |
| தேசிய அடையாள அட்டை இல. | | தொலைபேசி இல. : | |
| பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் வகை (சுற்றளவு திட்டம், பிரித்தெடுத்தல், உப பிரிவிடுகை, ஒருங்கிணைத்தல்) | | | |
| பகுதியின் முகவரி | | | |
| மதிப்பீட்டு இலக்கம். | | | |

நான்/ நாங்கள் இத்தால் உறுதியளிப்பது,

☐ நான் இலங்கை நகர திட்டமிடலாளர் நிறுவனத்தின் கூட்டு அங்கத்துவத்தையுடைய தகுதிவாய்ந்த நகர திட்டமிடலாளர் ஆவேன்.

☐ நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குவிதிகள் மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களுடன் இவ்வரைபடங்கள் மற்றும் ஆவணங்கள் இயைந்திருப்பதனை நான் சுயமாக பரிசீலித்து உறுதிப்படுத்தியுள்ளேன்.

☐ விண்ணப்பதாரரால் விண்ணப்பப்படிவத்தோடு சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் செல்லுபடித்தன்மையை நான் பரீட்சித்துள்ளேன்.

☐ என்னால் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால்/ உள்ளூராட்சி அதிகாரசபையால் தவறானதென கண்டறியப்படுமிடத்து அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது இரத்து செய்யப்படும் என்பதை நான் அறிவேன.

☐ மனை விற்பனை/ ஆதனத்துறை சந்தையில் விடுவிப்பதற்காக தளமொன்று அபிவிருத்தி செய்யப்படுமாயின், தள அபிவிருத்தி காலப்பகுதியில் அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளும் வரை சுழற்சிமுறையில் மேற்பார்வை செய்வதோடு தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்குவேன்.

